# பொருளியல் நோக்கு


ஆகஸ்ட் 1994

## சுற்றுலாத்துறையும் இலங்கையின் பொருளாதாரமும்




# சுற்றுலாத்துறை


**பயணிகள் எண்ணிக்கை**
**1992 மற்றும் 1993**





**வெளிநாட்டுப் பயணிகள்**
**செலவிட்ட இரவுகள்**
**1993**





**தொழில் வாய்ப்பு**
**1989-1993**




**நேரடி தொழில்வாய்ப்பு**
**1989 - 1993**




**சுற்றுலா விடுதிகளும் தங்குவோர்**
**அளவும் 1989-1993**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**பொருளியல் நோக்கு**

மலர் 20 | இதழ் 5 | ஆகஸ்ட் 1994

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

## உள்ளே

### நிரல்கள்

ரோலண்ட் சில்வா 17 கலாச்சார பாரம்பரியமும் சுற்றுலாத்துறையும்

பிரடெரிக் அபேரத்ன 26 அரிசியில் சுயதேவைப் பூர்த்தியும் உணவுப் பாதுகாப்பும்

### விசேஷ அறிக்கை

#### சுற்றுலாத்துறையும் இலங்கையின் பொருளாதாரமும்

ஜீ. தந்திரிகம 3 சுற்றுலாத்துறையின் பிணைப்புத் தாக்கங்கள்

9 எய்ட்ஸும் சுற்றுலாத்துறையும்

11 ஹிக்கடுவையில் சுற்றுலாத்துறை

13 சுற்றுலாத்துறை தொடர்பான பெருந்திட்டம்

### சிறப்புக் கட்டுரைகள்

ஜே.பீ.கலேகம 18 இலங்கையின் வேளாண்மைத்துறையில் நிலவி வரும் நெருக்கடி

டப்.இந்திரலால் டி சில்வா 29 சுகாதாரப் பராமரிப்பில் குடிப்பெருக்கத்தின் நெருக்குதல்கள்

அட்டைப்படம் : சாந்த கே. ஹேரத்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பவையுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-

# மனித குலத்துக்கு மரபுரிமையாக கிடைத்துள்ள நினைவுச் சின்னங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான " பத்து கட்டளைகள் "

உலகின் மரபுரிமை நினைவிடங்களில் சுற்றுலாத்துறையை முகாமை செய்தல் தொடர்பான செயலமர்வொன்றினை ஐ.நா.வின் சுற்றுச்சூழல் நிகழ்ச்சித்திட்டமும் யுனெஸ்கோவும் இணைந்து, கடந்த நவம்பர் மாதத்தில் செனிகல் நாட்டில், டாக்காரில் ஏற்பாடு செய்திருந்தன. இந்தச் செயலமர்வு, உலகின் பாரம்பரிய நினைவுச் சின்னங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பின்வரும் பத்துக் கட்டளைகளை உருவாக்கியது:

1. சுற்றுலாத்துறை அபிவிருத்தி, ஒவ்வொரு நினைவுச் சின்னத்தினதும் உயிரினவியல் மற்றும் சமூக-கலாச்சார விழுமியங்களை கவனத்தில் எடுத்து, அவற்றுக்கு மதிப்பளிப்பதுடன், உலக பாரம்பரிய கருதுகோளுடன் அனுசரித்துச் செல்வதாகவும் இருந்து வர வேண்டும்.

2. பிராந்திய பின்னணி மற்றும் சுற்றுலாக்கூறு என்பவற்றை கவனத்தில் எடுத்து, ஒரு முகாமைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்: அத்துடன், ஒழுங்கான ஓர் அடிப்படையில் அது புதுப்பிக்கப்படவும் வேண்டும்.

3. பொழுதுபோக்கு மற்றும் வர்த்தக வசதிகள், நடவடிக்கைகள் என்பவற்றுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்னர், அவை எடுத்து வரக்கூடிய கூட்டுமொத்த தாக்கங்களை உள்ளடக்கிய சுற்றுச் சூழல் தாக்கங்கள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

4. கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பொருத்தமான, பிந்திய சுட்டெண்களை அடிப்படையாக கொண்டவையாக இருந்து வருதல் அவசியமாகும்: மேலும், இவற்றின் பெறுபேறுகள், திட்டமிடல் மற்றும் தீர்மானம் எடுக்கும் நிகழ்வுப் போக்கில் கவனத்தில் எடுக்கப்படுதல் அவசியமாகும்.

5. நினைவுச்சின்ன அமைவிடங்களை சூழ வாழும் குடிமக்கள் தமது பாரம்பரிய பிதுரார்ஜிதம் குறித்து பெருமிதமடையும் பொருட்டும், அதேவேளையில், சுற்றுலாத்துறையிலிருந்து பயன்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டும் இவற்றில் பங்கேற்க வேண்டும்.

6. அமைவிடத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்புபடுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்கு, சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் ஈடுபாடு காட்டி வரும் அனைத்துத் தரப்பினருடைய ஒத்துழைப்பும் பெறப்படுதல் வேண்டும்.

7. நினைவுச்சின்ன அமைவிடத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் உலக பாரம்பரிய விழுமியங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். அத்துடன் வருகை தரும் பார்வையாளர்களை சமாளிப்பதில் நன்கு பயிற்றப்பட்டவர்களாகவும் அவர்கள் இருந்து வர வேண்டும்.

8. வருகை தருபவர்களும் உள்ளூர் மக்களும் அமைவிடத்தின் முக்கியத்துவத்தை விளங்கி அதற்கு மதிப்பளிப்பதனை உறுதி செய்யும் பொருட்டு, சம்பந்தப்பட்ட தகவல்களும கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் முன்வைக்கப்படுதல் வேண்டும்.


9. நுழைவுக் கட்டணங்களாக கிடைக்கும் வருமானங்களில் கணிசமான ஒரு பகுதியை, சம்பந்தப்பட்ட அமைவிடத்தின் விருத்திக்கும், பரிபாலனத்துக்குமென நேரடியாக ஒதுக்குதல் வேண்டும்.

10. ஒவ்வொரு அமைவிடமும், பொருத்தமான அனைத்து வழிமுறைகளுக் கூடாகவும், உலக பிதுரார்ஜித கோட்பாட்டினை மேம்படுத்துவதில் பங்கேற்க வேண்டும்.

நன்றி: ஐ.நா. நூலகம், கொழும்பு


பயணிகள் வருகையும் பண வருவாயும்

(1970 - 1993)




பிரதான ஏற்றுமதித்துறைகளின் நிலையில்

ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்கள்




# சுற்றுலாத்துறையும் இலங்கையின் பொருளாதாரமும்

***சுற்றுலாத்துறை, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான அளவிலான பங்களிப்புக்களை வழங்கக்கூடிய உள்ளார்ந்த ஆற்றலைப் பெற்றிருக்கும் ஒரு துறையாகும். அதேவேளையில், சரியான முறையில் நிர்வகிக்கப்படாத சுற்றுலாக் கைத்தொழில் ஒரு புறத்தில், எமது வாழ்க்கை முறை, எமது சமூகம் மற்றும் கலாச்சாரம் என்பவற்றின் மீது மிக மோசமான தாக்கத்தை எடுத்து வர முடியும். மறுபுறத்தில், அதன் விளைவாக, சுற்றுச்சூழலில் பெரும் சீரழிவு நிலை தோன்றும். இந்த நிலையில், பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. சுற்றுலாத்துறை, நீண்டகாலத்தில், இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் பயனுள்ளதாக இருந்து வருகின்றதா? அல்லது தீங்கு பயக்கக்கூடியதாக இருந்து வருகின்றதா ? இந்தக் கைத்தொழிலிலிருந்து கிட்டும் பொருளாதார ஆதாயங்கள், அதனுடன் இணைந்து தோன்றக் கூடியவையாக இருந்து வரும் மோசமான தாக்கங்களை ஈடுசெய்து கொள்வதற்கு போதுமானவையாக உள்ளனவா? அதன் எதிர் மறையான அம்சங்களையும் விரும்பத்தகாத விளைவுகளையும் ஆகக் குறைந்த மட்டத்துக்கு எடுத்து வந்து, ஒட்டு மொத்தமாக நாட்டுக்கு நன்மை தரக்கூடிய விதத்தில் இக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது எப்படி என்பன இங்குள்ள பிரச்சினைகளாகும். இவற்றுள் சில விடயங்கள் இக்கட்டுரையில் எடுத்து நோக்கப்படுகின்றன.***

**அறிமுகம்**

இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் 1983-89 ஏழாண்டு காலப்பிரிவின் போது, மிகவும் இடர்கள் சூழ்ந்த ஒரு நிலையை எதிர்கொண்டிருந்தது. ஆனால், அது இப்பொழுது கணிசமானளவுக்கு மீட்சியை பெற்றுக் கொண்டுள்ளதுடன், இக்கைத்தொழிலின் எதிர்கால வாய்ப்புக்கள் பெருமளவுக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக இருந்து வருகின்றன. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1990க்கும் 1992க்கும் இடையில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 16 சதவீதத்தினால் அதிகரித்து வந்தன. இதற்கு முன்னைய ஏழாண்டு காலத்தின் போது இது 12% வீழ்ச்சியை அனுபவித்து வந்திருந்தது. இக் கைத்தொழில் வெகு விரைவில் (1982க்கு முன்னர்இருந்ததைப் போல) அதன் உச்ச கட்டத்தை எட்டி விடும் என்றும், அதன் மூலம் கணிசமான அளவிலான அந்நியச் செலாவணி சம்பாத்தியங்களையும், தொழில் வாய்ப்புக்களையும்அது எடுத்து வந்து, அரசாங்க வருமானத்துக்கு மிக முக்கியமான ஒரு பங்களிப்பினை வழங்கும் என்றும் பரவலாக எதிர்பார்ப்புக்கள் நிலவி வருகின்றன. அத்தகைய ஒரு நிலையில், சுற்றுலாத்துறை, இலங்கை மக்களின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக, கலாச்சார நலன் என்பவற்றுக்குப் பங்களிப்புச் செய்வதில் முக்கியமான ஒரு பங்கினை வகிக்கும் ஆற்றலை பெற்றுக் கொள்ள முடியும். உலக சுற்றுலா நிறுவனம் (WTO) அதன் அறிக்கையில், இலங்கையின் சுற்றுலாத் துறையின் உள்ளார்ந்த ஆற்றல் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "அடுத்த தசாப்தத்தின் போது உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழில் தொடர்ச்சியாக வளர்ச்சி கண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை, அதன்

சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து கொவதற்காக கணிசமான அளவிலான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. அது பாரிய சுற்றுலா மூலவளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த மூலவளங்களை மிகச் செழுமை வாய்ந்த, பன்முகப்பட்ட சுற்றுலா கவர்ச்சி மையங்களாக அபிவிருத்தி செய்து கொள்ள முடியும். சாதகமான, தனித்துவமான பிம்பமொன்றை தனக்கென உருவாக்கிக் கொள்ளக் கூடிய உள்ளார்ந்த ஆற்றலை அது கொண்டுள்ளது. மேலும், இந்த சுற்றுலா உற்பத்தித் தொகுதிகளை நாட்டுக்கு நன்மை தரக் கூடிய விதத்தில் மேம்படுத்தி, பயன்படுத்திக் கொள்ளக் கூடிய ஆற்றலையும் இலங்கை கொண்டுள்ளது".

உள்ளீட்டு/வெளியீட்டு அட்டவணை 1990 இல் சுற்றுலாத்துறையின் மொத்தச் சம்பாத்தியம் (வெளியீடு) 10,590 மில்லியன் ரூபாவாக இருந்து வந்துள்ளது என்பதனைக் காட்டுகின்றது. இது நாட்டின் மொத்த வெளியீட்டின் 1.96 சதவீதத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. மேலும், நாட்டின் மொத்த வெளியீட்டிற்கு மிகப் பெரிய பங்களிப்புக்களை செய்து வரும் மொத்த/சில்லறை வியாபாரத் துறையும் தொழிற்சாலைக் கைத்தொழில் துறையும் வழங்கிய பங்களிப்பு முறையே 18.8%, 15% என்ற அளவுகளில் இருந்து வந்தது. சுற்றுலாத்துறையின் மொத்த வெளியீடான இந்த 10,590 மில்லியன் ரூபா, முதலில் அந்தத் துறையின் உள்ளீட்டுத் தேவைகளையும், இரண்டாவதாக, அந்தத் துறையின் வெளியீடுகளை உற்பத்தி செய்வதற்காக அத்துறையினாலேயே வழங்கப்பட்ட உள்ளீடுகளின் சேர்க்கப்பட்ட பெறுமதியையும் கொண்டுள்ளது. இதில் முன்னையது மொத்த வெளியீட்டில் 47%ஐ கொண்டிருப்பதுடன், பின்னையது 53%ஐ கொண்டுள்ளது.

சுற்றுலாத்துறை பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் மீது தங்கியிருக்கும் இயல்பு, ஒட்டுமொத்த தேசிய சராசரி அளவுகளிலிருந்து பெருமளவுக்கு வேறுபட்டுக் காணப்படவில்லை. இது, சராசரியாக சுற்றுலாத் துறையின் மொத்த வெளியீடு, பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலிருந்து சுமார் 50 சதவீதமான பங்களிப்புக்களை உள்ளடக்கியுள்ளது என்பதனைக் காட்டுகின்றது. 1990 இல் பொருளாதாரத்தில் சேர்க்கப்பட்ட மொத்த பெறுமதி 317,904.6 மில்லியன் ரூபாவாக இருந்தது. இதற்கான சுற்றுலாத் துறையின் மொத்த பெறுமதி சேர்க்கப்பட்ட பங்களிப்பு 5,608.5 மில்லியன் ரூபாவாகும். இந்த பங்களிப்பு 1.76 சதவீதமாக இருந்து வந்தது. பொருளாதாரத்தின் இரண்டு மிகப் பெரிய தனித்துறைகளான மொத்த/சில்லறை வியாபாரம், தொழிற்சாலைக் கைத்தொழில் ஆகிய துறைகளின் பங்களிப்பு முறையே 23.7 சதவீதமாகவும், 10.6 சதவீதமாகவும் இருந்தன. தேசிய சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதப்படுத்தும் கைத்தொழில்களின் கூட்டுப்பங்களிப்பு 2.18 சதவீதமாக இருந்து வந்தது.

**அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்கள்**

நன்கு திட்டமிடப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு சுற்றுலாக் கைத்தொழில் நாட்டின் சென்மதிநிலுவை நெருக்கடிகளை தணித்து விடுவதில் பெருமளவுக்கு பங்காற்ற முடியும். இது தொடர்பான இக்கைத்தொழிலின் பங்களிப்பு, சென்மதி நிலுவையில் சேவைகள் கணக்குக்குள் காணப்படும் பிரயாணக் கணக்குக் கூறாக காட்டப்பட்டுள்ளது. அட்டவணை – 3 1982, 1987, 1992 ஆகிய மூன்று வருடங்களில் ரூபா நியதிகளில், அந்நியச் செலாவணி சம்பாதிய மூலம் ஒன்று என்ற முறையில் சுற்றுலாத்துறையின் சார்புரீதியான முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. சுற்றுலாக் கைத்தொழில் துறையை பொறுத்தமட்டில், 1982 மிகச் சிறந்த செயலாற்றம் காணப்பட்ட வருடமாக இருந்தது. அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்கள் மற்றும் சுற்றுலாத் துறை பயணிகளின் வருகைகள் என்பவற்றில் இந்த செயலாற்றத்தினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மிக மோசமான செயற்பாடு காணப்பட்ட 1987ஆம் வருடத்தின் தரவுகளுடனும், மீண்டும ஓரளவுக்கு மீட்சி நிலைமை அவதானிக்கப்பட்ட 1990ஆம் ஆண்டின் தரவுகளுடனும் 1982இன் தரவுகள் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன.

மொத்த அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களில் சுற்றுலாத் துறை வருமானங்களின் பங்கு 1982 இல் உச்ச மட்டமாக 14.22 சதவீதமாக இருந்து வந்தது. இது 1987 இல் 5.87 சதவீதமாக வீழ்ச்சியடைந்து இருந்ததுடன், 1992இல் 7.91 சதவீதமாக ஓரளவுக்கு மீட்சியினை காட்டியிருந்தது. 1987க்கும் 1992க்கும் இடைப்பட்ட காலத்தில் ரூபா நியதிகளில் உத்தியோகபூர்வ சுற்றுலாத் துறையின் வளர்ச்சி 185 சதவீதமாக இருந்து வந்தது. நாட்டில் பெருமளவுக்கு அரசியல் ஸ்திர நிலைமை ஸ்தாபிதமாகி இருந்தமையே இதற்கான காரணமாகும். இந்த ஒட்டுமொத்த புள்ளி, 1987 க்கும் 1988 க்குமிடையில் ஏற்பட்டுவந்த எல்லை ரீதியான வளர்ச்சியையும், 1988 க்கும் 1989க்கும் இடையிலான மிதமான வளர்ச்சியையும் உள்ளடக்கியிருந்தது. அதேவேளையில், 1989க்கும் 1990 க்குமிடையில் 100 சதவீத வளர்ச்சியும், 1991க்கும் 1992க்குமிடையில் 34 சதவீத வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தது.

1988 தொடக்கம் இடம் பெற்று வந்துள்ள சாதகமான போக்குகள் தொடர்ந்தும் விருத்தி கண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த அந்நியச் செலாவணி சம்பாத்தியங்களில் தேயிலை, தென்னை, இறப்பர் ஆகிய பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் சார்புரீதியான முக்கியத்துவம் குறைவடைந்துள்ளது என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

**அந்நியச் செலாவணி கொடுப்பனவுகளும் செலவினமும்**

ஓர் தொழில் முயற்சியின் தேறிய அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களை மதிப்பிடுவதில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான செலவு, வேலையில் அமர்த்தப்பட்டிருந்த வெளி நாட்டு ஆளணியினருக்கான கொடுப்பனவுகள், வெளிநாடுகளிலிருந்து பெற்றுள்ள நிதிகள் மீதான வட்டி என்பவற்றை கணக்கில் எடுக்க வேண்டியது அவசியமாகும். சுற்றுலாக் கைத்தொழில், வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் பிரதான விடயங்கள் வருமாறு:

(அ) (1) ஹோட்டல்கள், உணவகங்கள், பிரயாண முகவரகங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான கடைகள் என்பவற்றினால் சுற்றுலாப் பயணிகளின் நுகர்வுக்கென இறக்குமதி செய்யப்படும் பொருட்களையும் சேவைகளையும் உள்ளடக்கிய பொருட்களும் சேவைகளும்;

(2) ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் பிரயாண முகவரகங்கள்

போன்றவற்றுக்கான உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் இறக்குமதி செலவுக்கூறு.

(ஆ) தங்குமிடம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்ற சுற்றுலாப் பயணிகளுக்கான பொது வசதிகளை நிர்மாணிப்பதற்கு தேவைப்படும் மூலதனப் பொருட்கள், போக்குவரத்து மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை வழங்குவதற்கான இறக்குமதிச் செலவுகள்.

(இ) வட்டி இலாபங்கள், பங்கு இலாபங்கள் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களுக்கான சம்பளங்கள், வெளிநாட்டு முகாமைக் கட்டணங்கள் மற்றும் தரகுக் கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய - அந்நியச் செலாவணிக் கொடுப்பனவுகள்.

(ஈ) பிரச்சாரம், வெளிநாட்டுப் பயணம், உறுப்பினர் கட்டணம், ஆளணிப் பயிற்சி போன்ற சேவைகளுடன் சம்பந்தப்பட்ட செலவுகள்.

சில முன்னைய ஆய்வுகள், 1978 இல் அந்நியச் செலாவணிச் செலவினம் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களின் 24.5 சதவீதமாக இருந்து வந்ததென்றும், 1979 இல் 26.6 சதவீதமாக இருந்து வந்ததென்றும் எடுத்துக் காட்டியுள்ளன. அந்நியச் செலாவணி தொடர்பான சமீபத்திய மதிப்பீடு 29.3 சதவீதமாகும். கடந்த காலத்தில் செலவுகளில் ஒரு சிறு அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது என்பதனை இது காட்டுகின்றது.

**வேலை வாய்ப்பு**

அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பது தவிர, இலங்கையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையினதும் பங்களிப்பினை மதிப்பிட்டுக் கொள்வதற்கான மற்றொரு முக்கியமான அளவுகோல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் அதன் ஆற்றலாகும். இந்த வகையில், சுற்றுலாக் கைத்தொழில் குறிப்பாக, ஊழியச் செறிவு மிகுந்த ஒரு துறையாக இருந்து வருவதனால் பெருமளவுக்கு வாய்ப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

வேலை வாய்ப்பு தொடர்பாக கிடைக்கக் கூடியதாக இருக்கும் பிந்திய தரவுகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது, 1990 இல் நாட்டில் மொத்தம் 60 இலட்சம் உழைக்கக் கூடிய மக்கள் இருந்து வந்துள்ளதனையும், அவர்களில் சுமார் 970,000 பேர் வேலையற்றவர்களாக இருந்து வந்துள்ளதனையும் காண முடிகின்றது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தின் விகிதம் 14.2 சதவிகிதமாகும். பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய 3 தொடக்கம் 4 சதவீதம் வரையிலான மட்டத்திலும் பார்க்க இது பெருமளவுக்கு உயர்வானதாக இருந்து வருகின்றது. இலங்கையின் உழைக்கும் மக்களின் ஒரு முக்கியமாக குணாம்சம், மிகக் குறைந்த மட்டத்திலான தலைக்குரிய வருமானமாகும். இதனுடன் இணைந்த வகையில், நாட்டில் தோன்றியிருக்கும வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் பாரதூரமான ஒரு சமூக-பொருளாதார நெருக்கடியாக இருந்து வருவதுடன், அது சமூக கொந்தளிப்பினை உருவாக்கி நாட்டின் சமூக உறுதிப்பாட்டில் ஒரு சீர் குலைவினை எடுத்துவர முடியும்.

சுற்றுலாக் கைத்தொழில் துறை அதன் நடவடிக்கைகளில் ஊழியச் செறிவுனைக் கொண்ட ஓர் இயல்பினை காட்டி வருகின்றது. மேலும், இத்துறை தொடர்ந்தும் விரிவாக்கம் பெற்றுச் செல்வதற்கான உள்ளார்ந்த ஆற்றல்களையும் கொண்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வேலை யில்லாத் திண்டாட்ட நெருக்கடியைத் தணிப்பதில் இந்தத் துறை முக்கியமான பங்களிப்பினை வழங்கி வரக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது.

சுற்றுலாக் கைத்தொழில் துறையில் 1992இல் நேரடியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றிருந்தவர்களின் எண்ணிக்கை 28,790 ஆகும். இது நாட்டின் மதிப்பிடப்பட்ட மொத்த ஊழியர் படையின் 0.27 சதவீதமாக காணப்பட்டது. ஆகக் கூடிய அளவு ஊழியர் படையை கொண்டிருக்கும் வேளாண்மைத்துறையில் 1990 இல் மொத்த ஊழியர் படையில் 47.67 சதவீதத்தினர் வேலைகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இலங்கையின் சுற்றுலாத்துறையின் நேரடி/மறைமுக தொழில் வாய்ப்பு தொடர்பான நியம விகிதம் 1 : 1.4 ஆகும். இது சுற்றுலாத்துறையில் உருவாக்கப்படும் மறைமுக வேலை வாய்ப்பினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையில், சுற்றுலாத்துறையில் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும ஒரு தனி நபர் இக்கைத்தொழிலுக்கு வெளியே 1.4 நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்றார். 1992 தொடர்பாக மறைமுகமாக உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை 40,306 ஆகும்.

சுற்றுலாத் துறையின் வேலை வாய்ப்புக் குறித்த மற்றொரு சிறப்பம்சம், இந்தத் துறையின் பெரும்பாலான நடவடிக்கைகளுக்கு உயர்ந்த கல்வித் தகைமைகளைக் கொண்டவர்களோ அல்லது உயர்மட்டத் திலான தொழில்சார் திறமைகளை பெற்றிருப்பவர்களோ தேவைப்படுவ தில்லை என்பதாகும். சுற்றுலாவுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு முகாமை, விஞ்ஞான மற்றும் தொழில்சார் ஊழியர்கள் ஒரு சிலர் மட்டுமே தேவைப்படுகின்றார்கள். ஆனால், அதே வேளையில், மேற்பார்வைத் தரங்கள், இலிகிதர் தரங்கள் போன்றவற்றை சேர்ந்த ஊழியர்களும் இயக்குதல் மற்றும் உடல் உழைப்புத் தொழிலாளர் போன்றவர்களும் அதிக எண்ணிக்கையில் இத்துறைக்குத் தேவைப்படுகின்றனர். சுற்றுலாத் துறையில் நேரடியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றிருப்பவர்களில் சுமார் 87 சதவீதத்தினர் ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்ற மற்றும் உடலுழைப்பு வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களாகவே இருந்து வருகின்றனர். சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மிகப் பெரிய தனியொரு துறையான ஹோட்டல்துறை ஊழியர்களின் 90 சதவீதத்தினர் ஓரளவுக்கு தொழில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் தேர்ச்சியற்றவர்களாகவுமே இருந்து வருகின்றனர்.

இலங்கை சுற்றுலாக் கைத் தொழிலின் வாய்ப்புக்கள் பெரு மளவுக்கு மந்த நிலையை அடைந்திருந்த (1983-1989) காலப்பிரிவின் போது, இத்துறையிலான வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்திருந்தது. இது வேலை வாய்ப்புக்கும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் இடையில் நிலவி வந்த நேரடித் தொடர்புக்குச் சான்று பகர்கின்றது. அதேவேளையில், சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்து செல்லும் பொழுது, அது, இலங்கையின் தேர்ச்சியற்ற மற்றும் ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்ற ஊழியர் படையில் பெரும் பகுதியினரை

# பின்னோக்கிய மற்றும் முன்னோக்கிய இணைப்புக்கள்

எந்த ஒரு பொருளாதார துறையிலும் 'பின்னோக்கிய இணைப்புக்கள்' என்ற பதம், பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலிருந்து உள்ளீடுகளை கொள்வனவு செய்வதனையே குறிக்கின்றது. உள்ளீட்டு/வெளியீட்டு அட்டவணைகளை உபயோகித்து மதிப்பிடப்படும் உள்ளீட்டு குணகங்கள், ஏனைய துறைகளிலிருந்து வர வேண்டிய உள்ளீடுகளின் சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. பொருட்களை விநியோகம் செய்யும் துறைகள் தொடர்பாக சுற்றுலாத்துறை கொண்டிருக்கும் "உள்ளீட்டு குணகங்கள்/ சதவீதங்களை" அட்டவடணை – 1 எடுத்துக்காட்டுகின்றது. உள்ளீட்டு குணகங்கள்/ சதவீதங்கள், சுற்றுலாத்துறையின் மொத்த வெளியீட்டில் ஒவ்வொரு உள்ளீடுகள் துறையினதும் விகிதாசாரத்தை காட்டுகின்றன. அதன் பிரகாரம், ஏனைய துறைகளிலிருந்து வர வேண்டிய உள்ளீட்டுத் தேவைகளின் மொத்தம், சுற்றுலாத் துறையின் மொத்தக் கொள்முதல்களை எடுத்துக் காட்டுகின்றது: அத்துடன், இவையே மொத்த பின்னோக்கிய இணைப்புக்களாகவும் இருந்து வருகின்றன.

சுற்றுலாத்துறையினால் நேரடியாக வழங்கப்பட்டு வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினம், வருமான சம்பாதிப்பின் ஆரம்ப சுற்றாகவும், மறைமுக மற்றும் தூண்டப்பட்ட வருமானம்/செலவு என்பவற்றைக் கொண்ட ஏனைய பல சுற்றுக்களின் ஆரம்பமாகவும் கருதப்படுகிறது. இந்த முதலாவது வகைச் செலவினத்தை பெற்றுக் கொள்பவர்கள், பொருட்களுக்கும் சேவைகளுக்கும் கொடுப்பனவுகளை செய்வதற்கு இவ்வருமானங்களைப் பயன்படுத்தும் பொழுது, அதற்கு அடுத்த சுற்றுக்கள் உருவாகின்றன. இரண்டாவது நிலையில் இவற்றைப் பெற்றுக் கொள்பவர்கள் சேவைகளுக்கா கவும் பொருட்களுக்காகவும் கொடுப் பனவுகளை செலுத்துவதுடன், இவ் வகையில் சுற்றுக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பெருக்கல்குணங்கள் பொருளாதாரத் துக்குள் மொத்த வெளியீட்டில் ஏற்படும் மாற்றத்தினை எடுத்துக் காட்டுகின்றன.

அட்டவணை 1

சுற்றுலாத்துறையின் பின்னோக்கிய பிணைப்புக்கள் - 1990

| வழங்கும் துறை | வழங்கும் துறையிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட உள்ளீடுகளின் சதவீதம் |
|---|---|
| 1. புகையிலை | 0.05% |
| 2. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 2.29% |
| 3. கால்நடை | 3.17% |
| 4. கடற்றொழில் | 1.48% |
| 5. தெங்கு பதப்படுத்தல் | 1.04% |
| 6. தொழிற்சாலை கைத்தொழில்கள் | 19.9% |
| 7. பெற்றோலிய கைத்தொழில் | 0.62% |
| 8. குடிசை மற்றும் ஏனைய கைத்தொழில்கள் | 3.09% |
| 9. மின்சாரம், வாயு, நீர் | 2.92% |
| 10. நிர்மாணம் | 3.43% |
| 11. சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் | 3.23% |
| 12. போக்குவரத்து, தொடர்பாடல் | 4.21% |
| 13. வங்கித்தொழில், காப்புறுதி, மெய்யாதனம் | 1.49% |
| 14. ஏனைய தனியார் சேவைகள் | 0.96% |
| மொத்த உள்ளீட்டு கொள்முதல் | 46.77% |
| சேர்க்கப்பட்ட பெறுமதி | 53.23% |

அட்டவணை – 2 பல்வேறு சுற்றுலா உப துறைகள் தொடர்பாக கணிக்கப் பட்டுள்ள சுற்றுலாத்துறையின் பெருக்கல் குணங்களை முன்வைக்கின்றது. உள்ளீட்டு / வெளியீட்டு அட்டவணையிலிருந்து கணிக்கப்பட்ட ஒட்டு மொத்த சுற்றுலாப் பெருக்கியான 1.82 புள்ளி, சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்படும் ஒரு ரூபாவுக்கான மேலதிகக் கேள்வி, பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டுக்கு – அதாவது, தேசிய வருமானத்துக்கு – ரூபா 1.82 ஐ சேர்க்கின்றது என்பதனை சுட்டிக் காட்டுகின்றது. சுற்றுலா உப துறை களுக்குள் சுற்றுலா பயணிகளுக்கான கடைகள் துறை (2.67), சுற்றுலா விடுதிகள் (2.49) மற்றும் உணவகங்கள் துறை (2.35) என்பன ஆக உயர்ந்த பெருக்கல் எண்களைக் கொண்டுள்ளன.

தொகை மதிப்பு, புள்ளிவிவர திணைக்களத்தினால் இனங்காணப் பட்டுள்ள 33 பொருளாதாரத் துறைகளில், 14 பிரதான துறைகள் சுற்றுலா கைத்தொழிலின் செயற்பாட்டுக்கான உள்ளீடுகளை வழங்கி வருகின்றன என்பதனை அட்டவணை – 1 காட்டுகின்றது. பண்ணை விலங்கு, தொழிற்சாலை மற்றும் கைத்தொழில்கள், சில்லறை/ மொத்த வியாபாரம் மற்றும் போக்குவரத்து தொலைத்தொடர்பு என்பன சுற்றுலாத் துறையின் வெளியீட்டுக்கு பங்களிப்புச் செய்து வரும் பிரதான துறைகளாக இருந்து வருகின்றன. அதே வேளையில், பிறிதொரு மட்டத்தில், ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலாப் பயணிக ளுக்கான கடைகள் மற்றும் பிரயாண முகவரகங்கள் போன்ற சுற்றுலா உப

துறைகளின் உள்ளீட்டுத் தேவைகள் ஒரு வேறு மாதிரியிலான உள்ளீட்டுத் தேவைப்பாடுகளை பிரதிபலித்துக் காட்டுகின்றன. ஹோட்டல் துறைகளின் உள்ளீட்டுத் தேவை, சிறு ஏற்றுமதிப் பயிர் உள்ளீடுகளில் 3.7%, பண்ணை விலங்கு உள்ளீடுகளில் 4.6% , மீன் உள்ளீடுகளில் 4%, கட்டுமானத்துறை உள்ளீடுகளில் 4.4%, மொத்த/ சில்லறை வர்த்தக உள்ளீடுகளில் 3%, போக்குவரத்து, தொலைத் தொடர்பு உள்ளீடுகளில் 2.5%, வங்கித் தொழில் மற்றும் மேலும் ஐந்து பொருளாதாரத்துறைகள் என்பவற்றின் உள்ளீடுகளில் 1.7% என்பவற்றை உள்ளடக்குகிறது. விருந்தினர் விடுதிகள் துறையின் மிக முக்கியமான பின்னோக்கிய இணைப்புக்கள் வருமாறு: தொழிற்சாலை (37%), தெங்குப் பதப்படுதல் (10%), பண்ணை விலங்கு (7%), கடற்றொழில் (6%); உணவகங்கள் துறை தொழிற்சாலை (16%)- பண்ணைவிலங்கு (15%) மற்றும் கடற்றொழில் (9%) ஆகிய துறைகளுடன் இணைப்புக்களைக் கொண்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கான மொத்த வெளியீட்டில் 78 சதவீதம் தொழிற்சாலை துறையிலிருந்தே வந்தது. இந்தத் துறை உள்நாட்டு கைவினைப் பொருட்கள் துறையின் உற்பத்திகளையும் உள்ளடக்கியிருந்தது. பிரயாண முகரகங்கள் துறையின் வெளியீடு பிரதானமாக பெறுமதி சேர்க்கப்பட்ட கூறினை உள்ளடக்கி இருப்பதனால், அதன் பின்னோக்கிய இணைப்புக்கள் குறைந்த பட்ச மட்டத்திலேயே இருந்து வருகின்றன.

அட்டவணை 2

சுற்றுலாத்துறை பெருக்கல் கூறுகள்

| துறை | பெருக்கல் தாக்கம் |
|---|---|
| ஹோட்டல்கள் | 1.53 |
| விருந்தினர் விடுதிகள் | 2.49 |
| உணவகங்கள் | 2.34 |
| சுற்றுப்பயணிகளுக்கான கடைகள் | 2.66 |
| பிரயாண முகவரகங்கள் | 1.47 |
| மொத்த பெருக்கி | 1.82 |

### முன்னோக்கிய இணைப்புக்கள்

எந்த ஒரு பொருளாதாரத் துறையுடனும் சம்பந்தப்பட்டுள்ள முன்னோக்கிய இணைப்புக்கள், குறிப்பிட்ட ஒரு துறையின் வெளியீடு ஏனைய துறைகளில் ஏதாவது ஒன்றுக்கு ஒரு விற்பனையை அல்லது உள்ளீட்டினை வழங்கி வரும் அளவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. எனினும், சுற்றுலாத்துறையை பொறுத்த வரையில், அதன் உற்பத்தி சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளால் நுகரப்பட்டு வருகின்றது. சுற்றுலாத் துறைகளின் வெளியீட்டின் இறுதி நுகர்வோராக இவர்கள் இருந்து வருகின்றனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சுற்றுலாத்துறையின் உற்பத்தி ஒரு முடிவுப் பொருளாக கருதப்படுகின்றது. அது வேறு பல்வேறு துறைகளுக்குமான பொருளாதார உள்ளீடொன்றினை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. உள்ளீட்டு, வெளியீட்டு அட்டவணை சுற்றுலாத்துறையின் முன்னோக்கிய இணைப்புக்கள் பூச்சியமாக இருந்து வருவதனை காட்டுகின்றது. இது பொருளாதாரத்தின் வேறு எந்தத் துறையும் சுற்றுலாத்துறையிலிருந்து எத்தகைய உள்ளீடுகளையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றது. எவ்வாறிருப்பினும், யதார்த்தத்தில், ஹோட்டல்கள், உணவகங்கள், வாடகைக் கார் மற்றும் ஏனைய சேவைகள் போன்றவற்றைக் கொண்ட பரந்த வீச்சிலான சேவைகளுக்கான வர்த்தகத்துடன் தொடர்புபட்ட கேள்வியை உள்ளடக்கிய முன்னோக்கிய இணைப்புக்கள் முக்கியத்துவம் அற்ற ஒரு பிரிவாகவே இருந்து வருகின்றது. பொருளாதாரம் மேலும் அபிவிருத்தி அடையும் பொழுது, சந்திப்பிடங்கள், தங்குமிடம் மற்றும் ஏனைய சுற்றுலாத்துறை சேவைகள் தொடர்பான வர்த்தகர்களின் கேள்வி பெருகிச் செல்லும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

சுற்றுலா உப துறையின் பெருக்கல் எண்களை ஏனைய பிரதான பொருளாதாரத்துறைகளின் பெருக்கல் எண்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இனங் காணப்பட்டுள்ள அனைத்துப் பொருளாதாரத் துறைகளுக்குள்ளும் சுற்றுலா பயணிகளுக்கான கடைகள் துறை இன்னமும் ஆகக்கூடிய பெருக்கல் விகிதத்தினை கொண்டுள்ளது என்பதனை காண முடிகிறது. தேயிலை பதப்படுத்தும் துறை (பெருக்கல் விகிதம் 2.08) இரண்டுக்கும் கூடுதலான பெருக்கல் விகிதத்தினை கொண்டிருக்கும் சுற்றுலா அல்லாத ஒரு சில துறைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது.

பொது நியதிகளில், சுற்றுலா உப துறையின் பெருக்கல் விகிதங்கள், பொருளாதாரத்தின் பெரும்பாலான ஏனைய துறைகளின் பெருக்கல் விகிதங்களிலும் பார்க்க அதிகளவுக்கு உற்பத்தித் திறனை கொண்டவையாக இருந்து வருகின்றன. எனவே, சுற்றுலாத்துறைக்குள் மேற் கொள்ளப்படும் செலவினம் குறித்த ஓர் அலகு, சுற்றுலா அல்லாத பெரும்பாலான துறைகளில் செலவிடப்படும் ஓர் அலகிலும் பார்க்க உயர் மட்டத்திலான உடனடுத்த செலவினத்தை பொருளாதாரத்தில் எடுத்து வரும்.

தனக்குள் உறிஞ்சிக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்க முடியும்.

### சுற்றுலாத்துறையிலிருந்து அரசாங் கத்துக்குக் கிடைக்கும் வருமானம்

அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின் மீது சுற்றுலாத்துறையின் தாக்கம் என்பது, இக்கைத் தொழிலின் மற்றொரு முக்கியமான அம்சமாக இருந்து வருகின்றது. சுற்றுலாத்துறை வருவாய்களை உருவாக்கி வரும் அதேவேளையில், இலாபத்தினை அலலது நட்டத்தை முடிவில் எடுத்துவரக்கூடிய வரவு செலவுத்திட்ட செலவுகளுடனும் அது சம்பந்தப்பட்டுள்ளது. எனவே, சுற்றுலாத் துறையின் அரசாங்க வருமானத்துக்கான பங்களிப்பினையும், இத்துறை தொடர்பாக அரசாங்கத்துக்கு ஏற்பட்ட செலவினங்களையும், இக்கைத்தொழிலினால் உருவாக்கப்பட்ட வருமானத்தினையும் மிகக் கவனமான முறையில் நோக்க வேண்டியுள்ளது.

சுற்றுலாத்துறைக்கு அவசியமான உள் கட்டமைப்பு வசதிகளையும், நிறுவன ரீதியான ஆதரவினையும் வழங்குவது தொடர்பாக, அரசாங்கம் ஏற்க வேண்டியிருக்கும் செலவுகள், அடிப் படையில், இரண்டு வகைகளைக் கொண்டவையாக இருந்து வருகின்றன: நேரடிச் செலவுகள் மற்றும் மறைமுகச் செலவுகள். இலங்கை சுற்றுலா சபைக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு ஒரு நேரடியான செலவாக இருந்து வரும்

32714

அதேவேளையில், குறிப்பிட்ட சில பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் மீதான முதலீட்டினை அரசாங்கத்துக்கான ஒரு மறைமுக செலவினமாக கருத முடியும். வரவுப் பக்கத்தை பொறுத்த மட்டில், சுற்றுலா நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் இலாப வரி போன்ற வருவாய்கள் அரசாங்கத்துக்கு நேரடியாகக் கிடைத்து வருகின்றன. மறுபுறத்தில், விமான எரிபொருள் போன்றவற்றை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானம், சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலிருந்து மறைமுகமாக கிடைக்கும் வருமானமாகும். எனினும், சுற்றுலாக் கைத்தொழில் துறை, அதன் இயல்பிலேயே, பொருளாதாரத்தின் ஏனைய பல துறைகளுடன் பல்வேறு இணைப்புக்களையும் கொண்டுள்ள ஒரு துறையாக இருந்து வருவதனால், இந்தத் துறையின் நேரடி மற்றும் மறைமுக செலவுகளையும், அது அரசாங்கத்துக்கு எடுத்து வரும் வருமானங்களையும் மதிப்பிடுவது ஓர் எளிதான காரியமாக இருந்து வரவில்லை. சுற்றுலாக் கைத்தொழில் வரவுசெலவுத்திட்டத்துக்கும் அரசுக்கும் எடுத்து வரும் நன்மைகள் குறித்த ஒரு கவனமான பகுப்பாய்வு இது தொடர்பான பயனுள்ள தரவுகளை எடுத்துவர முடியும்.

சுற்றுலாக் கைத்தொழிலின் செலவுகள் மற்றும் அனுகுலங்கள் என்பவற்றை பின்வருமாறு விளக்க முடியும்:

(அ) நேரடிச் செலவுகள்.

(1) இலங்கை சுற்றுலா சபைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு;

(2) சலுகை ரீதியான மொத்த வியாபார வரிகள், இறக்குமதித் தீர்வைகள் மற்றும் வருமான வரி நிவாரணங்கள் என்பவற்றின் அறிமுகத்தினால் இழக்கப்பட்ட அரசாங்கத்தின் வரி வருமானம்

(ஆ) நேரடி வருமானங்கள்:

(1) மொத்த வியாபார வரி, இலாப வரிகள், ஊழியர் வரிகள் மற்றும இறக்குமதித் தீர்வைகள் போன்ற நேரடி வரிகள்;

(2) இலங்கை சுற்றுலா சபையின் வருமானம், தபால் அட்டைகளின் விற்பனை மற்றும் வாடகை வருமானங்கள் போன்றவை.

(இ) மறைமுக செலவுகள்:

(1) பொதுப் பாதைகளின் அபிவிருத்தியும் பராமரிப்பும்;

(2) பொது வசதிகள்;

(3) கொழும்பு விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதிலும் பராமரிப்பதிலும் சம்பந்தப்பட்டுள்ள செலவுகளின் ஒரு பகுதி; -

(4) விலங்குக் காட்சிச்சாலை, அருங் காட்சியகம், தேசிய பூங்காக்கள் மற்றும் தொல்பொருள் அமைவிடங்கள் என்பவற்றை பராமரித்து வருவது தொடர்பான செலவினங்கள்.

(ஈ) மறைமுக வருமானங்கள்:

(1) கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து, கட்டணங்கள் மற்றும் வாடகைகள் என்பவற்றின்மூலம் கிடைக்கும் வருமானம்.

(2) விமான எரிபொருள் விற்பனை மூலமான வருமானம்.

(3) விலங்குக் காட்சிச்சாலை, அருங் காட்சியகம், தேசிய பூங்காக்கள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்ன அமைவிடங்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கும் வருமானங்கள்.

(4) பொருள் வழங்கும் துறைகளிலிருந்து கிடைக்கும் மறைமுக வரிகள்: சுற்றுலாத்துறை நடவடிக்கைகளின் இயக்கத்துக்காக உள்ளீடுகளை வழங்கி வரும் துறைகளிலிருந்து சேகரிக்கப்படும் வரிகள்.

அரசாங்கம் 1990 இல் சுற்றுலாத்துறையிலிருந்து 982.7 மில்லியன் ரூபா தேசிய மிகையைப் பெற்றிருந்தது. இதில் நேரடி வருமானம் 252.6 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், மறைமுக வருமானம் 730.1 மில்லியன் ரூபாவாக இருந்து வந்தது. அரசுக்கு சுற்றுலா கைத்தொழிலிலிருந்து கிடைக்கும் செலவு அனுகூல விகிதத்தினை பின்வருமாறு எடுத்துக் காட்ட முடியும்:

$$\text{செலவு – அனுகூல விகிதம்} = \frac{\text{வருமானம்}}{\text{செலவு}}$$

கீழ்க்காணப்படும் பிரிவுகள் தொடர்பாக 1990 ஆம் வருடத்துக்கான செலவு - அனுகூல விகிதம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது:

(அ) நேரடி வருமானம் மற்றும் செலவு:

$$\frac{\text{ரூபா 563.3 மில்.}}{\text{310.7 மில்.}} = 1.81$$

(ஆ) மறைமுக வருமானம் மற்றும் செலவு:

$$\frac{\text{ரூபா 1,687.0 மில்.}}{\text{956.9 மில்.}} = 1.76$$

(இ) மொத்த வருமானமும் செலவும்:

$$\frac{\text{ரூபா 2,250.3 மில்.}}{\text{1,267.6 மில்.}} = 1.78$$

இந்த மதிப்பீடுகள், நேரடி மற்றும் மறைமுக வருமானங்கள் தொடர்பாக பெருமளவுக்கு சாதகமானதாக இருந்து வரும் செலவு-அனுகூல விகிதமொன்றினை எடுத்துக் காட்டுகின்றது. அரசாங்கம் சுற்றுலாத் துறை தொடர்பாக செலவிடும் ஒவ்வொரு 100 ரூபாவுக்கும் 178 ரூபா மொத்த வருமானமும், 78 ரூபா தேறிய வருமானமும் கிடைத்து வருகின்றது என்பதனை இது சுட்டிக் காட்டுகின்றது.

## சமூக மற்றும் கலாச்சார தாக்கம்

சுற்றுலாத்துறை, தவிர்க்க முடியாத விதத்தில், சுற்றுலாப் பயணிகளுக்கு இடையிலும், அதேபோல சுற்றுலாப் பயணிகளுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கு மிடையிலும் சமூக இடைத் தொடர்புகளை எடுத்து வருகின்றது. இந்த சமூக இடைத் தொடர்புகள், உள்ளூர் சமூகத்தின் மீது பல வழிகளில் தாக்கத்தினை எடுத்து வர முடியும். நட்புக்கள் உருவாகலாம்; அல்லது முரண்பாடுகள் தோற்று விக்கப்படலாம்; சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் வருகை தந்து, பாரிய அளவிலான வருமான மட்டங்களை இச் சமூகங்களுக்குள் புகுத்தி, உள்ளூர் மக்கள் பழக்கப்பட்டிருக்கும் சமூக நடத்தை மாதிரிகளைப் பார்க்கிலும் முற்றிலும் மாறுபட்ட நடத்தை மாதிரிகளை வெளிப் படுத்திக் காட்டினால், இந்நாட்டின் சமூக

32714

# எய்ட்ஸ் அபாயமும் சுற்றுலாத்துறையும்

உலக சுகாதார நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி, 2000 ஆவது ஆண்டளவில் உலகில் சுமார் 4 கோடி ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் எச்ஐவி (வைரஸ்) தொற்றினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இந்த வைரஸ் தொற்றே எய்ட்ஸ் என்று அழைக்கப்படும் ஆட்கொல்லி நோயினை எடுத்து வருகின்றது. தென்னாசியாவில், உலகின் வேறு எந்த பாகத்தைப் பார்க்கிலும் எச்ஐவி தொற்றுக்கள் வேகமாக பெருகி வருகின்றன. தாய்லாந்தில், இப்பயங்கர நோயின் பெருக்கம் மிகவும் பரவலான முறையில் இடம் பெற்று வருவதாக கூறப்படுகின்றது. மேலும், இந்தியாவில் 1997 அளவில் இத் தொற்றினால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசியாவில் ஒவ்வொரு 24 மணி நேரத்திலும் சுமார் 2000 பேர் இந்த தொற்றின் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றார்கள். இந்த நிலையில், 2000 ஆவது ஆண்டளவில், புதிய எச்ஐவி தொற்றுக்களில் 95 சதவீதம் வளர்முக உலகிலேயே இடம் பெற்று வரும் என்று உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சுற்றுலாத்துறைக்கும் எச்ஐவி/எயிட்ஸ் அச்சுறுத்தலுக்குமிடையில் ஒரு தொடர்பு இருந்து வர முடியும்; இது மிகவும் பயங்கரமான பின் விளைவுகளை எடுத்து வரக்கூடியதாகும். சுற்றுலாப் பயணிகள், இந்த தொற்றினை காவிச் செல்லும் மூலங்களாக இருக்க வாய்ப்புள்ளது. அந்த வகையில், அவர்கள் தாம் செல்லும் நாட்டிலும் பிராந்தியத்திலும் உலகளாவிய ரீதியிலும் இந்த நோயை பரப்பக் கூடியவர்களாக இருந்து வருகின்றார்கள். இது மறுபுறத்தில், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாதிப்பினை ஏற்படுத்தி, அதன் விளைவாக, சம்பந்தப்பட்ட நாடுகளில் வேலைவாய்ப்புக்களின் இழப்பு, சுற்றுலாத்துறை நடவடிக்கைகளில் இருந்து வரும் வருமான இழப்பு மற்றும் பொதுவான பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சி என்பவற்றினை எடுத்துவர முடியும்.

இலங்கையில், மார்ச் 1994 வரையில், 129 பேர் எச்ஐவி தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என கண்டறியப்பட்டிருந்தது; இவர்களில் 20 பேர் வெளிநாட்டவர்களாவர். ஆனால், இந்த அச்சுறுத்தல் குறித்த உத்தியோகபூர்வமற்ற ஓர் மதிப்பீடு இந்த எண்ணிக்கையை 3500 என கணக்கிட்டுள்ளதுடன், பிறிதொரு மதிப்பீடு 10,000 என மதிப்பிட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் எவையும், இலங்கையில் எச்ஐவி தொற்றுக்கும் சுற்றுலாத்துறைக்குமிடையில் நேரடியான தொடர்பு நிலவி வருகின்றது என்பதனை நிரூபிப்பதற்கான சான்றுகளைத் தரவில்லை. எனினும், இந்த நிலைமை தொடர்ந்தும் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டு வரவேண்டியது அவசியமாகும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாதிரி ஆய்வு, சுற்றுலா வர்த்தக சமூகத்தினர், எச்ஐவி/எய்ட்ஸ் மற்றும் சுற்றுலாத் துறை குறித்து இரு வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளார்கள் என்பதனை எடுத்துக் காட்டியது. இந்த ஆய்வுக்கு பதிலளித்தவர்களில் சுமார் அரைவாசிப் பங்கினர், இந்த தொற்று நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான முக்கியமான ஒரு ஊடுகாவியாக சுற்றுலாத்துறை இருந்து வர முடியும் என்றும், அதன் மூலம் அது உள்நாட்டவர்களுக்கு இந்த நோயைப் பரவச் செய்து, உடனடி எதிர்காலத்தில் இந்தக் கைத்தொழில் முழுவதையும் நசுக்கிவிட முடியும் என்றும் கருதுகின்றனர். சுற்றுலாத்துறை, இந்தப் பயங்கர நோயை நாட்டுக்குள் பரவச் செய்து வரும் ஓர் ஊடகமாக இருந்து வரவில்லை என ஏனையவர்கள் கருதுகின்றனர். மேலும், வெளிநாடுகளில் (குறைந்த வேதனங்களில்) தொழில் செய்துவிட்டு நாடு திரும்பும் தொழிலாளர்களே இத் தொற்றினை இங்கு பரப்பக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர் என அவர்கள் கருதுகின்றனர். இலங்கையில் எச்ஐவி/ எயிட்ஸ் பெருமளவில் நிலவி வந்தாலும் கூட, அதனால் சுற்றுலாக் கைத்தொழில் பாதிக்கப்படப் போவதில்லை என்பது அவர்களுடைய கருத்தாக இருந்து வருகின்றது.

உலகளாவிய அடிப்படையில் எச்ஐவி தொற்று பரவுவதன் தாக்கம், இரு வேறுபட்ட வழிகளில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பாதிக்க முடியும்: (1) சுற்றுலாப்பயணிகள், உயர் அளவில் எயிட்ஸ் அபாய ஏது நிலவி வரும் தாய்லாந்து போன்ற நாடுகளைத் தவிர்த்து, அதற்குப் பதிலாக, வேறு இடங்களைத் தெரிவு செய்து கொள்ளக்கூடும். தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா போன்ற ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையில் எய்ட்ஸ் அபாயம் சார்பு ரீதியில் குறைவாக இருந்து வரும் வரையில், குறுங்காலத்தில், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஓர் அதிகரிப்பு ஏற்படும்; (2) இந்த அச்சுறுத்தல் மட்டம் என்னவாக இருந்த போதிலும், சுற்றுலாப் பயணிகள் வெளிநாட்டுப் பயணங்களை குறைத்துக் கொள்ள முடியும்; ஏனெனில், இந்த வைரஸின் இயல்பைப் பொறுத்தவரையில், எவரும் எந்த ஒரு நாட்டினதும் நிலைமையை அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. அத்தகைய ஒரு நிலையில், இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையும் வீழ்ச்சியடைய முடியும்.

மிகக் கடுமையான வறுமை விபச்சாரத்துக்கான ஒரு முக்கியமான காரணமாக இருந்து வருகின்றது என்று கூறப்படுகின்றது. ஓரினச் சேர்க்கை, ஆண் பெண் விபச்சாரம் அல்லது சிறுவர் விபச்சாரம் போன்ற எந்த வடிவங்களில் விபச்சாரம் நிகழ்ந்து வந்தாலும், இந்த வகையான பாலுறவு நடத்தைகளுக் கூடாகவே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எச்ஐவி வைரஸ் காவிச் செல்லப்படுகின்றது. மக்களின் வருமான மட்டங்கள் பெருமளவுக்கு தாழ்ந்த நிலையில் இருந்து, மாற்று வருமான வாய்ப்புக்கள் இல்லாதிருக்கும் வரையில், அவர்கள் (எச்ஐவி வைரஸ் அபாயத்தினையும் கூட பொருட்படுத்தாது) எளிதில் பணம் சம்பாதித்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை நாடிச் செல்வார்கள். இந்த அவலமான நிலைமையைப் போக்கிக் கொள்வதற்கான ஒரே வழி, சமூக ரீதியில் மக்களை திருப்திப் படுத்தக்கூடிய ஒரு மட்டத்தில் வேலை வாய்ப்புக்களை வழங்குவதாகும். அதே வேளையில், எச்ஐவி/எய்ட்ஸ் அபாயத்தின் காரணங்கள் மற்றும் விளைவுகள் என்பன குறித்து மக்களுக்கு கல்வியும் விழிப்புணர்வும் ஊட்டப்படுத்தல் வேண்டும்.

அமைப்பின் சீரழிவுக்கு தம்மை அறியாமலேயே அவர்கள் உடந்தையாகி விடுவார்கள்.

சுற்றுலாத்துறையின் சமூக மற்றும் பண்பாட்டுத் தாக்கங்கள் சாதகமானவையாகவும், அதேபோல பாதகமானவையாகவும் இருந்து வர முடியும். உள்ளூர் கலைகளுக்கும் கைவினைத் தொழில்களுக்கும் வழங்கப்பட்டு வரும் தூண்டுதல், அழகியல் மற்றும் பண்பாட்டு பெறுமதியைக் கொண்டுள்ள வரலாற்று நினைவுச் சின்னங்களையும் அமைவிடங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான ஊக்குவிப்பு என்பவற்றை, சுற்றுலாத்துறை சமூகத்தின் மீது எடுத்து வரும் சில பயன் மிக்க தாக்கங்கள் என குறிப்பிட முடியும். சுற்றுலாத்துறை, பாரம்பரிய விவசாயத்திலிருந்து, சேவைக் கைத்தொழில்களை நோக்கி வேலை வாய்ப்புக்களில் ஏற்படும் மாற்றங்களுக் கூடாக, பெருமளவுக்கு சமூக அசைவினையும் ஊக்குவித்து வர முடியும். இது மக்களுக்கு உயர்ந்த கூலிகளையும், நல்ல தொழில் வாய்ப்புக்களையும் வழங்கக் கூடியதாக இருந்துவரும்.

சுற்றுலாத்துறையை சரியான முறையில் நிர்வகித்து வராவிட்டால், அது, எதிர்மறையான பல தாக்கங்களை எடுத்துவர முடியும். விடுமுறைத் தலங்களில் மிதமிஞ்சிய சன நெருக்கடி, சுற்றுலாத்துறையில் ஈடுபட்டிருக்கும் வர்த்தக சமூகத்துக்கும் உள்ளூர் மக்கள் பிரிவினருக்குமிடையிலான போராட்டங்கள் மற்றும் பொருளாதார வளங்களின் மீதான நெருக்குதல்கள் என்பவற்றை அது எடுத்துவர முடியும். ஹோட்டல் சொந்தக்காரர்கள், கரையோர நிலப்பகுதிகளையும் அவற்றினைச் சூழவுள்ள கடற்கரைகளையும் கையகப்படுத்தி வைத்திருக்கும் கரையோரப்பகுதிகளில் இப்பிரச்சினையை மிகவும் தெளிவாக காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய நிலைமைகளில், கடற்கரையை (சுற்றுலாப் பயணிகள் வெய்யிலை அனுபவிப்பதற்கும், மீனவர்கள் தமது படகுகளை நிறுத்தி வைப்பதற்கும்) உபயோகிப்பது தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர்களுக்கும் உள்ளூர் மீனவ சமூகங்களுக்குமிடையே தகராறுகள் எழுகின்றன. போக்குவரத்து மற்றும் இருப்பிட வசதி என்பவற்றின் மீதான நெருக்குதல்களும் பிரச்சினைகளை எடுத்து வர முடியும். மேலும், சுற்றுலாத் துறை பாரிய அளவிலான வேலை வாய்ப்புக்களை வழங்கி வரும் குறிப்பிட்ட சில பிரதேசங்களில், பண்ணைத்தொழில் போன்ற பாரம்பரிய நடவடிக்கைகள், ஊழியப் பற்றாக்குறை மற்றும் இட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சுற்றுலாத்துறையிலிருந்து வரும் போட்டி என்பன காரணமாக வீழ்ச்சி அடைய முடியும்.

சுற்றுலாப்பயணிகள், தம்முடன் தமது சமூக விழுமியங்களையும் வழக்கங்களையும் எடுத்து வருகின்றார்கள்; இவை எமது உள்நாட்டு கலாச்சார விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் பாதிக்க முடியும். மக்களின் வாழ்க்கை முறை – அவர்களுடைய பண்பாடும் பாரம்பரியங்களும் – இயற்கை பாரம்பரியங்களைப் போலவே பெறுமதி மிக்கவையாக இருந்து வருகின்றன. போதை வஸ்துப் பாவனை, விபச்சாரம் மற்றும் அத்தகைய நடவடிக்கைகள் போன்ற சமூக விரோத தாக்கங்களினால் அவர்களுடைய வாழ்க்கை மாதிரி திசை திருப்பப்பட்டால், அந்தச்சமூகம் வெகு விரைவில் சீர்குலைந்து போய்விடும். மேலும், முன்னர் இறுக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்த ஆரோக்கியமான கிராமிய வாழ்க்கை வெகுவிரைவில் ஒரு தரிசு நிலமாக மாற்றமடைந்து விடும். பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அளவு ரீதியாக மதிப்பிட்டு, துல்லியமாக கணித்துக் கொள்ள முடியும். எனினும், அகவயமானவையாகவும், தர ரீதியானவையாகவும் இருந்து வரும் சமூக மற்றும் கலாச்சார மாற்றங்களை அளவிடுவது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும்.

**சுற்றுச்சூழல் அம்சங்கள்**

சுற்றுச்சூழல் மீதான சுற்றுலாத் துறையின் தாக்கம், பெருமளவுக்கு, 'பயணிகள் தாக்கத்தினை' உறிஞ்சிக் கொள்வதில் விருந்தோம்பும் நாடு பெற்றிருக்கும் ஆற்றலி லேயே தங்கியுள்ளது. சில அமைவிடங்கள் உயர் அளவிலான சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகளை சமாளித்து நின்று, தாக்குப் பிடிக்கக் கூடியவையாக இருந்து வருகின்றன. அதேவேளையில், வேறு சில அமைவிடங்கள் இதனை விடக் குறைந்த மட்டத்திலான நடவடிக்கைகளி னாலும் கூட எளிதில் பாதிப்புறக் கூடிய அமைவிடங்களாகக் காணப்படுகின்றன. இது அந்தந்த அமைவிடத்தின் சுற்றுச்சூழல் அல்லது உயிரினவியல் சூழல் கொள்திறனிலேயே தங்கியுள்ளது. சுற்றுச் சூழல் கொள்திறன் என்பது, ஓர் அமைவிடம் தாங்கிக் கொள்ளக்கூடிய ஆக உச்ச மட்டத்திலான சுற்றுலா நடவடிக்கைகளை குறிக்கின்றது. அந்த மட்டத்திலும் பார்க்க மிதமிஞ்சிய அளவில் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் இடம் பெறும்பொழுது, அந்த அமைவிடங்கள் அவற்றின் கவர்ச்சியை இழந்து, சீரழிவுக்கு உள்ளாகின்றன. அதன் பின்னர் இடம் பெறும் சுற்றுலா நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட பகுதியின் தாவரங்களையும், விலங்குகளையும் பாதிக்கக்கூடியவையாக இருந்து வர முடியும். பௌதீக நிலப் பரப்பின் இயல்பு, குறிப்பாக, அதன் தாவரங்கள் மண்வகைகள் மற்றும் இயற்கைச் சூழல் என்பன உயிரினவியல் சூழலின் முக்கிய கூறுகளாக இருந்து வருகின்றன. பெருந்தொகையான மக்கள் அடிக்கடி சிங்கராஜ வனத்துக்கு பிரயாணங்களை மேற்கொண்டு வருவதன் விளைவாக, அந்த வனப்பிராந்தியத்தின் உயிரினவியல் சூழல் தொகுதிக்கு இப்பொழுது அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென எச்சரிக்கை குறிப்பொன்று விடுக்கப் பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், சுற்றுலாத் துறை சுற்றுச்சூழலின் மீது சாதகமான தாக்கங்களையும், அதேபோல பாதகமான தாக்கங்களையும் கொண்டுள்ளது. பல சாதகமான அம்சங்கள் இருந்து வருகின்றன; சுற்றுச்சூழல், வரலாற்று அமைவிடங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் வனவிலங்குத் தொகுதி என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழி முறைகளை சுற்றுலாத்துறை தூண்டிவிட முடியும். உதாரணமாக, யால வனவிலங்கு சரணாலயத்தில் அறவிடப்பட்டு வரும் நுழைவுக் கட்டணத்தில் ஒரு பகுதி, இந்த சரணாலயத்தை பராமரிப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் என செலவிடப்பட்டு வருகின்றது. இலங்கையின் கலாச்சார முக்கோணப் பிரதேசத்தில் அமைந்துள்ள மனித குலத்தின் மகத்தான கலாச்சார பாரம்பரிய சொத்துக்களை பேணிப் பாதுகாத்துக் கொள்ளல் தொடர்பான யுனெஸ்கோவின் அக்கறை, பெருந்தொகையான மக்கள் புராதன நாகரிகங்களின் இந்த அழியாத நினைவுச் சின்னங்களை வந்து பார்வையிடுவதனை சாத்தியமாக்கியுள்ளது. இது

## ஹிக்கடுவையில் சுற்றுலாத்துறை

ஹிக்கடுவ, சுற்றுலாக் கைத்தொழிலுடன் பெருமளவுக்கு பின்னிப் பிணைந்துள்ள ஓர் அமைவிடமாக இருந்து வருகின்றது. நாட்டின் பிரதான சுற்றுலா மையமொன்றாக அது வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அழகான கரையோரம், கடற்கரைகள், கடல்வாழ் உயிரினம் மற்றும் பவளப் பாறைகள் என்பன அதன் பிரதான கவர்ச்சி அம்சங்களாக இருந்து வருகின்றன. ஹிக்கடுவ, பெருமளவுக்கு செறிவான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்ட, இலங்கையின் மிக முக்கியமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. அதன் சுற்றுலா வர்த்தகத்துறை பாரிய ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான கடைகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. நாட்டின் தென்மேற்குக் கரையோர வலயத்தில் அமைந்துள்ள இந்த நகரத்தில், சுற்றுலாத்துறையே முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்துவருகின்றது.

சுற்றுலாத்துறை 1992 இல் ஹிக்கடுவையில் 4.6 கோடி ரூபா சம்பாத்தியத்தை பெற்றுக் கொடுத்துள்ளதென்றும் இங்கு வசிக்கும் குடும்பங்கள் மேலும் 4.9 கோடி ரூபா சம்பாத்தியங்களை பெற்றுக் கொண்டுள்ளன என்றும், ஊழியர்களுக்கான வேதனங்கள் என்ற முறையில் மேலும் 60 இலட்சம் ரூபா ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் அண்மைய ஆய்வொன்று எடுத்துக்க காட்டியிருந்தது. இது தவிர, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வரி மற்றும் உரிமம் வழங்கும் கட்டணங்கள் என்பவற்றின் வடிவிலும், அஞ்சல் திணைக்களத்துக்கு முத்திரை விற்பனைகளின் வடிவிலும், ரெயில்வே திணைக்களத்துக்கு டிக்கட் விற்பனைகளின் வடிவிலும் பெருமளவுக்கு நிதிசார் அனுகூலங்கள் கிடைத்து வருகின்றன. இவை தவிர, அப்பகுதியில் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களின் மறைமுகமான அனுகூலங்களும், மறைமுகமான வேலை வாய்ப்புக்களும் கிடைத்து வருகின்றன.

சுற்றுச்சூழல் மூலவளங்களின் உபயோகத்தின் மீது சுற்றுலாக் கைத்தொழில் பெருமளவிலான நிர்ப்பந்தங்களை எடுத்து வந்துள்ளது என்பது இங்கு அவதானிக்கப்பட்டுள்ளது. இது சேதங்கள், சீரழிவு மற்றும் சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு என்பவற்றுக்குத் தவிர்க்கமுடியாத வகையில் வழிகோலியுள்ளது. சுற்றுச்சூழலின் மீது சுற்றுலாக் கைத்தொழில் எடுத்து வரும் மிக மோசமாக தாக்கங்கள் குறித்த ஒரு சில உதாரணங்களை இங்கு எடுத்துக்காட்ட முடியும். குறிப்பிட்ட சில சுற்றுலா வர்த்தக நிலையங்களினால் கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருள் என்பன கடற்கரையிலும் கடலிலும் விடப்படுகின்றன. பவளப்பாறைகளைப் பார்ப்பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் கண்ணாடி அடிப்பாகத்தைக் கொண்ட படகுகளை உபயோகித்து வருவதனால் அப்பாறைகள் சேதமடைகின்றன. சில பயணிகள் பவளப் பாறைகளை நன்றாக பார்ப்பதற்காக படகிலிருந்து கீழ இறங்குகின்றார்கள்; இதனாலும் பவளப் பாறைகளுக்கு சேதம் ஏற்படுகின்றது. மேலும், பயணிகளுக்கு விற்பனை செய்வதற்காக பவளப் பாறைகள் சட்டவிரோதமாக அகற்றப்படுகின்றன. சுற்றுலாத்துறை அதன் சொந்த மூலவள அடித்தளத்தின் மீது - அதாவது, சுற்றுச்சூழலின் மீது - நிர்ணயகரமான தாக்கங்களை எடுத்து வருவதற்கான உதாரணங்களாக இவற்றைக் கூற முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஹிக்கடுவையில் சுற்றுலாக் கைத்தொழில், அதன் நீண்டகால உயிர் வாழ்க்கைக்கு சவால் விடுத்து வருகின்றது. சுற்றுச்சூழல் மூலவளங்கள் புறக்கணிக்கப்படுவதன் மூலமும், பொருத்தமற்ற முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதன் மூலமும் இந்த சவால் முன் வைக்கப்படுகின்றது.

ஹிக்கடுவையில் சுற்றுலாத்துறை எடுத்து வந்துள்ள மிக மோசமான சமூகத் தாக்கங்கள் குறித்து ஒருவர் வாதிட முடியும். எனினும், மேலே எடுத்துக் காட்டப்பட்ட நேரடியான மற்றும் மறைமுகமான அனைத்து நிதிசார் அனுகூலங்களும், சுற்றுச்சூழல் மூலவளங்களைப்பாதுகாத்து, சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. சுற்றுலாத்துறை நோக்கங்களுக்காக சுற்றுச்சூழல் மூலவளங்களை பொருத்தமான முறையில் பயன்படுத்துவதானது, சுற்றுலாத்துறையின் நிலைத்து நிற்கக்கூடிய ஆற்றலை உத்தரவாதப்படுத்துவதுடன், நீண்ட காலத்தில் உச்சமட்ட பொருளாதார அனுகூலங்களை ஈட்டிக்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும்.

மறைமுகமாக சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தி வருகின்றது.

சுற்றுலாத்துறையின் எதிர்மறையான அம்சங்கள் முன்னர் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எனினும், இன்னொரு முக்கியமான விடயத்தினையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது; இப்பொழுது உலகில் படிப்படியாக அழிவுக்கு உள்ளாகிக் கொண்டு வரும் தாவரங்கள், விலங்கு வகைகள், மூலிகைகள் மற்றும் மீன் வகைகள் போன்றவற்றிலான வியாபாரத்தில் பெரும் பகுதி சர்வதேச சுற்றுலாத் துறையுடனேயே பெருமளவுக்கு சம்பந்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலின் மீது சுற்றுலாத்துறை எடுத்து வரும் தாக்கம் குறித்த ஒவ்வொரு ஆய்வும் ஒரே செய்தியையே முன்வைத்து வருகின்றன. சுற்றுலாத்துறை பாரிய அளவிலான பொருளாதார ஆற்றலைக் கொண்டுள்ளது; ஆனால், இந்தத் துறையின் வேண்டாத விளைவுகளை தவிர்த்துக் கொள்ளும் அதேவேளையில், இதிலிருந்து உச்சமட்ட பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் இதனை முறையாகத் திட்டமிட்டு, நிர்வகித்து வர வேண்டும்.

### உள்நாட்டு சுற்றுலாத்துறை

ஒரு சுற்றுப்பயணி என்பவர், இலங்கையைப் பொறுத்தமட்டில், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் ஒரு பயணியாகக் கருதப்படுகின்றார். தமது சொந்த நாட்டுக்குள் பயணங்களை மேற்கொண்டு வரும் பிரஜைகள் இந்தப் பதத்தினால் மிக அரிதாகவே சுட்டப்பட்டு வருகின்றனர். உலகின் பல பாகங்களில் சொந்த நாட்டுக்குள் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் உள்நாட்டு சுற்றுலாத்துறை பெருமளவுக்கு ஜனரஞ்சகம் பெற்று வருகின்றது. அமெரிக்கர்கள், ஒவ்வொரு 100 உள்நாட்டுப் பயணங்களுக்கும் ஒரு வெளிநாட்டுப் பயணத்தினை மட்டுமே மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதும், பிரித்தானியர்கள் 1980 களின் நடுப்பகுதியில் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணம் தொடர்பாகவும் ஆறு உள்நாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்த வரையில், விடுமுறைக் காலங்களின் போது நாட்டுக்குள் சுற்றுலாக்களை மேற்கொண்டு வரும் பிரஜைகளின் எண்ணிக்கையை

மதிப்பிட்டுக் கொள்வதற்கு போதிய தரவுகள் கிடைப்பதில்லை.

இலங்கையர்கள் பொதுவாக யாத்திரைகள், விடுமுறை/குடும்ப சுற்றுலாப் பயணங்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது கல்வி/இடங்களைப் பார்க்கும் பயணங்கள் என்பவற்றை மேற்கொள்வதற்கு விரும்புகின்றார்கள். போக்குவரத்து மற்றும் தங்குமிடச் செலவு, அத்துடன் நாட்டின் சில பாகங்களில் தற்பொழுது நிலவி வரும் பாதுகாப்பற்ற நிலை என்பன இத்தகைய பயணங்கள் அடிக்கடி மேற்கொள்ளப் படுவதற்கு இடையூறுகளாக இருந்து வருகின்றன. குறிப்பாக, செல்வ வசதி மிகுந்த சமூகப் பிரிவினரிடையே நாட்டுக்குள் மேற்கொள்ளப்படும் விடுமுறைப் பயணங்கள் இப்பொழுது பெருமளவுக்கு அதிகரித்து வருகின்றன. இத்தகைய பிரிவினர் கடற்கரை சுற்றுலாத் தலங்களை பெரிதும் விரும்பிச் செல்கின்றனர். மேலும், வெளிநாட்டுப் பயணிகள் வரத்து குறைவாக இருந்து வரும் காலங்களில், ஹோட்டல்கள் தமது கட்டணங்களைக் குறைத்துக் கொள்வதனால், இத்தகைய பயணிகள் இந்த ஹோட்டல்களில் சிறிது காலத்துக்கு தங்கியிருக்கவும் விரும்புகின்றனர். செலவிடுவதற்கு போதியளவில் பணத்தை தம்மிடம் வைத்திராதவர்கள், பொதுவாக ஒருநாள் பயணங்களை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சீகிரியா, பேராதனை பூங்கா, தெகிவலை விலங்குக் காட்சிச் சாலை மற்றும் பொதுப் பூங்காக்கள் போன்ற இடங்களுக்கு அவர்கள் சென்று வருகின்றனர். பெரும்பாலான பயணங்கள் பாடசாலை விடுமுறைக் காலங்கள் அல்லது வருடத்தின் குறிப்பிட்ட சில காலப்பிரிவுகளில் (ஏப்ரல் மாதத்தில் நுவரெலியா; மார்ச்சுக்கும் ஜுலைக்குமிடையில் சிவனுலிபாத மலை; ஆகஸ்டில் கதிர்காமம்; ஜுனில் அநுராதபுரம்) பயணங்களை மேற்கொள்கின்றனர்.

## சுற்றுலாத் துறையை சந்தைப்படுத்துதல்

ஒரு சேவையை சந்தைப்படுத்துவதானது, ஒரு பொருளை விற்பனை செய்வதிலிருந்தும் வேறுபட்டதாகும். அடிப்படையில், ஒரு சேவைத் துறையாக இருந்துவரும் சுற்றுலாத்துறைக்கும் இது பொருந்து கின்றது. சுற்றுலாத் துறையின் சந்தைப்படுத்தலில் இரண்டு பிரதான குணாம்சங்கள் மேலோங்கி உள்ளன: (1) இங்கு உற்பத்தி நடவடிக்கையும் நுகர்வும் ஒரே நேரத்தில் ஸ்தலத்திலேயே இடம் பெறுகின்றது: அதாவது, விமானமொன்றுக்குள் அல்லது வாடகைக்கார் ஒன்றுக்குள் அது இடம் பெறுகின்றது. நுகர்வோரின் வீட்டுச் சூழ்நிலையில் இடம் பெறுவதில்லை; (2) இந்த சேவை அல்லது உற்பத்தி குறிப்பிட்ட நாளில் விற்பனை செய்யப் படாவிட்டால், அந்த நாளில் கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டு விடுகின்றது. அதனை மீண்டும் அறவிட்டுக் கொள்ள முடியாது. உதாரணமாக, ஓர் ஹோட்டல் அறையின் ஓர் இரவுக்கான செலவு ரூபா 500 ஆக இருந்து வந்தால், வருடமொன்றுக்குக் கிடைக்கக் கூடிய மொத்த வருமானம் (365 × 500) ரூ.182,500 ஆகும். இந்த அறை 6 மாத காலத்துக்கு பயன்படுத்தப்படாதிருந்தால், கிடைக்க வேண்டிய வருமானத்தில் அரைவாசிப் பகுதி இழக்கப்பட்டு விடும். அந்த நட்டத்தினை அவ்வாண்டுக்குள் நிவர்த்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பில்லை.

சேவைகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் பௌதீகப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளிலிருந்து மேலும் இரண்டு வழிகளில் வேறுபடுகின்றன: (1) தனித்தன்மை : அதாவது ஒவ்வொரு சேவை செயலாற்றமும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சேவை உற்பத்தியாளருக்கும் தனித்துவமானதாக இருந்து வருகின்றது; (2) தொட்டறிய முடியாத தன்மை : அதாவது, பெரும்பாலான சேவைகளை அவற்றின் செயலாற்றத்துக்கு முன்னர் விற்பனைக் கட்டத்தில் எளிதில் அளவிடவோ தொடவோ அல்லது மதிப்பீடு செய்து கொள்ளவோ முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பல சேவை உற்பத்திகள் அருவமான தன்மையைக் கொண்டிருப்பதுடன், அவற்றைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் உள்ளங்களினால் அனுபவிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, பிரயாண மற்றும் சுற்றுலா சேவையுடன் சம்பந்தப்பட்டுள்ள வேறு மூன்று சிறப்பம்சங்களும் இருந்து வருகின்றன: பருவகாலத் தன்மை; அதாவது ஆண்டின் வெவ்வேறு பருவங்களின் போது சுற்றுலா சேவைகளுக்கான கேள்வியில் தளம்பல் ஏற்பட்டுச் செல்கின்றது: (2) ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை; பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றில் ஒரு தெரிவினை மேற்கொள்வதற்கு விரும்புகின்றார்கள்; இது ஒரு சில சுற்றுலாத் தலங்களை ஏனையவற்றிலும் பார்க்க ஜனரஞ்சகமானவையாக மாற்றி விடுகின்றது: (3) சேவைத் தொழிற்பாடுகளின் உயர் அளவிலான நிலையான செலவு: பெரும்பாலான பிரயாண மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளின் இலாப நட்டக் கணக்குகள் சார்புரீதியில் உயர் அளவிலான நிலையான செலவுகளை எடுத்துக் காட்டுகின்றன. கிடைக்கக் கூடியதாக இருக்கும் கொள்திறனை இயக்குவதில் இச் செலவுகள் ஏற்படுகின்றன. மேலும், இத்தொழில் முயற்சிகளின் மாறும் செலவுகள் சார்புரீதியில் குறைவாக இருந்து வருகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றில் நீச்சல் தடாகமொன்றை நிர்மாணிப்பதற்கான செலவு ஓர் உதாரணமாகும்.

சந்தை முகாமைத்துறையில், பொதுவாக ஒரு 'சந்தைப்படுத்தல் கலவை' வலியுறுத்தப்பட்டு வருகின்றது. சுற்றுலாத் துறையின் வர்த்தகத்துக்கும் இது பொருந்துகின்றது: இவை வழமையாக நான்கு 'P' கள் என குறிக்கப்படுகின்றன: உற்பத்தி (Product), விலை (Price), இடம் (Place) மற்றும் மேம்பாடு (Promotion). சேவைத் துறை உற்பத்திகளைப் பொறுத்தவரையில், இவற்றுக்கு மேலதிகமாக இன்னும் மூன்று காரணிகள் இருந்து வருகின்றன: மக்கள் (எண்ணிக்கை, பயிற்சி, மனப்பாங்குகள்) பௌதீக வடிவமைப்பு (தளவாடங்கள், வர்ணம், ஒளி, ஒலி; மற்றும் படிமுறை (வாடிக்கையாளர் ஈடுபாடு, சேவைகளை வழங்குவதில் உற்பத்தியாளர்களின் ஈடுபாடு. அடுத்து வரும் பகுதியில், இலங்கையின் பிரயாண மற்றும் சுற்றுலா வர்த்தகத்தின் சந்தைப்படுத்தல் அம்சங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

## பருவகாலம்

நாட்டுக்குள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வரத்து பருவகால அடிப்படையிலேயே இடம் பெற்று வருகின்றது. பிரதான பருவம் நவம்பர் தொடக்கம் மார்ச்/ஏப்ரல் வரையில் காணப்படுகின்றது; டிசம்பர் மாதமே உச்ச கட்டமாக கருதப்படுகின்றது. அக்காலத்தில் ஐரோப்பாவில் நிலவி வரும் மிகக்

# சுற்றுலா அபிவிருத்திக்கான பெருந்திட்டம் (1992 - 2001)

உலக சுற்றுலா நிறுவனத்துடன் ஐ.நா.அபிவிருத்தித்திட்டம் மேற்கொண்ட நாடுகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பாகமாக இருந்த ஓர் ஆய்வின் விளைவாகவே சுற்றுலாக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கான பெருந்திட்டம் (1992 - 2001) உருவாகியது. உலக சுற்றுலா நிறுவனம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராகம் என்ற முறையில், இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக, இது குறித்து ஏற்கனவே அனுபவம் பெற்றிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனமொன்றை (ஹொவார்த் கன்ஸல்டிங்) அமர்த்தியது. சர்வதேச ஆலோசகர்களுக்கு உள்நாட்டு ஆலோசகர் குழுவொன்றும், இலங்கை சுற்றுலா சபையைச் சேர்ந்த ஆலோசகர்களும் உதவியாக இருந்தனர். இந்தத் திட்டம் இரண்டு பிரதான குறிக்கோள்களைக் கொண்டிருந்தது: (1) இலங்கையில் சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக நீண்டகால, அனைத்துமடங்கிய உபாய ரீதியான பெருந்திட்டமொன்றை உருவாக்குதல்; (2) நீண்டகால செய்திட்டத்தின் கட்டமைப்புக்குள் தேவைப்படும் முன்னுரிமை நடவடிக்கைகளை இனங்கண்டு, ஐந்து வருடகால சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்.

இந்த ஆய்வு 1991 செப்டெம்பர் மாதம் தொடக்கம் 1992 நவம்பர் மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்டதுடன், இறுதி அறிக்கை 1993இல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பெருந்திட்டத்தின் இறுதி அறிக்கை நான்கு பாகங்களைக் கொண்டுள்ளது: பாகம் 'அ' பின்னணி மற்றும் தற்போதைய நிலை என்பவற்றையும், பாகம் 'ஆ' நீண்டகால உபாய ரீதியான திட்டம் குறித்தும், பாகம் 'இ' ஐந்தாண்டு (1992 - 1996) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் குறித்தும், பாகம் 'ஈ' நான்கு தெரிவு செய்யப்பட்ட சுற்றுலா செய்திட்டங்களுக்கான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றிலும் கவனம் செலுத்துகின்றன. பெருந்திட்டத்தின் இறுதி அறிக்கைக்கு ஆதரவாக, விரிவான முறையில் அமைந்த 14 தொழிநுட்ப அறிக்கைகள், நான்கு தொகுதிகளைக் கொண்ட ஓர் ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் தொகுதி 1 சுற்றுலாப் பயணிகளுக்கான கவர்ச்சிகள், சுற்றுலா வசதிகள், சேவைகள் மற்றும் நிலப்பாவனைத் திட்டமிடல் என்பன குறித்த ஒரு விவரப் பட்டியலைத் தருகின்றது. தொகுதி 2 சந்தைப்படுத்தல், உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் என்பன தொடர்பான விபரங்களை முன்வைக்கின்றது. போக்குவரத்து, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார அம்சங்கள் தொகுதி 3 இல் விளக்கப்பட்டுள்ளன. தொகுதி 4 மனித சக்தி வளங்கள், நிறுவன அமைப்பு மற்றும் சட்டவாக்கம், அபிவிருத்தி நியமங்கள் மற்றும் வடிவமைப்பு வழிகாட்டு நெறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இந்தப் பெருந்திட்டத்தின் எதிர்பார்ப்புக்கள்: (1) 2001ஆம் ஆண்டளவில் விமான மூலம் 874,000 சர்வதேச சுற்றுலாப் பயணிகளை எடுத்து வருவதற்கான உச்சமட்ட குறியிலக்கு; (2) 2001 ஆம் ஆண்டளவில் நாளாந்த சுற்றுலாப் பயணிகளின் செலவினத்தை (43 அ.டொலர்களிலிருந்து) 86 அ.டொலர்களாக அதிகரித்துக் கொள்ளல்; (3) சுற்றுலாத்துறை மூலமான வருவாய்களை 1991 இன் அளவிலான 15.6 கோடி அ.டொலர்களிலிருந்து 2001 இல் 70.6 கோடி அ.டொலர்களாக அதிகரித்துக் கொள்ளல்: இந்த வருவாய்களில் சுமார் 70 சதவீதம் நாட்டுக்குள் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு செலாவணி செலவினம் 30 சதவீதமாகவே இருந்து வருகின்றது; (4) ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை 1992இன் அளவான 9,679 லிருந்து 2001இல் 18,953 ஆக இருமடங்காக அதிகரித்துக் கொள்ளல்; (5) சுற்றுலாத்துறையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கையை 1990 ஆம் ஆண்டின் எண்ணிக்கையான 54,000 இலிருந்து 2001 இல் 136,000 ஆக 155 சதவீதமாக அதிகரித்துக் கொள்ளல்; (6) அரசாங்க வரவு செலவுத்திட்டத்துக்கான சுற்றுலாத் துறையின் பங்களிப்பில் உண்மை நியதிகளில் 500 சதவீதத்துக்கு மேற்பட்ட அதிகரிப்பினை எடுத்து வருதல்: அதாவது, 1993 இல் 98.3 கோடி ரூபாவிலிருந்து 2001 இல் 617.1 கோடி ரூபாவாக அதிகரித்துக் கொள்ளல்.

இந்தப் பெருந்திட்ட அறிக்கை பின்வரும் நீண்டகால உத்திகளை, யோசனைகளாக முன் வைத்துள்ளது: (1) பல்வேறுவிதமான சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தைப் பிரிவுகளுக்கும், ஒருநாள் பயணிகளுக்கும் வசதிகளையும் சேவைகளையும் வழங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திகள்; (2) தற்போதைய சுற்றுலாப் பிரதேசங்களை அனைத்துமடங்கிய, ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வழிமுறைக்கூடாக புனருத்தாரணம் செய்து, மேம்படுத்துதல்; (3) பிரதான கலாச்சார, வரலாற்று மற்றும் வனவிலங்கு கவர்ச்சி மையங்களை உள்ளடக்கிய சுற்றுலாக் கவர்ச்சி மையங்களை அபிவிருத்தி செய்தல்; (6) ஏனைய வகைகளில் உள்ளடக்கப் படாதிருக்கும் உள்நாட்டு சுற்றுலா வசதிகளை வழங்குதல்.

ஐந்தாண்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நீண்டகால உபாய ரீதியான திட்டத்தின் முன்னுரிமை அம்சங்களை உள்ளடக்குகின்றது. இந்த முன்னுரிமை அம்சங்கள் முதல் ஐந்தாண்டு காலப்பிரிவின் போது கவனத்தில் எடுக்கப்படும். பெருந்திட்டத்தின் அமுலாக்கலினை திட்டமிட்டு, மேற்பார்வை செய்வதற்கென உயர்மட்ட அமுலாக்கல் குழு ஒன்று நியமனம் செய்யப்பட வேண்டும் என சிபார்சு செய்யப்பட்டுள்ளது. நீண்டகால உபாய ரீதியான திட்டம் மற்றும் ஐந்தாண்டு அபிவிருத்தி நிகழ்ச்சிட்டத்தின் தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அருகம் குடா - பொத்துவில், உனவட்டுனை- காலி, விக்டோரியா - கண்டி மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்கள் தொடர்பாக நான்கு மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடுமையான குளிர் சுவாத்தியத்தை தவிர்த்துக் கொள்வதற்காக, பெரும்பாலான ஐரோப்பியர்கள் இங்கு வருகின்றார்கள். இரண்டாவது உச்ச கட்டம் ஜூலை/ஆகஸ்டில் இடம் பெறுகின்றது. செப்டம்பர்/அக்டோபர் காலத்தில் பயணிகளின் வரத்து மிதமான அளவில் இருக்கும் மே/ஜூன் பயணிகள் வரத்து மிகவும் குறைவாக இருந்துவரும் பருவமாகும். பிந்திய மே மாதத்திலிருந்து ஜூலை வரையில் மேற்குக் கரை பருவக் காற்று வீசும் காலப் பிரிவாக இது இருந்து வருவதும் இதற்கு ஓரளவு காரணமாகவுள்ளது.

## அறைகளில் தங்குதல்

தரப்படுத்தப்பட்ட இருப்பிட வசதி மட்டங்கள் 1967இல் 35 சதவீதமாக இருந்து, 1980களில் 58 சதவீதமாக அதிகரித்திருந்தன. இது நடு 1980 களில் 35 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன், தற்பொழுது 48 சதவீத மட்டத்துக்கு மீட்சி கண்டுள்ளது.. சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பருவகால தன்மையினால் ஹோட்டல் அறைகளில் தங்கும் மட்டங்கள் பாதிப்படைந்து வருகின்றன. 1991/92 குளிர் காலத்தின் போது, சுற்றுலா சபையின் ஒப்புதல் பெற்றுள்ள அனைத்து ஹோட்டல்களிலும் பயணிகள் அறைகளை உபயோகப்படுத்தும் விகிதம் 53.4% ஆக இருந்தது. இது 1989/90 மற்றும் 1990/91 ஆகிய காலப்பிரிவுகளில் முறையே 47.2%, 48.4% எனக் காணப்பட்டன.

மேலும், உபயோகப்படுத்தப்படும் அறைகளின் மட்டங்களில் பிராந்திய ரீதியான ஏற்றத்தாழ்வுகளும் இருந்து வருகின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் ஹோட்டல் அறை வசதிகள் துரிதமாக பெருக்கமடைந்து வந்ததன் விளைவாக, 1979 தொடக்கம் 1984 வரையிலான ஒவ்வொரு ஆண்டின் போதும், கொழும்பு நகர ஹோட்டல்களில் அறைகளின் உபயோக வீதங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வந்துள்ளன. கடந்த 4 வருட காலத்தின் போது ஓரளவுக்கு மீட்சி (1991 ல் 48.8%) ஏற்பட்டிருந்த போதிலும், 1980 களின் தொடக்கத்தில் கட்டி முடிக்கப்பட்ட தலைநகரின் சொகுசு ஹோட்டல்களில் அறை உபயோக மட்டத்தின் உச்சப்புள்ளி, நீண்டகாலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கரையோர மற்றும் உள் பிராந்திய நிறுவனங்களின் மட்டத்திலும் பார்க்க

அட்டவணை 3

**பிரதான ஏற்றுமதித் துறைகளின் நிலையில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்கள் 1982 - 1991**

| பொருட்கள் மற்றும் சேவைகள் | மொத்த அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களில் % | | |
|---|---|---|---|
| | 1982 | 1987 | 1992 |
| தேயிலை, இறப்பர் தேங்காய் | 47.35 | 38.22 | 19.56 |
| சிறு வியாபாரப் பொருட்கள் | 6.97 | 4.17 | 4.4 |
| கைத்தொழில் பொருட்கள் | 24.33 | 42.76 | 60.95 |
| பெறுமதிவாய்ந்த, ஓரளவு பெறுமதி வாய்ந்த கற்கள் ஏனையன | 7.11 | 8.97 | 7.16 |
| சுற்றுலாத்துறை | 14.22 | 5.87 | 7.91 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 |

உயர்வானதாக இருந்தது. புராதன நகரங்களில் அமைந்திருந்த ஹோட்டல் அறைகளின் பயன்பாட்டு மட்டம் 1991 இல் உயர்ந்த சதவீதத்தினை (51.6%) பதிவு செய்திருந்தது. எனினும், வெவ்வேறு இடங்களில் கேள்வி வேறுபட்டுச் செல்கின்றது. அதாவது, கண்டி, கிரிதலே, சீகிரியா மற்றும் ஹபரனை ஆகிய இடங்களில் உயர்ந்த அளவில் கேள்வி நிலவி வருவதுடன், அநுராதபுரத்திலும் பொலனறுவையிலும் இது குறைவான மட்டத்தில் நிலவி வருகின்றது.

சுற்றுலாப் பயணிகளில் ஆகக் கூடிய விகிதத்தினர் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தே இங்கு வருகின்றார்கள். சுற்றுலாத் துறையில் ஒரு செழிப்பு நிலை நிலவிவந்த 1980 களின் தொடக்கத்தில், நாட்டுக்குள் வருகை தந்த மொத்தப் பயணிகளில் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்டவர்கள் இப்பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்து வந்தனர். தற்பொழுது மொத்தப் பயணிகளில் இவர்களின் அளவு சுமார் 60 சதவீதம் வரையில் காணப்படுகின்றது. ஆசியா, இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் இரண்டாவது மிகப்பெரிய பிராந்தியச் சந்தையாக இருந்து வருகின்றது. ஆசியாவின் பங்கு இப்பொழுது அதிகரித்து வருவதுடன் அது முதல் தடவையாக 30 சதவீதத்தினை தாண்டிச் சென்றுள்ளது. வட அமெரிக்காவின் சந்தைப் பங்கு அண்மைய வருடங்களில் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் விதித்த சட்டவாக்கங்களும் மோசமான விமானத்தொடர்பு வசதிகளுமே இந்த வீழ்ச்சியை எடுத்து வந்துள்ளன.

கடந்த இரண்டு தசாப்த காலம் முழுவதிலும் ஜேர்மனி, இலங்கைக்கான சுற்றுலா பயணிகளுக்கான பிரதான மூலமொன்றாக இருந்து வந்துள்ளது. 1980 இல் அதன் சந்தைப்பங்கு ஆக உச்ச மட்டமான 23 சதவீதமாக இருந்து வந்ததுடன், அது தற்பொழுது 20 சதவீதமாக குறைவடைந்துள்ளது. இரண்டாவது மிகப் பெரிய சந்தையான பிரான்ஸின் பங்கு சமீப வருடங்களில் கணிசமான அளவில் தளம்பிச் சென்றுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் பங்கு அநேகமாக 8 சதவீதத்துக்கும் 10 சதவீதத்துக்கும் இடையே தொடர்ச்சியாக நிலைத்து வந்துள்ளது. இலங்கையின் சுற்றுலா கைத்தொழிலுக்கான சந்தைகள் என்ற முறையில் இத்தாலியும், நெதர்லாந்தும் அவற்றின் முக்கியத்துவத்தினை இப்பொழுது அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஆசியாவைப் பொறுத்தமட்டில், ஜப்பான் துரித வளர்ச்சி கண்டுவரும் சந்தையாக இருந்து வருகின்றது. ஜப்பானின் சந்தைப் பங்கு 1991 இல் 7 சதவீதமாக இருந்தது.

## தங்கும் காலம்

இலங்கைக்கான வெளிநாட்டுப் பயணிகளின் சராசரி தங்கும் காலம் பத்து/பதினொரு இரவுகளாகும். ஏனைய நாட்டவர்களுடன் ஒப்பிடும் பொழுது, மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள் நீண்டகாலம் இங்கு தங்குகின்றனர். ஆசியர்கள் குறுகிய பயணங்களையும் (8.3 இரவுகள்), ஜப்பானியர்கள் குறிப்பாக மிகக் குறுகிய பயணங்களையும் (5.1 இரவுகள்)

அட்டவணை 4

சுற்றுலாப் பயணிகள் வருகை, வருவாய் மற்றும் தொழில்வாய்ப்பு

| வருடம் | வருகை தந்த பயணிகள் | உத்தியோகபூர்வ வருவாய் | | வேலை வாய்ப்பு | |
|---|---|---|---|---|---|
| | | ரூ.பத்து இலட்சம் | சி.ஐ.உ. பத்து இலட்சம் | நேரடி | மறைமுக |
| 1970 | 46,247 | 21.5 | 3.6 | 5,138 | 6,940 |
| 1975 | 103,204 | 1,57.1 | 18.6 | 10,148 | 13,700 |
| 1980 | 321,780 | 1,830.3 | 85.1 | 19,878 | 28,022 |
| 1985 | 257,450 | 2,233.3 | 80.8 | 22,723 | 31,810 |
| 1990 | 297,888 | 5,303.3 | 97.5 | 24,964 | 34,950 |
| 1991 | 317,703 | 6,485.8 | 114.6 | 26,878 | 37,629 |
| 1992 | 393,669 | 8,700.0 | 140.9 | 28,790 | 40,306 |

மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் கணிசமான பிரிவினர் மாலை தீவுக்குச் செல்லும் அல்லது மாலைதீவிலிருந்து புறப்படும் தமது பிரயாணங்களின் போது ஓர் இரவை மட்டும் கொழும்பில் கழிக்கின்றனர். சிக்கனமான விடுமுறையை கழிப்பவர்களைப் பொறுத்தமட்டில் ஹிக்கடுவ மிகச் சிறந்த விடுமுறைத் தலமாக இருந்து வருகின்றது. பயணிகள் தங்குவது தொடர்பான தேசிய சராசரி விகிதத்திலும் இருமடங்கு விகிதத்தினை இப்பகுதி கொண்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்வதன் பிரதான நோக்கம் உல்லாசமாக பொழுதைக் கழிப்பதாகும். விமான நிலையத்தை அடையும் பொழுது, அங்கு வழங்கப்படும் அட்டையில் பயணிகள் தமது வருகைக்கான நோக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விடுமுறை/ உல்லாசம் என தமது நோக்கத்தை குறிப்பிடுபவர்களின் வீதம் கடந்த பத்தாண்டு காலத்தில் 90% க்கும் அதிகமாக இருந்து வந்துள்ளது. வர்த்தக நோக்கங்களுக்காக வந்தவர்கள் 3 தொடக்கம் 6 சதவீதம் வரையில் இருந்து வந்ததுடன், நண்பர்களையும் உறவினர்களையும் பார்ப்பதற்கு வந்தவர்கள் 0.5 தொடக்கம் 1 சதவீதம் வரையில் இருந்தனர். தற்பொழுது பொருளாதாரத்தை மேலும் அதிகளவில் வெளி உலகுக்கு திறந்து விடும் நோக்குடன் அரச கொள்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதனுடன் இணைந்த விதத்தில், நாட்டின் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் வெளிநாட்டினரின் பங்கேற்பு அதிகரித்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தகைய ஒரு சூழ்நிலையில், வர்த்தக நோக்கில் வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து செல்லும்.

**சுற்றுலாத்துறை தொடர்பான கல்வி**

சுற்றுலாத் தொடர்பான கல்வி, இக்கைத்தொழிலின் தொழிற்பாட்டு அம்சங்கள் மற்றும் முகாமைத்துவ அம்சங்கள் என்ற இரு பிரதான பாகங்களைக் கொண்டுள்ளது. இலங்கை சுற்றுலா சபையுடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கை ஹோட்டல் பாடசாலை, சுற்றுலா கைத்தொழிலின் தொழிற்பாட்டு அம்சங்கள் குறித்த கல்விப் போதனைகளை வழங்கி வருகின்றது. அது அதன் 28 வருட கால வரலாற்றில் இலங்கையின் ஹோட்டல் துறையில் சாதகமான ஒரு தாக்கத்தை எடுத்து வந்துள்ளது. ஹோட்டல் மற்றும உணவு வழங்கல் தொழிற்பாடுகள், தொழில்சார் சமையற் கலை, உணவு மற்றும் பானங்கள் தொழிற்பாடுகள், அலுவலக முகப்பு தொழிற்பாடுகள் மற்றும் ஹோட்டலின் உட்பகுதியை பராமரித்து வருதல் போன்ற பாடநெறிகளில் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன.

சுற்றுலாத்துறை வழிகாட்டிகள் இலங்கை சுற்றுலா சபையினால் பயிற்றுவிக்கப்பட்டு, பரீட்சிக்கப்படுகின்றனர். அத்துடன், சபை அவர்களுக்கு தொழில் நடத்துவதற்கான உரிமத்தினையும் வழங்குகின்றது. அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாத்துறை வழிகாட்டிகளாக சுய தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நான்கு வகைகளைச் சேர்ந்த வழிகாட்டிகள் இருந்து வருகின்றனர். தேசிய வழிகாட்டி விரிவுரையாளர்கள், ஓட்டுனர் வழிகாட்டி விரிவுரையாளர்கள், பிரதேச வழிகாட்டிகள் மற்றும் அமைவிட வழிகாட்டிகள். சுற்றுலா சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பயிற்சியினை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட இரு தனியார் நிறுவனங்களும் இருந்து வருகின்றன. கல்கிசையில் அமைந்துள்ள சர்வதேச ஹோட்டல் பாடசாலை, சுவிட்சர்லாந்தின் சர்வதேச ஹோட்டல் முகாமை நிறுவனத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. ஹோட்டல் முகாமை மற்றும் சுற்றுலாத்துறை குறித்த சுவிஸ்/ஏசியன் பாடசாலை என்ற தனியார் பயிற்சி நிறுவனமும் உள்ளது.

பல்கலைக்கழக மட்டத்திலும் சுற்றுலாத் துறை குறித்த பாடநெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் களனிப் பல்கலைக்கழகம் என்பன சுற்றுலாத் துறை தொடர்பான அறிமுக பாடநெறியொன்றை வழங்கி வருகின்றன. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் சபரகமுவாவிலும் வட மத்திய மாகாணத்திலும் அமைந்துள்ள அதன் இணைக்கப்பட்ட இரண்டு கல்லூரிகளுக் கூடாக, இரண்டு வருட டிப்ளோமா பாட நெறி ஒன்றை வழங்கி வருகின்றது. இக் கைத்தொழிலின் அனைத்து அம்சங் களையும் உள்ளடக்கிய பட்டப்படிப்பு பாடநெறி ஒன்றினை அறிமுகப்படுத்து வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**இலங்கையில் சுற்றுலாத்துறையின் திட்டமிடல்**

இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட கால கட்டத்தில் கரிபியன், ஆபிரிக்க மற்றும் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் அமைந்திருந்த பல வளர்முக நாடுகளில் சர்வதேச சுற்றுலாத்துறையில் ஒரு துரித விஸ்தரிப்பு ஏற்பட்டு வந்திருந்த போதிலும், இலங்கையில் இக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 1966ம் ஆண்டிலேயே பயனமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1960 களின் தொடக்கத்தில் நிலவி வந்த பொருளாதாரப் பிரச்சினை களின் நெருக்கடி, கடும் அந்நியச் செலாவணி பற்றாக்குறை வேலையில்லாத் திண்டாட்டத்தின் பெருக்கம் மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சி என்பன அரசாங்கம் இப்பிரச்சினைகள் குறித்து மிகவும் தீவிரமான முறையில் கவனத்தை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை எடுத்து வந்தன. சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி குறித்த அரசாங் கத்தின் கொள்கை, இத்துறை சமூகத்தின

மீதும் சுற்றுச் சூழலின் மீதும் எடுத்துவரக் கூடிய பாதகமான தாக்கங்களை குறைந்தபட்ச மட்டத்தில் வைத்திருக்கும் அதேவேளையில், பொருளாதார நன்மைகளை உச்ச மட்டத்தில் பெற்றுக்கொள்ளும் விதத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. 1968ஆம் ஆண்டின் சுற்றுலா அபிவிருத்திச் சட்டம் சுற்றுலாத்துறையை திட்டமிடப்பட்ட முறையான ஓர் ஒழுங்கில் அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான சட்டபூர்வமான அதிகாரத்தை இலங்கை சுற்றுலா சபைக்கு அளித்தது.

உள்நாட்டுத் தனியார் துறை சுற்றுலாத்துறைத் தொழில் முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்வதனை ஊக்குவிக்கும் ஒரு கொள்கையை அரசாங்கம் கொண்டிருந்தது. தனியார் துறை முதலீட்டாளர்களுக்கும் தொழிற்படுபவர்களுக்கும் பரந்த வீச்சிலான இறை, நாணய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. அதே வேளையில், அரசாங்கம், பல சுற்றுலாத் தலங்களின் அபிவிருத்தியில் முதலீடுகளை இட்டது. தனியார் துறையிடம் போதிய மூலவளங்கள் அல்லது நிபுணத்துவம் காணப்படாதிருந்தமையால், கொழும்பு நகரின் பாரிய ஹோட்டல் அமைப்புத் திட்டங்களிலும் அரசாங்கம் பெருமளவில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. இலங்கை சுற்றுலா சபை, வெளிநாடுகளில் இலங்கையின் சுற்றுலா கவர்ச்சி மையங்கள் தொடர்பாக முறையான, தொடர்ச்சியான ஓர் அடிப்படையில் பிரச்சார முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இது தனியார் துறை தொழில் முயற்சியாளர்களுக்கு மேலும் ஒரு தூண்டுதலை அளித்தது. அதனையடுத்து வந்த கால கட்டங்களில் சுற்றுலாக் கைத்தொழில் இலாபகரமான ஒரு முதலீட்டுத்துறையாக மாற்றமடைந்தது. இந்த மாற்றம் 1976 தொடக்கம் 1982 வரையிலான காலப்பிரிவில் இக் கைத்தொழிலில் படிப்படியாக இடம் பெற்று வந்தது. சர்வதேச தொழில் தாபனத்தின் உதவியுடன் 1960 களின் நடுப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஹோட்டல் பாடசாலை, சுற்றுலாத் துறையை இயக்கிச் செல்வதற்கு தேவைப்பட்ட பயிற்றப்பட்ட ஆளணியினரை வழங்கியது.

சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் அதிகரித்த அளவிலான அக்கறை காட்டி வந்ததுடன் இணைந்த வகையில், 1967 இல் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் அடுத்து வரும் பத்தாண்டு (1967-76) காலப்பிரிவின் போது, வெளிநாட்டு நிதிப்படுத்தலின் உதவியுடன் அமுல் செய்யப்பட வேண்டிய திட்டமொன்றாக இருந்து வந்தது. முதல் ஐந்தாண்டு காலத்தின் போது (1967-71) அபிவிருத்தி ஓரளவுக்கு மெதுவாகவே இடம்பெற்று வந்தது. சுற்றுலா பயணிகளுக்குப் பொருத்தமான ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை 1966 இல் 770 ஆக இருந்து 1971 இல் 1,767 ஆக அதிகரித்திருந்தது. அதாவது, சுமார் 1,000 அறைகள் அளவில் இக்காலப் பிரிவில் இத்துறைக்குள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தன. எனினும், இக் காலப்பிரிவின் போது, சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்பட்ட அளவில் அதிகரித்துச் செல்லவில்லை.

சுற்றுலாக் கைத்தொழில், 1971 இல் நாட்டில் இடம் பெற்ற உள்நாட்டுக் கலவரங்களின் விளைவாக ஒரு பின்னடைவினை எதிர்கொண்டது. அந்த ஆண்டுக்கான ஒட்டு மொத்தப் பயணிகளின் வருகை சுமார் 15 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், இக் கைத்தொழில் இப் பின்னடைவிலிருந்து மீண்டு, 1972 இல் சகஜ நிலைக்குத் திரும்பியது. சுற்றுலா அபிவிருத்தி குறித்த முதலாவது பத்தாண்டுத் திட்டம் குறித்த ஒரு மீளாய்வு 1972 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த மீளாய்வு, முதல் ஐந்து வருட காலப்பிரிவின் உண்மையான செயலாற்றம் மற்றும் 1971 கலவரங்களின் விளைவாக ஏற்பட்டிருந்த தற்காலிக சீர்குலைவு நிலை என்பவற்றின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், 1972 தொடக்கம் உள்ள ஆறு வருட காலப்பிரிவின் போது சுற்றுலாத்துறையின் மீதான முதலீடுகளில் ஒரு புதிய ஆர்வத்தினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய சுற்றுலாத்துறை தொடர்பான வசதிகள் என்பவற்றில் மிகத் துரிதமான ஒரு விஸ்தரிப்பு ஏற்பட்டிருந்தது.

அரசாங்கம் 1978இல் அதன் புதிய ஏழாண்டு கால சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கிய போது, சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியை திடமிடுவதற்கான அதன் மூன்றாவது முயற்சியை மேற்கொண்டது. இந்தத் திட்டம் 1978 தொடக்கம் 1984 வரையிலான ஏழாண்டு காலப்பிரிவினை உள்ளடக்கியிருந்தது. ஹோட்டல்களின் கொள்திறனை 5,350 அறைகளிலிருந்து 11,000 அறைகளாகவும், பயணிகளின் வருகையை 192,000 த்திலிருந்து 506,000 ஆகவும், அந்நியச் செலாவணி சம்பாத்தியங்களை 5.6 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 21 கோடி அ.டொலர்களாகவும் அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இத்திட்டம் வகுக்கப் பட்டிருந்தது. இலங்கை 1972 தொடக்கம் 1982 வரையுள்ள பத்து வருட காலப்பிரிவின் போது, சுற்றுலாத் துறையில் ஒரு செழிப்பு நிலையை அனுபவித்து வந்தது. இந்த காலப்பிரிவின் போது சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் மூன்று மடங்கினால் அதிகரித்துச் சென்றது.

இக் கைத்தொழில் 1982 இன் பின்னர் மிகக் கடுமையான ஒரு பின்னடைவினை எதிர்கொண்டது. இது முதலில், உலகளாவிய பொருளாதார மந்தத்தின் விளைவாகவும், இரண்டாவதாக, 1983 ஜூலை தொடக்கம் நாட்டில் தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ள இன மற்றும் உள்நாட்டுக் கலவரங்களின் விளைவாகவும் தோன்றியிருந்தது. இந்த வகையில், 1983 தொடக்கம் 1989 வரை யிலான 7 ஆண்டுக் காலப்பிரிவு இலங்கையின் சுற்றுலாத் துறையை பொறுத்தமட்டில் ஓர் இருண்ட கால கட்டமாக இருந்து வந்தது. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1982 இல் 407,000 ஆக இருந்து 1989 ல் 185,000 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. சுற்றுலாத்துறை மூலமான சம்பாத்தியங்கள் 14.7 கோடி அ.டொலர்களிலிருந்து 7.6 கோடி அ.டொலர்களாக வீழ்ச்சியடைந்திருந்தன.

சுற்றுலாக் கைத்தொழில் 1990 இல் மீண்டும் ஒரு முறை வளர்ச்சியடையத் தொடங்கியது. தற்காலிக அதிர்ச்சிகளில் இருந்தும், சீர்குலைவுகளிலிருந்தும் மீட்சி பெற்று,குறிப்பிடத்தக்க அதன் வளைந்து கொடுக்கும் ஆற்றலை, எடுத்துக்காட்டியது. சமாதானமும் சகஜ நிலையும் நாட்டில் படிப்படியாக தோன்றி வந்ததனையடுத்து

( 33 ம் பக்கம் பார்க்க)

ஜீ. தந்திரிகம
(மூத்த விரிவுரையாளர்,
வணிக முகாமைப் பிரிவு,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

# கலாச்சார பாரம்பரியமும் சுற்றுலாத்துறையும்

கலாநிதி ரோலன்ட் சில்வா
(பணிப்பாளர் நாயகம், கலாச்சார முக்கோண செய்திட்டம்)

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் 1989இன் வருடாந்த அமர்வுகளில் நிகழ்த்தப்பட்ட முக்கிய உரையில், 200 ஆவது ஆண்டளவில், வாரத்துக்கு மூன்று வேலை நாட்கள் மட்டுமே இருந்து வரும் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஐரோப்பாவின் ஐக்கிய அரசுகள் 1993 டிசம்பர் அளவில், இந்தத் திசையை நோக்கி முக்கியமான ஒரு அடியை முன்னோக்கி வைத்திருந்தது: ஐரோப்பாவின் மிகப்பெரிய கைத்தொழில் துறை நிறுவனமான போக்ஸ்வகன் கம்பனி, அதன் தொழிற்சங்கத் தலைவர்களுடன் அப்பொழுது ஓர் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. இந்த உடன்படிக்கையின்படி, இக் கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள், எதிர்காலத்தில், (தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ஐந்து நாள் சம்பளத்துக்கு) வாரத்துக்கு நான்கு நாட்கள் மட்டுமே வேலை செய்வதென இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே, 1989இல் தெரிவிக்கப்பட்ட எதிர்வு கூறல் அதன் முதல் படியை நோக்கிய நடவடிக்கையை ஏற்கனவே ஐரோப்பாவில் முன் வைத்திருப்பதனை காண முடிகிறது.

இந்தப் போக்கினை நாம் அனைவரும் மிகவும் தீவிரமான முறையில் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. அனைவரும் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே வேலை செய்வதாக இருந்தால் நிலைமை எவ்விதம் இருக்கும். நகரத் தொழிலாளர்கள் சமூகம் இரண்டு இரவுகளை மட்டுமே நகரத்தில் கழிக்கும்: அவர்கள் 5 இரவுகளை தமது கிராமப்புற இல்லங்களில் கழிப்பார்கள். அத்தகைய ஒரு நிலையில், சமூகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய கேள்வி, வாரத்தில் கிடைக்கும் இந்த நான்கு ஓய்வு நாட்களில் இத் தொழிலாளர் கள் என்ன செய்வார்கள் என்பதாகும். தொடக்கத்தில் இந்நிலைமை வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமே தோன்றும்: அனால், வெகு விரைவில் அது வளர்முக உலகிலும் பரவிச் செல்லும்.

பல்கலைக்கழகங்களும் பல்கலைக் கழகம் அல்லாத ஏனைய நிறுவனங்களும் அத்தகைய ஓய்வு காலத்துக்கு சேவைகளை வழங்கும் விதத்தில் தமது பயிலுனர்களை தயார் செய்து வருகின்றனவா ? கல்வி மான்களும் ஏனையவர்களும் இந்த யதார்த்தத்தை எதிர்கொண்டு, நிலைமையை சந்திப்பதற்கு ஏற்ற விதத்தில் உலகைத் தயார்ப்படுத்தல் வேண்டும். இந்த ஓய்வு நேரங்களை கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுக்கள் போன்ற ஓரிரு நடவடிக்கைகளிலேயே பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சுற்றுலாத்துறை அன்றாட வாழ்க்கையில் முக்கியமான ஒரு துறையாக இப்பொழுது உருவாகி வருகின்றது. கிடைக்கும் ஓய்வில் ஒரு பகுதியை பிரயாணங்களிலும் கலாச்சார சுற்றுப் பயணங்களிலும் செலவிட முடியும். இது வருங்காலத்தில், ஒரு நாட்டின் வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் அமை விடங்கள் என்பவற்றின் மீது பெரும் நெருக்குதல்களை எடுத்துவர முடியும். எனவே, இத்தகைய ஆபத்துக்களிலிருந்து உலகின் பாரம்பரிய நினைவுச் சின்னங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

இதுவரையில், 302 அமைவிடங்கள் "உலகின் பாரம்பரிய அமைவிடங்கள்" என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 6 அமைவிடங்கள் இலங்கையில் உள்ளன. அநுராதபுரம், பொலனறுவை, சீகிரியா, தம்புள்ளை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் – அதாவது, நாட்டின் கலாச்சார முக்கோணப் பகுதியில் – 5 அமைவிடங்களுள்ளன: கலாச்சார முக் கோணப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. 1980 இல் இலங்கைக்குள் வந்த சுற்றுலாப் பயணிகளில் 24 சதவீதத்தினர் கலாச்சார முக்கோணப் பகுதிக்கு விஜயம் செய்தனர். இப்பொழுது சுமார் 45 சதவீதத்தினர் இப்பகுதிக்குச் செல்கின்றனர். இது 1995 அளவில் 60 சதவீதமாக அதிகரித்துச் செல்ல முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால், இலங்கையின் கலாச்சார நினைவுச் சின்னங்களும் இப்பொழுது சுற்றுலாத் துறையின் நெருக்குதல்களை பெருமளவுக்கு சந்தித்து வருகின்றன. இந்த கலாச்சார முக்கோணப் பிரதேசத்துக்கு 1995 அளவில் ஆண்டொன்றுக்கு சுமார் 3 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகள் வருகை தருவார்கள்.

உலக அளவில் புகழ் பெற்றவை யென பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் இந்தப் பாரம்பரிய அமைவிடங்கள் இலங்கையர்களுக்கு மட்டும் உரித்தானவை யல்ல: அவை முழு மனித குலத்துக்கும் உரித்தானவையாகும். அதேபோல, பிர மிட்டுக்கள் எகிப்தியர்களின் பண்பாட்டு சொத்துக்களாக மட்டும் இருந்து வரவில்லை: அவை பரந்த உலக சமுதாயத்தின் பாரம்பரிய சொததுக்களாக இருந்து வருகின்றன. சீனப் பெருஞ்சுவரும் இது போன்றதேயாகும். எனவே, உலகின் இந்தப் பெருமை மிகு நினைவுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது முழு மனித குலத்தினதும் ஒரு கூட்டுப் பொறுப்பாக இருந்து வருகின்றது. சர்வதேச அக்கறைக்குரியவையாக இருந்து வரும் இடங்களையும், "உலக நினைவுச் சின்னங்கள்" அல்லது "அமைவிடங்கள்" என்று அழைக்கப்படக்கூடிய இடங்களையும் பட்டியலிடுவதற்கென 1972 இல் யுனெஸ்கோவில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டது. யுனெஸ்கோ இந்த முயற்சியின் போது, அதன் 19ஆவது பிரச்சார முயற்சியாக இலங்கையின் கலாச்சார முக்கோண அமைவிடத்தை தெரிவு செய்துகொண்டது.

( 33 ம் பக்கம் பார்க்க)

# இலங்கை வேளாண்மைத் துறையின் நெருக்கடி

கலாநிதி ஜே.பீ.கலேகம

## பெருகி வரும் தானியப் பற்றாக்குறை

கடந்த தசாப்தத்தின் போது, இலங்கையின் உள்நாட்டு உணவு மற்றும் வேளாண்மைத்துறையில் பெருமளவுக்கு வெளிப்படையான இரண்டு அம்சங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன: உணவு உற்பத்தியின் தேக்கம் அல்லது வீழ்ச்சி; தானிய இறக்குமதிகளின் அதிகரிப்பு. குறிப்பாக, (அ) நெல் உற்பத்தி தேக்கமடைந்துள்ளது; (ஆ) கோதுமை இறக்குமதிகளும் (சிறிதளவிலான) அரிசி இறக்குமதிகளும் அதிகரித்து வந்துள்ளன; அதனால், நாட்டின் தானியப்பற்றாக்குறை அதிகரித்து வந்துள்ளது; மற்றும் (இ) உப உணவுப் பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி இடம் பெற்றுள்ளது. முதலில், நெல் உற்பத்தியை நோக்குவோம்.

## நெல் உற்பத்தியில் தேக்கம்

கடந்த காலத்தில், பாரிய நீர்ப் பாசனத் திட்டங்கள், காணி அபிவிருத்தி, குடியேற்றத்திட்டங்கள், உர மானியம் மற்றும் கிராமிய கொடுகடன் வசதிகள் என்பவற்றின் மீது இலங்கை கணிசமான அளவிலான முதலீடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. இதன் விளைவாக, சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பிரிவில், நாட்டின் நெல் உற்பத்தி ஒன்பது மடங்காக அதிகரித்து வந்துள்ளது: அதாவது, 1950 இல் 300,000 தொன்களாக இருந்த உற்பத்தி, 1985 இல் 2,661,000 தொன்களாக அதிகரித்திருந்தது; இதன் விளைவாக, அரிசி இறக்குமதிகள் 732,700 தொன்களிலிருந்து 182,300 தொன்களாக வீழ்ச்சியடைந்திருந்தன. அதேவேளையில், சுய தேவைப்பூர்த்தி விகிதம் 16.7 சதவீதத்திலிருந்து 91.8 சதவீதமாக உயர்ந்திருந்தது. இங்குள்ள கவலையூட்டும் விஷயம், 1985 தொடக்கம் நெல் உற்பத்தியில் ஏற்பட்டு வந்துள்ள தேக்க நிலையாகும்; உண்மையிலேயே, 1991-93 காலப்பிரிவு தொடர்பான சராசரி வருடாந்த உற்பத்தி, 1984-86 இன் அளவினை விடவும் சற்றுக் குறைவானதாக இருந்து வந்தது (அட்டவணை 1).

அரிசி இறக்குமதிகள் 1984-86 காலப் பிரிவில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 160,000 தொன்களாக இருந்து வந்தன; 1991-92 காலத்தில் இது சராசரியாக 193,000 தொன்களாக சற்று அதிகரித்துக் காணப்பட்டது. மேலும், இவ்விரு காலகட்டங்களுக்கும் இடையில் சுய தேவைப்பூர்த்தி விகிதம் சராசரியாக 91.8 சதவீதத்திலிருந்து 89.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இது, நாடு 1991/93 காலப்பிரிவில் சுயதேவைப் பூர்த்தி மட்டத்தை எட்டுவதற்கு, அரிசி உற்பத்தி உண்மையில் இடம் பெற்றதிலும் பார்க்க 275,714 தொன்கள் (அல்லது 11.3 சதவீதம்) உயர்வாக இருந்து வந்திருக்க வேண்டும் என்பதனையே காட்டுகிறது.

அட்டவணை 1

வருடாந்த சராசரி நெல் உற்பத்தி

| காலம் | மெட். தொன் | சதவீத மாற்றம் |
|---|---|---|
| 1954-56 | 652 | - |
| 1964-66 | 922 | 41.4 |
| 1974-76 | 1336 | 44.9 |
| 1984-86 | 2554 | 91.2 |
| 1991-93 | 2431 | -4.8 |

அண்மைய வருடங்களில், நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்திருப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவில் ஏற்பட்டு வந்துள்ள வீழ்ச்சியாகும். 1990/91 - 1992/93 மூன்றுவருட காலப் பிரிவின் போது, விதைக்கப்பட்ட வருடாந்த சராசரி பரப்பளவு 1983/84 - 1985/86 மூன்றுவருட காலப்பிரிவில் விதைக்கப்பட்ட நிலப் பரப்பின் அளவிலும் பார்க்க 11.3 சதவீதம் குறைவாக இருந்து வந்தது. அதே வேளையில், அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவில் 8.1% வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, குருணாகல், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் மகாவலி 'H' பிரதேசத்திலும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில், உள்நாட்டு கலவர நிலைமைகள் காரணமாக, விதைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவும், உற்பத்தியும் பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த இரு மாகாணங்களிலும் 1984/85 இல் நெல் உற்பத்தி (உச்ச மட்டமான) 436,080 தொன்களாக இருந்தது; இது 1992/93 இல் 27.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 315,880 தொன்களாக காணப்பட்டது. நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சகஜ நிலைமை நிலவி வந்திருக்குமேயானால் 1992/93 இல் நாட்டின் மொத்த நெல் உற்பத்தி 2,684,200 தொன்களாக (அதாவது, 1984/85 இன் உச்ச மட்டமான 2,661,000 தொன்கள் அளிவலும் பார்க்க உயர்வானதாக) இருந்து வந்திருக்க முடியும் எனினும், நாட்டின் ஏனைய மாவட்டங்களில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவிலும், உற்பத்தியிலும் ஏற்பட்டு வந்துள்ள வீழ்ச்சிக்கு தெளிவான விளக்கங்கள் முன்வைக்கப்படவில்லை. மிகச் சிறந்த பயிர்ச் செய்கை வருடமொன்றாக இருந்த 1992/93 இல் மொத்த நெல் உற்பத்தி, அதற்கு முன்னைய 6 வருடங்களின் உற்பத்தி அளவிலும் பார்க்க உயர்வானதாக இருந்து வந்தது. பிரதான மாக, பொலனறுவை மற்றும் அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களிலும் உற்பத்தியில் ஏற்பட்டிருந்த முன்னெப்பொழுதும் இருந்திராத அளவிலான அதிகரிப்பின் விளைவாகவே இந்த சிறந்த செயலாற்றம் ஏற்பட்டிருந்தது. இந்த இரு மாவட்டங்களிலும் நெல் உற்பத்தி 1984/85 இன் மட்டத்திலும் பார்க்க இருமங்கினால் அதிகரித்திருந்தது; அதேவேளையில், முன்னர் குறிப்பிடப்பட்ட ஏனைய மாவட்டங்களில் உற்பத்தி 1984/85 மட்டத்திலும் பார்க்க குறைவானதாக இருந்து வந்தது. இந்த மாவட்டங்களில் உற்பத்தி, 1984/85 இன் அதே உற்பத்தி மட்டத்தில் நிலவி வந்திருக்குமேயானால், நாடு, அரிசியில் ஏற்றுமதி செய்யக் கூடிய ஒரு மிகையை

கொண்டிருந்திருக்க முடியும். விதைக்கப்பட்ட நிலப்பரப்பும் உற்பத்தியும் இம் மாவட்டங்களில் முன்னைய மட்டங்களை எட்டத் தவறியது ஏன் என்பதனை கண்டறிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில், கடந்த பல வருடங்களில் மழை வீழ்ச்சி போதியளவில் இருந்துவரவில்லை என்று கூறுவதனையோ அல்லது மோசமான முறையில் அது பகிரப்பட்டிருந்தது எனக் கூறுவதனையோ ஏற்றுக் கொள்ளமுடியாது.

நெல் உற்பத்தியின் சார்புரீதியில் மோசமான செயலாற்றத்துக்கான ஏனைய காரணம், கடந்த தசாப்தத்தில் நெல் விளைவு ஹெக்டெயர் ஒன்றுக்கு 3400/3500 கிகி ஆக தேக்க நிலையில் இருந்து வந்துள்ளமையாகும். துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறந்த நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டும், பெரும் அளவில் உரப்பாவனை இடம் பெற்றும் வந்துள்ள ஒரு சூழ்நிலைக்கு மத்தியிலும் கூட, விளைவு வீதம் அநேகமாக மாற்றமடையாது இருந்து வந்திருப்பது கவலையளிக்கும் ஒரு விடயமாகும். இதற்கான காரணத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கண்டறிந்து கொள்ள வேண்டும். உயர் ரக நெல் வகைகளைக் கொண்டு விதைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு 1985இல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் அநேகமாக 100 வீதம் வரையில் இருந்து, 1992இல் 78 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. விளைவு மட்டங்கள் தேக்கமுற்றிருந்தமைக்கு இது காரணமாக இருந்துள்ளதா என்பதனைக் கண்டறிவது பயனுள்ளதாக இருக்கும்.

### அரிசியில் சுயதேவைபூர்த்தி

இலங்கையின் குடித்தொகை 2001 ஆம் ஆண்டளவில் சுமார் 2 கோடியாக இருந்து வரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நுகர்வு மாதிரியின் அடிப்படையில், நாடு அரிசியில் தன்னிறைவு நிலையை எட்டுவதற்கு நெல் உற்பத்தி 3,150,000 தொன்களாக (அரிசி உற்பத்தி 2,205,000 தொன்களாக) இருந்துவர வேண்டும். இதற்கு, நெல் உற்பத்தி மட்டத்தினை, 1992/93 உற்பத்தி மட்டத்திலிருந்து சுமார் 23 சதவீதம் வரையில் உயர்த்திக் கொள்ள வேண்டும். விதைக்கப்படும் நிலப்பரப்பையும், அதேபோல விளைதிறனையும்அதிகரித்துக் கொள்வதன் மூலம் இதனை சாதிக்க வேண்டியுள்ளது. நாடு ஏற்றுமதி செய்யக்கூடிய மிகைகளை பெற்றுக் கொள்ள வேண்டுமானால், உற்பத்தி அதைவிடவும் உயர்ந்த மட்டத்தில் அதிகரித்துச் செல்லல் அவசியமாகும். சில வருடங்களுக்கு முன்னர், அரிசி இறக்குமதி நாடுகளாக இருந்து வந்துள்ள வியட்நாம், பங்களாதேஷ், இந்தியா, மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகள் இப்பொழுது அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக மாற்றமடைந்துள்ளன என்பதனை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். குறிப்பாக, வியட்நாம் 1988 வரையில் தேறிய அரிசி இறக்குமதி நாடாக இருந்து வந்தது. ஆனால், 1992இல் 20 இலட்சம் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ததன் மூலம், அது, உலகின் மூன்றாவது மிகப்பெரிய அரிசி ஏற்றுமதி நாடாக மாறியது. வியட்நாமிலிருந்தும் இந்தோனேசியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் அரிசி இலங்கையின் சந்தையில் இப்பொழுது கிடைத்து வருகீன்றது.

ஹெக்டெயார் ஒன்றுக்கான சராசரி விளைச்சலை சுமார் 4,200 கிலோ கிறாம்களாக உயர்த்திக் கொள்வதன் மூலம், நாடு தற்போதைய விதைக்கப்படும் நிலப்பரப்பளவைக் கொண்டே 2001 ஆவது ஆண்டளவில் சுய தேவைப்பூர்த்தியை சாதித்துக் கொள்ள முடியும். ஹெக்டெயார் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் இப்பொழுது சுமார் 3,500 கிகி அளவில் இருந்து வந்தபோதிலும், அது, சில பகுதிகளில் 2000 கிகி அளவிலும், வேறு சில பகுதிகளில் 5000 கிகி அளவிலும் வேறுபட்ட மட்டங்களில் நிலவி வருகின்றது. பொலனறுவை, மகாவலி பிரதேசம், உடவளவே மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் – ஹெக்டெயாரொன்றுக்கு 4,000 இலிருந்து 5,000 கிகி வரையிலான – ஆக உயர்ந்த விளைச்சல் கிடைத்து வருகின்றது; பதுளை, நுவரெலியா, மாத்தளை, கேகாலை, குருணாகல், அநுராதபுரம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, கொழும்பு, கம்பகா மற்றும் கிளிநொச்சி ஆகிய 14 மாவட்டங்களில் நடுத்தர அளவிலான – ஹெக்டெயார் ஒன்றுக்கு 3000 தொடக்கம் 4000 கிகி வரையிலான – விளைச்சல் கிடைக்கின்றது. மிகக் குறைந்த விளைச்சல் மட்டங்கள் (ஹெக்டெயார் ஒன்றுக்கு 2000 தொடக்கம் 3000 கிகி வரையில்) களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, புத்தளம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் நிலவி வருகின்றன. 1992/93 இல் நாட்டின் மொத்த நெல் உற்பத்திக்கு உயர் விளைச்சல் மட்டங்களைக் கொண்டிருக்கும் மாவட்டங்கள் 27 சதவீதத்தையும், நடுத்தர மட்டங்களைக் கொண்டிருக்கும் மாவட்டங்கள் 57 சதவீதத்தையும், குறைந்த விளைச்சல் மட்டங்களைக் கொண்டிருக்கும் மாவட்டங்கள் 16 சதவீதத்தையும் பங்களிப்புச் செய்திருந்தன.

### உற்பத்திச் செலவு அதிகரிப்பு

விவசாய உள்ளீடுகளை பெருமளவில் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் நீர்ப்பாசனத்தின் மூலமும் நெல் விளைச்சல் திறனை உயர்த்திக் கொள்ள முடியும். கடந்த 50 வருட காலப்பிரிவில் நாட்டின் நெல் உற்பத்தித் துறையில் பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன. முன்னர், அநேகமாக அனைத்து நெல்வயல்களும் மாடுகளைக் கொண்டே உழப்பட்டு வந்தன; இப்பொழுது அரைவாசிப் பகுதி வயல்கள் உழவு இயந்திரங்களைக் கொண்டு உழவு செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல, சுமார் 50 வருடங்களுக்கு முன்னர், விவசாய இரசாயன பொருட்களோ வளமாக்கிகளோ பயன்படுத்தப்பட்டு வரவில்லை; இப்பொழுது சுமார் 50% நெற்காணிகளில் களைகொல்லிகளும், சுமார் நான்கில் மூன்று பங்கு காணிகளில் பூச்சி கொல்லிகளும் பாவிக்கப்பட்டு வருகின்றன; அத்துடன், பெரும்பாலான நெற் காணிகளில் உரப்பாவனை பரவலாக இடம் பெற்று வருகின்றது. இந்த உரப்பாவனை 1993 இல் சுமார் 213,000 தொன்களாக இருந்து வந்தது. புதிய விருத்தி செய்யப்பட்ட விதையினங்கள் மிகப்பரவலான முறையில் பயன்படுத்தப்பட்டு வந்தமையின் விளைவாகவே உரப்பாவனையும், விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையும் அதிகரித்துள்ளன. ஏனெனில் இந்த உள்ளீடுகள் இல்லாமல், இப்புதிய விதையினங்கள் நன்றாக வளர்வதில்லை. விளைதிறனை உயர்த்திக் கொள்வதற்காக உழவு இயந்திரங்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் என்பன பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதனால், இத்தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக விவசாயக் கடன்களையு

பெருமளவில் பெற வேண்டியிருந்தது. இது, விளைச்சலில், இந்த மேலதிக செலவுகளுக்கு ஈடு செய்யக்கூடிய விதத்தில் ஒரு அதிகரிப்பினை எடுத்து வராவிட்டால், உற்பத்திச் செலவினை உயர்த்தும் ஒரு போக்கினை எடுத்து வரும்.

நீர்ப்பாசன வசதிகளின் பற்றாக் குறை விளைச்சலைப் பெருக்கிக் கொள்வதற்கும், அதே போல, சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பின் அளவை விரிவாக்கிக் கொள்வதற்குமான மிக முக்கியமான இடையூறாக இருந்து வருகின்றது. கடந்த பத்தாண்டு காலத்தின் போது, மகா போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட சுமார் 14 தொடக்கம் 36 சதவீதமான நிலப்பரப்பும் யால போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட 45 தொடக்கம் 65 சதவீதமான நிலப்பரப்பும் நீர்ப்பற்றாக் குறை காரணமாக அறுவடை செய்யப்படாது கைவிடப்பட்டு வந்துள்ளன. யால போகத்தின் போது பெருமளவு நெற்காணிகள் பயிரிடப்படாது வெறுமனே விடப்படுகின்றன. யால போகத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது விடப்படும் காணிகளில் பெரும்பகுதி உலர் வலயத்திலேயே உள்ளது. நாட்டின் உலர் வலயம் தென்மேற்கு பருவக்காற்று காலத்தின் போது சிறிதளவு மழை வீழ்ச்சியை மட்டுமே பெற்றுக் கொள்கின்றது. அதே வேளையில், ஈர வலயம் தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலத்தின் போதும் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தின் போதும் போதியளவில் மழை வீழ்ச்சியைப் பெற்று வருவதனால் இரு போகங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான நீர் அங்கு கிடைக்கின்றது.

பிரதான நீர்ப்பாசன செய்திட்டங்களைக் கொண்டுள்ள உலர் வலய மாவட்டங்கள், மகா மற்றும் யால போகங்களின் போது நீர்ப்பாசனத்துக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய போதியளவு நீரைக் கொண்டுள்ளன. இந்த இரு பருவங்களின் போதும் பயிர்ச் செய்கை பய்யப்படும் பரப்பளவை பொறுத்தமட்டில், இந்த மாவட்டங்களில் சிறிதளவு வேறுபாடுகள் மட்டுமே நிலவி வருகின்றன. பொலனறுவை, அம்பாறை மற்றும் உடவளவே ஆகிய பகுதிகளை இதற்கான உதாரணங்களாகக் கூற முடியும். நெற்சாகுபடி, பெருமளவுக்கு மழை நீரிலும் சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் அல்லது கிராமிய குளங்களில் தங்கியிருந்து வரும் மாவட்டங்களிலேயே யால போகத்தின் பயிர்ச்செய்கை மிகவும் மோசமானதாக இருந்து வருகின்றது. பெரும்பாலான சிறிய நீர்ப்பாசன திட்டங்கள், பொதுவாக, அளவில் சிறிய கிராமிய குளங்களாக இருந்து வருவதுடன், மகா போகத்தின் போது அக்குளங்கள் சிறிதளவான நீரினை மட்டுமே சேகரித்துக் கொள்கின்றன. அது மகா போகத்தின் பயிர்ச்செய்கைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. இக் குளங்களில் அளவில் சற்று பெரியவையாக இருந்து வரும் ஒரு சில குளங்கள் மட்டுமே யால பயிர்ச்செய்கைக்கு நீரினை வழங்கக்கூடிய நிலையில் இருந்து வருகின்றன. அநுராதபுரம், புத்தளம், மாத்தளை, மொனராகலை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக, யால போகத்தின் பயிர்ச்செய்கை, மகா போகத்தின் பயிர்ச்செய்கையிலும் பார்க்க அரைவாசிப் பங்குக்கும் குறைவானதாக இருந்து வருகின்றது. உதாரணமாக, அநுராதபுர மாவட்டதில் 1992/93 யால போக பயிர்ச்செய்கை, மகா போக பயிர்ச்செய்கையின் 17 சதவீதமாக மட்டுமே இருந்து வந்தது.

இரு போகங்களின் போதும் சாகுபடி செய்யப்படாது வெறுமனே விடப்பட்டிருக்கும் நிலப்பரப்பில் பெரும்பாலான பகுதியை சாகுபடியின் கீழ் கொண்டு வருவதில் எதிர்நோக்க வேண்டியிருக்கும் மிக முக்கியமான பிரச்சினை, யால பயிர்ச்செய்கைக்காக உலர் வலயத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் நீரின் அளவை எவ்வாறு அதிகரித்துக் கொள்வது என்பதாகும். ஆற்று நீரை திசை திருப்புவதற்காக மேலும் அதிகளவிலான பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதிலும், சிறிய நீர்ப்பாசன திட்டங்களை குறிப்பாக கிராமிய குளங்களை பெருப்பித்து, விருத்தியாக்குவதிலுமே இதற்கான தீர்வு தங்கியுள்ளது. இதற்கென அரசாங்கம் கணிசமான அளவிலான முதலீடுகளை இடவேண்டியுள்ளது. இதுவரை காலமும் நீர்ப்பாசனம் என்பது, இலவசமான உள் கட்டமைப்பு வசதியொன்றாக அல்லது விவசாயிக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு சமூக சேவையாகவே கருதப்பட்டு வந்தது. இது, நெல் உற்பத்திச் செலவை குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்கு உதவியது. ஆனால், இப்பொழுது இந் நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நிதி தொடர்பான இடையூறுகள் காரணமாகவும், சமூக சேவைகளை குறைத்துக் கொள்ள வேண்டும் என்றவகையில் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து வரும் நிர்ப்பந்தங்கள் காரணமாகவும், விவசாயி, நீர்ப்பாசனத்தின் செலவினை ஏற்க வேண்டும் என கூறப்படுகின்றது. இது உற்பத்திச் செலவை அதிகரிக்க முடியும்.

எனவே, இந்த நிலையில், சுய தேவைப் பூர்த்தியை சாதித்துக் கொள்வதற்காக, நெல் உற்பத்திச் செலவைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை நாங்கள் கண்டறிய வேண்டியுள்ளது. உதாரணமாக, நிலத்தினை உழுவதற்கு உழவு இயந்திரங்களுக்குப் பதிலாக எருமை மாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் முறை மலிவானதாக இருக்க முடியும். எனினும், இப்பொழுது பெரும்பாலான கிராமப் பிரதேசங்களில் எருமைகளுக்கான பொது மேய்ச்சல் நிலங்கள் போதியளவில் கிடைப்பதில்லை. இறக்குமதி செய்யப்படும் உர வகைகளுக்குப் பதிலாக, உள்நாட்டுப் பதிலீடுகளைக் கண்டறிய வேண்டியதும் உணவுக்கு நஞ்சூட்டி, சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதும் முக்கியமான தேவைகளாக இருந்து வருகின்றன. உதாரணமாக, களை கொல்லிகளுக்குப் பதிலாக, களை பிடுங்கும் முறையையும், பூச்சி கொல்லிகளுக்குப் பதிலாக உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளையும் பின்பற்ற முடியுமா ? தற்பொழுது நாட்டின் மொத்த நெற்காணிகளில் சுமார் நான்கில் ஒரு பங்கு காணிகளில் மட்டுமே பின்பற்றப் பட்டுவரும் நாற்று நடுகை முறையை மேலும் அதிகளவு காணிகளுக்கு விஸ்தரிக்க முடியுமா? கிராமிய குளங்களின் கொள் திறன் புனருத்தாரணம் செய்யப்பட்டு, விரிவாக்கப்பட்டால் அது ஓரளவுக்கு நீர்ப் பற்றாக்குறையை நிறைவு செய்யக் கூடியதாக இருந்து வருவதுடன், செலவு குறைந்த ஒரு முறையாகவும்இருக்க முடியும். ஆனால், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுடன் இணைக்கப்படாத நிலையில், அவை யால போகத்துக்குப் போதுமான நீரினை

இருப்பில் வைத்துக் கொள்ள முடியுமா? எமது நாட்டின் வேளாண்மைத் துறை விஞ்ஞானிகளும் நீர்ப்பாசன நிபுணர்களும் மிகவும் தீவிரமான முறையில் கவனத்தில் எடுத்து, அலச வேண்டிய மிகவும் சிக்கலான பிரச்சினைகளாக இவை இருந்து வருகின்றன.

### தானியப் பற்றாக்குறை

இரு முக்கிய காரணங்களின் நிமித்தம், நெல் உற்பத்திச் செலவு அதிகரிப்பினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியுள்ளது. அரிசியின் விலை துரிதமாக அதிகரித்து வந்தால், அரிசிக்குப் பதிலீடாக கோதுமை பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியப்பாடு இதில் ஒரு காரணமாமகும். பொதுவாக, கோதுமை விலை, அரிசியின் விலையிலும் பார்க்க பெருமளவுக்குக் குறைவாக இருந்து வருகின்றது. உதாரணமாக, 1992/93 இல் கோதுமையின் விலை இறக்கு மதி செய்யப்பட்ட அரிசியின் விலையிலும் பார்க்க 36 சதவீதம் குறைவானதாக இருந்து வந்தது. மேலும், கோதுமையின் விலை அதிகரிப்பு அரிசியின் விலை அதிகரிப்பிலும் பார்க்க ஒரு மெதுவான போக்கினையே காட்டி வந்துள்ளது. உதாரணமாக, இலங்கையில் 1981 க்கும் 1991 க்கும் இடையில் ஒரு கிலோகிராம் அரிசியின் சில்லறை விலை ரூபா 8.20 லிருந்து ரூபா 15.24 ஆக (86 சதவீதத்தினால்) அதிகரித்து வந்தது; அதேவேளையில், கோதுமை மா கிலோ ஒன்றின் விலை ரூபா 7.88 லிருந்து ரூபா 12.31 ஆக (56 சதவீதத்தினால்) மட்டுமே அதிகரித்திருந்தது. கோதுமை மா, அரிசி என்பவற்றின் விலைகளிடையே ஏற்பட்டுவரும் வேறுபாட்டு இடைவெளி விரிவடைந்து செல்லும் பொழுது (கோதுமை மா இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டு அல்லது வரி விதிக்கப்பட்டு வராத ஒரு நிலையில்) கோதுமை மா இறக்குமதிகள் அதிகரித்துச் செல்ல முடியும். அண்மையில் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டமை இப்போக்கினைப் பலப்படுத்த முடியும்.

கோதுமை மா இறக்குமதி, 1981/83 காலப்பகுதியில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 504,333 தொன்களாக இருந்து வந்தது; இது 1991-93 காலப்பகுதியில் 716,666 தொன்களாக (42% ஆல்) அதிகரித்திருந்தது. நாடு 1993இல் 771,000 தொன் கோதுமையை இறக்குமதி செய்தது. கோதுமை மா இறக்குமதியில் இடம் பெற்று வரும் கணிசமான அளவிலான அதிகரிப்பு, நாட்டின் உணவு நிலைமை தொடர்பான இரண்டாவது கவலையூட்டும் அம்சமாகும். அண்மைய வருடங்களில், கோதுமை மற்றும் அரிசி இறக்குமதிகள் அதிகரித்து வந்துள்ளமையால், நாட்டின் தானியப் பற்றாக்கறை கடந்த பத்தாண்டு காலத்தின் போது 667,333 தொன்களிலிருந்து 909,666 தொன்களாக (36% ஆல்) அதிகரித்திருந்தது. அரிசி உற்பத்தியின் செலவு அதிகரிப்பு ஒரு புறத்தில், மலிவான இறக்குமதிகளிலிருந்து அதிகளவிலான பாதுகாப்பினை வேண்டி நிற்கின்றது. மறுபுறத்தில், எதிர்காலத்தில், அரிசியை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை அது ஊக்கமிழக்கச் செய்து விடும். இலங்கை அரிசியை ஏற்றுமதி செய்ய வேண்டுமானால், அது, உள்நாட்டுத் தேவையிலும் பார்க்க மிதமிஞ்சிய ஓர் உபரியைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, போட்டி விலைகளில் நல்ல தரமான அரிசியை வழங்கக் கூடியநிலையிலும் இருந்து வர வேண்டும்.

### உப உணவுப் பொருட்கள்

உற்பத்திச் செலவு அதிகரிப்பின் விளைவாக ஏற்படும் அரிசியின் விலையேற்றம், மறுபுறத்தில், மரவெள்ளி, வற்றாலை மற்றும் குரக்கன் போன்ற அரிசியின் பதிலீட்டுப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பில் ஒரு சாதகமான தாக்கத்தை எடுத்து வர முடியும். கோதுமை மா விலைகளும் அதேநேரத்தில் அதிகரித்துச் சென்றால், பதிலீட்டுப் பொருட்கள் மேலும் பெருக்கமடைய வாய்ப்புள்ளது. இறக்குமதிகள் கட்டுப் படுத்தப்பட்டு, அரிசி பங்கீட்டு அடிப் படையில் வழங்கப்பட்டு வந்த 1970-77 காலப்பகுதியின போது, கொள்கை வழிமுறையொன்றாக உப உணவுப் பயிர்களின் உற்பத்திக்கு ஊக்குவிப்பு அளிக்கப்பட்டு வந்தது. அதனையடுத்து, 1977 தொடக்கம், கட்டற்ற வர்த்தகக் கொள்கைகளின் கீழ், உணவுப் பங்கீட்டு முறையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் ஒழிக்கப்பட்டதனால் உப உணவுப் பயிர்களின் உற்பத்தி தீவிரமாக வீழ்ச்சியடைந்தது. 1975 இன் மொத்த உற்பத்தியுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, 1991 இல் மரவெள்ளி உற்பத்தி 27 சதவீதமாகவும் வற்றாலை உற்பத்தி 30 சதவீதமாகவும், குரக்கன் உற்பத்தி 22 சதவீதமாகவும் இருந்து வந்தது. மரவெள்ளி, வற்றாலை மற்றும் குரக்கன் போன்ற இந்த பயிர்களின் சாகுபடிக்கு குறைந்த அளவு நீர் மட்டுமே தேவைப்படுகின்றது என்ற விடயம் இன்னமும் பரவலாக அறியப்பட்டிருக்கவில்லை. மேலும், இப்பயிர்கள் குறைந்த வருமானம் பெறும் சமூகப் பிரிவினர் தொடர்பான மிக மலிவான, தாக்கமான உணவுப் பாதுகாப்பு மூலங்களாகவும் இருந்து வருகின்றன. இரண்டாவது உலக மகாயுத்த காலத்தின் போதும், 1970 களின் போதும், இப்பயிர்கள், வறியவர்களை பாதுகாத்துக் கொண்டன. கோதுமை மாவின் விலை வறியவர்களுக்கு கட்டுப்படியாகாத விதத்தில் உயர்ந்து செல்லும்பொழுது, இப்பயிர்களின் உற்பத்தியும் தானாகவே பெருக்கமடையும்.

சின்ன வெங்காயம், உருளைக் கிழங்கு, நிலக்கடலை, சோயா அவரை, கவ்பி மற்றும் இஞ்சி என்பவற்றின் உற்பத்தி மட்டம் 1991/93 காலப் பகுதியில், 1981/83 காலப் பகுதியின் உற்பத்தி மட்டத்திலும் பார்க்கக் குறைவானதாக இருந்து வந்தது. இந்த வீழ்ச்சி சின்ன வெங்காயத்தில் 20.2 சதவீதமாகவும், உருளைக் கிழங்கில் 22.4 சதவீதமாகவும், நிலக்கடலையில் 26.3 சதவீதமாகவும், சோயா அவரையில் 65 சதவீதமாகவும், கவ்பியில் 39.2 சதவீதமாகவும், இஞ்சியில் 38.7 சதவீதமாகவும் இருந்து வந்தது. இவை உப உணவுப் பயிர்களாக இருந்து வருவதுடன், உள்நாட்டுத் தேவைகளுக்காக மட்டுமன்றி, ஏற்றுமதி செய்வதற்கும் கூட இப்பயிர்களை நாட்டில் மிக எளிதான முறையில் உற்பத்தி செய்ய முடியும். இஞ்சி ஏற்றுமதிகள் செங்குத்தாக வீழ்ச்சியடைந்து வந்திருக்கும் அதே வேளையில், சின்ன வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு போன்றவை காலத்துக்கு காலம் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. அண்மையில், இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் விலை குறைக்கப்பட்டதன் விளைவாக, கவ்பி, பயறு, பாசிப்பயறு, இலங்கைப் பருப்பு போன்றவற்றின் உற்பத்தி மிக மோசமாக பாதிப்படைய முடியும். உற்பத்தியில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிய வேண்டியதன் முக்கியத்துவத்தினையும், உற்பத்தியை உச்சப்படுத்துவதற்கு அவசியமான நிவாரண நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் இங்கு வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

## II
## வேளாண்மைத்துறையின் ஏற்றுமதி வீழ்ச்சி

இலங்கையின் ஏற்றுமதி வேளாண்மைத் துறை இப்பொழுது ஒரு நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. தேயிலை ஏற்றுமதிகள் தேக்க நிலையில் இருந்து வருகின்றன; இறப்பர் மற்றும் தெங்குப் பொருள் ஏற்றுமதிகளில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. 17 சிறு வேளாண்மை ஏற்றுமதிகள் துரிதமாக வீழ்ச்சி கண்டு வருகின்றன.

### உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி

தேயிலை உற்பத்தி, 1971/73 காலப் பகுதிக்கும் 1981/83 காலப்பகுதிக்கும் இடையில் வீழ்ச்சி அடைந்திருந்தது; ஆனால், அதன் பின்னர் உற்பத்தி மீட்சி பெற்றது. எனினும், 1990 களின் தொடக்கத்தில் காணப்பட்ட உற்பத்தி மட்டம், 1970 களின் உற்பத்தி மட்டங்களிலிருந்து பெருமளவுக்கு வேறுபட்டிருக்கவில்லை என்பதனை அட்டவணை – 2 காட்டுகின்றது. மறுபுறத்தில், இறப்பர் உற்பத்தியில் தொடர்ச்சியாக வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. தெங்கு உற்பத்தியிலும் 1970 களுக்கும் 1990 களுக்குமிடையில் 12 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

ஏற்றுமதிப் பயிர்கள் பயிரிடப்பட்டு வந்த நிலப்பரப்பின் ஏக்கர் அளவில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. தேயிலையின் கீழ் இருந்த பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவு 1982 இல் 242,000 ஹெக்டயர்களாக இருந்து, 1992 இல் 221,831 ஹெக்யடர்களாக வீழ்ச்சி கண்டிருந்தது. 1983 இல் 205,600 ஹெக்டயர்களாக இருந்த இறப்பர் காணிகளின் பரப்பளவு 1993 இல் 194,870 ஹெக்டயர்களாக வீழ்ச்சியுற்றிருந்தது. அதேவேளையில், இறப்பர் பால் எடுக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு 170,500 ஹெக்டயர்களிலிருந்து 148,870 ஹெக்டயர்களாக குறைவடைந்திருந்தது. கடந்த பத்தாண்டுகளின் போது, தெங்குக் காணிகளின் பரப்பளவு, சுமார் 1 இலட்சம் ஏக்கர்களினால் வீழ்ச்சி அடைந்து வந்துள்ளது என உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது. வீடமைப்பு நோக்கங்களுக்காகவும், பொதுக் கட்டடங்கள், புதிய நகரங்கள் என்பவற்றின் உருவாக்கத்துக்காகவும், தற்போதைய நகரங்களை விரிவாக்குவதற்காகவும், பாதை அமைப்புக்காகவும் தென்னங்காணிகள் விற்பனை செய்யப்பட்டமை அல்லது கையகப்படுத்தப் பட்டமையே இதற்கான பிரதான காரணமாகும். மேலும், இம்மூன்று பிரதான பயிர்கள் தொடர்பாக மீள் நடுகை மானியங்கள் வழங்கப்பட்டு வந்த போதிலும், அண்மைய வருடங்களில் மீள் நடுகை பெருமளவுக்குக் குறைவடைந்திருந்தது. இறப்பர் மற்றும் தென்னை என்பவற்றை பொறுத்தவரையில், உரப் பாவனையின் அளவும் வீழ்ச்சி அடைந்திருந்தது.

மீள்நடுகை 1981–83 காலப் பகுதியுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, 1991–93 காலப்பகுதியில் தென்னை தொடர்பாக 46.6 சதவீதத்தினாலும், இறப்பர் தொடர்பாக 34.8 சதவீதத்தினாலும், தேயிலை தொடர்பாக 25.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தது. புது நடுகை, தென்னையை பொறுத்தமட்டில் 85 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், இப்பத்தாண்டு காலத்தின் போது உரப்பாவனை, இறப்பர் தொடர்பாக 15.8 சதவீதத்தினாலும், தென்னை தொடர்பாக 6.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சி கண்டிருந்தது. எனினும், தேயிலையைப் பொறுத்தமட்டில், உரப் பாவனையில் 15 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருந்து. இறப்பர் ஏற்றுமதிகள், 1971–73 காலப்பகுதியின் மட்டங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது 1991–93 காலப்பகுதியில் 46 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன. தெங்குப் பொருள் ஏற்றுமதிகளில் 60 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன், தேயிலை ஏற்றுமதிகளில் 1.5 சதவீத எல்லை ரீதியான ஒர் அதிகரிப்பு காணப்பட்டது. அட்டவணை – 5 இந்த மாற்றங்களை எடுத்துக் காட்டுகின்றது.

தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட தீவிர வீழ்ச்சிக்கு, உற்பத்தியில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சி மட்டும் காரணமாக இருக்கவில்லை; உள்நாட்டு நுகர்வில் ஏற்பட்டு வந்த அதிகரிப்பும் இந்த வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருந்தது. கடந்த தசாப்தத்தில் உற்பத்தி சுமார் 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்த அதேவேளையில், உள்நாட்டு நுகர்வும் 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனவே, 1981–83 காலப் பிரிவுக்கும் 1991–93 கலப்பரிவுக்கும் இடையில் தெங்குப் பொருள் உற்பத்தியின் ஏற்றுமதிப்பங்கு 42 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. தேயிலை மற்றும் இறப்பர் என்பவற்றின் உற்பத்தியில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் அதேவேளையில், தெங்கு உற்பத்தியில் பெரும்பகுதி உள்நாட்டிலேயே நுகரப்பட்டு வருகின்றது. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து வருவதுடன் இணைந்த விதத்தில், தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பரா என்பவற்றின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. உண்மையிலேயே 1993 இல் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்நாட்டு உற்பத்தி சக்தியற்று இருந்தமையின் விளைவாக, நாடு ஒரு தேறிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி நாடாக மாற்றமடைந்தது; அதாவது, 2578 தொன் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்ட அதேவேளையில்

அட்டவணை 2

ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி
(வருட சராசரி)

| காலம் | தேயிலை மி.கி.மில். | இறப்பர் மி.கி. மில். | தென்னை மில்.காய்கள் |
|---|---|---|---|
| 1971-73 | 214 | 146 | 2503 |
| 1981-83 | 192 | 130 | 2364 |
| 1991-93 | 217 | 106 | 2215 |

அட்டவணை 3

மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பு
(வருடாந்த சராசரி - ஹெக்டயார்கள்)

| காலம் | தேயிலை மீள்நடுகை | இறப்பர் மீள்நடுகை | தென்னை மீள்நடுகை | தென்னை புதுநடுகை |
|---|---|---|---|---|
| 1981-83 | 2016 | 5723 | 3246 | 4648 |
| 1991-93 | 1500 | 3731 | 1733 | 699 |
| x மாற்றம் | -25.6 | -34.8 | -46.6 | -85.0 |

29,000 தொன் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. கொப்பரா ஏற்றுமதிகள் 1993 இல் 4,000 தொன்களாக மட்டுமே இருந்து வந்தது. இந்த நிலையில், தேங்காய் துருவல் மட்டுமே இப்பொழுது தெங்குத்துறையின் பிரதான ஏற்றுமதிப் பொருளாக இருந்து வருகின்றது. 1993இல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய் துருவலின் அளவு 34,437 தொன்களாகும்.

அட்டவணை 4

உரப் பாவனை (வருடாந்த சராசரி - தொன்கள்)

| காலம் | தேயிலை | இறப்பர் | தென்னை |
|---|---|---|---|
| 1981-83 | 107,167 | 17,300 | 34,533 |
| 1991-93 | 123,200 | 14,567 | 32,267 |
| % மாற்றம் | +15.0 | -15.8 | -6.6 |

### சாதகமற்ற விலைகள்

உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பவற்றில் ஏற்பட்டுள்ள மந்தம் அல்லது தேக்க நிலை, மீள் நடுகையில் ஏற்பட்டு வந்துள்ள வீழ்ச்சி மற்றும் குறைந்த அளவிலான உரப் பாவனை என்பவற்றுக்கான முக்கிய காரணம், உலகச் சந்தைகளில் வியாபாரப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சியாகும். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்கள் என்பவற்றுக்கான சந்தை விலை, 10 வருடங்களுக்கு முன்னர் இருந்த அளவிலும் பார்க்க இப்பொழுது குறைவானதாக இருந்து வருகின்றது. இலங்கைத் தேயிலையின் இலண்டன் ஏல விற்பனை விலையின் வருடாந்த சராசரி 1981-83 காலப்பகுதியில் 118.45 பென்ஸ்களாக இருந்து, 1991-93 காலப்பகுதியில் 103.89 பென்ஸ்களாக (12 சதவீதத்தினால்) வீழ்ச்சியடைந்திருந்தது. ஆர்.எஸ்.எஸ். இல.1 இறப்பரின் சராசரி வருடாந்த விலை இந்த இரு காலப்பிரிவுகளுக்குமிடையில் 61.02 பென்ஸ்களிலிருந்து 55.5 பென்ஸ்களாக (9% ஆல்) வீழ்ச்சி கண்டிருந்தது. தேயிலை விலைகளில் மிகக் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன், 1991 தொடக்கம் 1993 வரையிலான மூன்றாண்டு காலத்தில் தேயிலை விலைகள், சராசரி உற்பத்திச் செலவுகளிலும் பார்க்க குறைவானவையாக இருந்து வந்தன. உதாரணமாக, 1993இல் தேயிலை கிலோ ஒன்றுக்கான சராசரி உற்பத்திச் செலவு ரூபா 75.81 ஆக இருந்து வந்த அதேவேளையில், கிலோ ஒன்றுக்கான சராசரி விலை (தேறியது) ரூபா 68.88 ஆக காணப்பட்டது. சாதகமான மழைவீழ்ச்சி மற்றும் உயர் அளவிலான உற்பத்தி என்பவற்றினையடுத்து, 1994 மே மாதத்தில் இந்த விலை ரூபா 54 ஆக மேலும் வீழ்ச்சி கண்டிருந்தது. தேயிலைக் கொழுந்தை வெளியிலிருந்து கொள்வனவு செய்து, தேயிலை தயாரித்து வரும் 220 தொழிற்சாலைகளில் 70 தொழிற்சாலைகள் நட்டத்தின் காரணமாக மூடப்பட்டுள்ளன. ஏனைய தொழிற்சாலைகள், தமக்கு தேயிலைக் கொழுந்தினை வழங்கி வரும் சிறு தோட்டச் சொந்தக்காரர்களுக்குப் பணம் செலுத்துவதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

அட்டவணை 5

ஏற்றுமதி அளவு-வருடாந்த சராசரிகள்

| காலம் | தேயிலை மில். கி.கி. | இறப்பர் மில்.கி.கி. | தெங்கு உற்பத்திகள் மில்லியன் காய்கள் |
|---|---|---|---|
| 1971-73 | 201 | 140 | 892 |
| 1981-83 | 174 | 130 | 517 |
| 1991-93 | 204 | 75 | 357 |

தேயிலைத் தொழிற்சாலைகளின் திரவத்தன்மை தொடர்பான நெருக்கடிகளைத் தீர்த்து, சிறு தோட்டச் சொந்தக்காரர்களுக்கு அவை உடனடியாகப் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதனை இயலச் செய்யும் பொருட்டு, அரசாங்கம், தேயிலை ஏற்றுமதித்துறைக்கு, அத்துறை, கொள்முதல்களையும் விலைகளையும் உயர்த்திக் கொள்ளச் செய்வதற்கென 15 சதவீத சலுகை வட்டியில் 68 கோடி ரூபா கடனை வழங்கியுள்ளது. எனினும், இது விரும்பிய விளைவினை எடுத்துவரவில்லை போல் தோன்றுகிறது. தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர் சங்கம், தேயிலைக் கைத்தொழிலில் வியாபித்து வரும் நெருக்கடி குறித்து அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதன் விளைவாக, 22 தேயிலைத் தோட்ட முகாமைக் கம்பனிகள், தொழிலாளர்களுக்கான மே மாத சம்பளத்தைக் கூட வழங்க முடியாத நிலையில் இருந்து வந்தன என இச்சங்கம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், இவ்வாண்டு மே தொடக்கம் டிசம்பர் வரையான காலப் பகுதியில் இத்துறைக்கு அவசர நிதி உதவியாக 85.7 கோடி ரூபா வழங்கப்பட வேண்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவையனைத் துக்கும் மத்தியில், தொழிலாளர்கள், இப்பொழுது நாளொன்றுக்கு 8 ரூபா வீதமான கூலி அதிகரிப்பொன்று தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

மிதமிஞ்சிய உற்பத்தியினாலும், தரக் குறைவான தேயிலையினாலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என தேயிலை வர்த்தக வட்டாரங்கள் கூறிவரும் அதேவேளையில், நாட்டின் மொத்த தேயிலையில் 54 சதவீதத்தினை உற்பத்தி

அட்டவணை 6

தேயிலை ஏற்றுமதி (மொத்தப் பெறுமதியில் % ஆக)

| | 1983 | 1993 |
|---|---|---|
| மொத்தமாக தேயிலை | 69.1 | 54.3 |
| தேயிலை பக்கெட்டுகள் | 29.6 | 33.9 |
| தேயிலை பைகள் | 1:0 | 6.1 |
| உடன் தேயிலை | 0.3 | 1.6 |
| பச்சைத் தேயிலை | - | 0.3 |
| ஏனையவை | - | 3.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 |

செய்து வரும் சுமார் 200,000 சிறு தேயிலைத்தோட்டச் சொந்தக்காரர்கள், விலைகளை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்காக, பாரிய தேயிலைக் கொள்வனவாளர்கள் ஏல விற்பனைகளை மிகவுந் தந்திரமான முறையில் பயன்படுத்தி வருவதாக குற்றம் சாட்டுகின்றார்கள். கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் முன்னாள் தலைவரான ஹேமா விஜயரத்னவும் இந்தக் கருத்தை ஆதரிக்கின்றார். தேயிலை வர்த்தகர்கள், குறைவாக விலை குறிப்பிட்டு, மிகவும் தந்திரமான முறையில் விலைகளை குறைவடையச் செய்து வருகின்றனர் என அண்மையில் அவர் குற்றம் சாட்டியிருந்தார். குறைந்த விலைகள் இந்நாட்டின் தேயிலைக் கைத்தொழிலுக்கான ஒரு பாரிய அச்சுறுத்தலாக இருந்து வருவதனால், இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து தீர விசாரித்து அறிவது அரசாங்கத்தின் கடமையாகும்.

இறப்பரைப் பொறுத்தமட்டில், சராசரி விலைகள், சராசரி உற்பத்திச் செலவிலும் பார்க்க உயர்ந்தவையாக இருந்து வந்துள்ளன. எனினும், கிடைக்கும்

இலாப எல்லை போதுமானதாக இருக்கவில்லை. இறப்பர் பால் வெட்டப் பட்ட பரப்பளவு 1981-83 காலப்பகுதியில் 84% ஆக இருந்து 1991-93 இல் 75 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தமை இதனாலேயே ஏற்பட்டிருந்தது. விலைகள் இலாபகரமானவையாக இல்லாதிருந்த மையால், அண்மைக் காலத்தில் வீடமைப்பு நோக்கங்களுக்காகவும் இறப்பர் காணிகள் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளன. நாட்டின் மொத்த இறப்பர் உற்பத்தியில் சுமார் 70 சதவீதத்தினை சிறு தோட்டச் சொந்தக்காரர்களே உற்பத்தி செய்து வருகின்றனர். விலை வீழ்ச்சி காரணமாக, அவர்களுடைய வருமானமும் வாழ்க்கைத் தரங்களும் பெருமளவுக்கு பாதிப்புக் குள்ளாகி உள்ளன.

தெங்கு ஏற்றுமதிகளின் விலைகளும் கூட சாதகமானவையாக இருந்து வரவில்லை. இலண்டன் சந்தையில் கொப்பரா விலை 1981-83 காலப்பகுதியில் நிலவி வந்த மட்டத்திலும் பார்க்க இப்பொழுது குறைவாக உள்ளது. தேங்காய் துருவல் விலைகள் 4.5 சதவீதம் மட்டுமே உயர்வாகக் காணப்படுகின்றன. மேலும், உள்நாட்டு நுகர்வுக்கான கேள்வி பெருமளவில் அதிகரித்து வருவதனால், ஏற்றுமதிகளின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன்விளைவாக, உள்ளூர் சந்தை ஏற்றுமதிச் சந்தையிலும் பார்க்க கவர்ச்சி மிக்கதாக மாற்றமடைந் துள்ளது. உதாரணமாக, 1990க்கும் 1993க்கும் இடையில் கொப்பராவுக்கான இலண்டன் சந்தை விலையில் 28 சதவீத அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டிருந்தது. அதேவேளையில், தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவற்றுக்கான கொழும்பு மொத்தச் சந்தை விலை இக்காலப்பகுதியில் 137 சதவீதத்தினால் அதிகரித்து வந்தது.

உலகச் சந்தையில் மிதமிஞ்சிய அளவில் வழங்கல் செய்யப்பட்டு வரும் பண்டங்களின் விலைகள், எதிர்காலத்தில் சாதகமானவையாக இருந்துவர முடியும் என்பதற்கான அடையாளங்கள் எவையும் தென்படவில்லை. தேயிலை உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதில் சர்வதேச உற்பத்தி யாளர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளும் முயற்சி தோல்வி கண்டிருக்கும் அதேவேளையில், சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தங்களும் செயலிழந்து போயுள்ளன. இந்த சாதகமற்ற உலகச் சந்தை நிலைமைகளில் இலங்கையின் தேயிலையும், இறப்பரும், விளைதிறனை உயர்த்தி, உற்பத்திச் செலவைக் குறைத்து, தரத்தை மேம்படுத்தி வந்தால் மட்டுமே சர்வதேச சந்தையில் போட்டித் திறனுடன் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. இலங்கையில் ஹெக்டயார் ஒன்றுக்கான தேயிலை விளைச்சல் 1000 கிகி களுக்கும் சற்று உயர்வானதாக இருந்து வருகின்றது. இது தென்னிந்தியாவில் 1640 கிகி களாகவும் கென்யாவில் 1764 கிகி களாகவும் காணப்படுகிறது. எமது இறப்பர் விளைச்சல் 1993 இல் ஹெக்டயர் ஒன்றுக்கு 730 கிகி ஆக இருந்து வந்தது. இது மலேசியாவின் அளவான 1400 கிகி களிலும் பார்க்க பெருமளவுக்குக் குறைந்த ஒரு மட்டமாக இருந்து வருகின்றது. தேயிலையைப் பொறுத்தமட்டில், உற்பத்திச் செலவுகளில் சுமார் 65 தொடக்கம் 75 சதவீதம் வரையிலான செலவுகள் ஊழியச் செலவுகளாக இருந்து வருகின்றன. எனவே, ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதும் இங்கு மிகுந்த முக்கியத் துவத்தினை பெறுகின்றது. சிறுதேயிலைத் தோட்ட சொந்தக்காரர்களின் பிரச்சினை களை தீர்த்து வைக்கும் பொருட்டு புனருத்தாரண மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

### உற்பத்தியையும் ஏற்றுமதிகளையும் அதிகரிப்பதற்கான வழிமுறைகள்

அண்மைய வருடங்களில் எமது தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிகள் சிலவற்றின் தரம் வீழ்ச்சி கண்டு வந்துள்ளது என்பதற்கான சான்றுகள் உள்ளன. ஒரு சில தேயிலைக் கொள்வனவாளர்கள் உத்தியோகபூர்வமான முறையில் முறைப்பாடுகளை முன் வைத்துள்ளனர். இலண்டன் தேயிலை ஏல விற்பனைகளில் இலங்கைத் தேயிலையின் விலைகள் 1992-93 இல் இந்தியா மற்றும் மளாவி போன்ற நாடுகளின் தேயிலை விலைகளிலும் பார்க்க குறைவானதாக இருந்து வந்தன. இந்த விலைகள் 1989-90 காலப்பிரிவில் அநேகமாக ஒரே மட்டத்தில் நிலவி வந்துள்ளன என்ற உண்மையை நாங்கள் கவனத்தில் எடுக்கும் பொழுது, அண்மைய வருடங்களில் எமது ஏற்றுமதிகளின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. இறப்பரைப் பொறுத்தவரையில், ஜப்பான் இலங்கை யிலிருந்தான அதன் கொள்வனவை, (தரமற்ற பொதிப்படுத்தல் முறை, ஒப்பந்தங்களை நிறைவு செய்வதில் அடிக்கடி தவறிழைத்தல் என்பன காரணமாக) 1985 இல் 139,000 தொன்களிலிருந்து 1993 இல் 3,100 தொன்களாகக் குறைத்துக் கொண்டி ருந்தது. இப்பொழுது, இலங்கை, அதன் மிகப்பெரிய சந்தைகளான ஐரோப்பிய பொருளாதார சமூகம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன தொடர்பாகவும் ஒரு கடும் அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளது. அதாவது, இலங்கையின் இறப்பர் உற்பத்திகள் 1994 டிசம்பர் மாதத்துக்குள், ஐரோப்பிய யூனியனின் புதிய ISO 9000 தர நிர்ணய தேவைப்பாடுகளை நிறைவு செய்யத் தவறினால், அச்சந்தைகளை இழக்க நேரிடும். ஆசியாவின் ஏனைய இறப்பர் உற்பத்தியாளர்களான இந்தியா மற்றும் மலேசியா போன்ற நாடுகள் இம்முறையை கடந்த இரண்டு மூன்று வருட காலமாக செயற்படுத்தி வந்துள்ள அதேவேளையில்,

அட்டவணை 7

**சிறு விவசாய ஏற்றுமதிகளின் வீழ்ச்சி**

| பொருள் | சராசரி வருடாந்த ஏற்றுமதி 1981-91 கி.கி. | சராசரி வருடாந்த ஏற்றுமதி 1991-93 கி.கி. | வீழ்ச்சி %ஆக |
|---|---|---|---|
| 1. பழங்கள் | 9,695,200 | 4,609,300 | -51.6 |
| 2. பாக்கு | 2,592,500 | 1,161,900 | -55.2 |
| 3. கோப்பி | 2,693,800 | 1,773,600 | -34.2 |
| 4. கராம்பு | 1,357,700 | 1,279,700 | -5.7 |
| 5. ஏலம் | 187,100 | 21,300 | -88.6 |
| 6. எண்ணெய் விதைகள் | 13,634,800 | 1,430,900 | -89.5 |
| 7. ஏனைய எண்ணெய் விதைகள் | 3,913,300 | 55,700 | -98.5 |
| 8. கொக்கோ உற்பத்திகள் | 802,000 | 47,700 | -94.1 |
| 9. அத்தியாவசிய எண்ணெய். | 935,700 | 731,400 | -21.8 |
| 10. பப்பாசி | 29,900 | | - |

இலங்கை அதனைச் செயற்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது ஏன் என்று தெரியவில்லை. இந்தப் புதிய தர நிர்ணயங்களை நிறைவு செய்யும் செய்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான செலவுகளின் 50 தொடக்கம் 75 சதவீதம் வரையிலான செலவுகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இப்பொழுது முன்வந்துள்ளது. எனவே, இவ்வருட முடிவுக்குள் இவ்வேலை பூர்த்தி செய்யப்பட்டு விடும் என்று நம்பலாம்.

உள்நாட்டுச் சந்தைக்கும் வெளிநாட்டுச் சந்தைக்கும் என பண்டங்களை பெருமளவுக்குப் பதப் படுத்துவது, பதப்படுத்தப்படாத ஏற்றுமதிகளுக்கான சாதகமற்ற உலகச் சந்தை விலைகளிலிருந்து ஓரளவுக்கு நிவாரணம் பெற்றுத் தரும் ஒரு வழிமுறையாக இருக்க முடியும். உதாரணமாக, தேயிலையைப் பொறுத்த வரையில், பைகளில் அடைக்கப்பட்ட தேயிலையாகவும், சுவையூட்டப்பட்ட தேயிலையாகவும், பச்சை தேயிலையாகவும் ஏற்றுமதிக்கென பதப்படுத்துதல் பெரு மளவுக்கு வாய்ப்புக்களை எடுத்துவர முடியும். கடந்த பத்தாண்டு காலத்தின் போது, பதப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதிகள் அதிகரித்து வந்துள்ளன' என்பதனை அட்டவணை - 6 காட்டுகின்றது. எனினும், இப்பொழுது பெருமளவுக்குக் கிராக்கி நிலவிவரும் சி.ரி.சி.தேயிலையின் உற்பத்தியை இலங்கை அதிகரித்துக் கொள்ள தவறியுள்ளது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில், சிரிசி தேயிலை 3 சதவீதமாக மட்டுமே இருந்து வருகினற்து. இதன் விளைவாக, இலங்கை, பாகிஸ்தான் போன்ற பாரிய தேயிலை ஏற்றுமதிச் சந்தைகளை இழந்துள்ளது. இப்பொழுது, ஏனைய பாரம்பரிய தேயிலைகளுடன் கலப்பதற்கென, நாடு, சி.ரி.சி. தேயிலையை இறக்குமதி செய்து வருகின்றனது.

தேயிலையை ஜனரஞ்சமான ஒரு குளிர்பானமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகள் பெருமளவுக்கு வரையறுக்கப்பட்ட அளவிலேயே தென்படுகின்றன; உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பெரும் எடுப்பில், மிகுந்த உத்வேகத்துடன் இடம் பெற்று வரும் கொக்கோகோலே போன்ற பானங்களின் போட்டியே இதற்கான காரணமாகும். இறப்பர் துறையைப் பொறுத்தவரையில், பதப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பெருமளவில் காணப்படுகின்றன. இறப்பர் உற்பத்தியில் சுமார் 30 சதவீதம் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திக்காக பயன்படுத்தப் பட்டு வரிகின்றது. இறப்பர் பொருள் உற்பததியாளர்களின் ஏற்றுமதிகளின் பெறுமதி 1993 இல் 355.6 கோடி ரூபாவாக இருந்தது. டயர்கள், டியூப்கள், நீர் குழாய்கள், பாய்கள், மெத்தைகள், பாதணிகள் மற்றும் பொம்மைகள் போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் சம்பந்தப்பட்ட இறப்பரை அடிப்படை யாகக் கொண்ட கைத்தொழில்களின் விரிவாக்கததிலேயே இறப்பர் உற்பத்தித் துறையின் எதிர்காலம் தங்கியுள்ளது.

தெங்கு உற்பத்தித் துறையில் நிலவிவரும் முக்கியமான பிரச்சினை, குறைந்தது உள்நாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவேனும் உற்பத்தியை அதிகரிப்பதாகும். வருடமொன்றுக்கு நபர் ஒருவரின் தேங்காய் நுகர்வு 120 காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது; இந்த நிலையில், 2001 ஆவது ஆண்டில் நாட்டில் வாழும் 2 கோடி மக்களுக்கு 240 கோடி தேங்காய்கள் தேவைப்படும். 1991-93 காலப்பகுதியின் வருடாந்த சராசரி உற்பத்தி 221.5 கோடி காய்களாக மட்டுமே இருந்து வந்தது. எனவே, உள்நாட்டுத் தேவையை நிறைவு செய்வதற்காக மட்டும் அடுத்துவரும் 7 அல்லது 8 வருட காலத்துக்குள் உற்பத்தியை 8 சதவீதத் தினால் அதிகரித்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. ஏற்றுமதி செய்ய வேண்டுமானால், உற்பத்தி மேலும் உயர்ந்த மட்டங்களில் அதிகரிக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, நாங்கள் இப்பொழுது தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்து வருகின்றோம். உற்பத்தியில் கணிசமான அளவிலான ஓர் அதிகரிப்பு ஏற்படா விட்டால், உள்நாட்டு நுகர்வுக்காக தேங்காய்களைக் கூட இறக்குமதி செய் வதற்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட முடியும். தேங்காய் உற்பத்தியை, அதிக உரப்பாவனை மற்றும் உயர் விளைச்சல் தரும் வகைகளைக் கொண்ட மீள் நடுகை என்புவற்றினால் விளைச்சலை அதிகரித்துக் கொள்வதன் மூலமும், இலாபகரமற்ற தேயிலை மற்றும் இறப்பர் காணிகளில் புது நடுகையை மேற் கொள்வதன் மூலமும் அதிகரித்துக் கொள்ள முடியும். தேங்காய் விளைச்சல் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 2,500 காய்கள் என்ற அளவில் சில காலமாக தேக்கமுற்று வந்துள்ளது. தோட்டச் சொந்தக்காரர்கள் கடும் முயற்சிகளை எடுத்தால், விளைச்சலை 4000 – 5000 காய்கள் மட்டத்திற்கு உயர்த்திக் கொள்ள முடியும். தெங்குத் துறையின் உற்பத்தியில் சுமார் 80 தொடக்கம் 90 சதவீதம் வரையிலான உற்பத்தியை சுமார் 7 இலட்சம் சிறு தோட்டச் சொந்தக்காரர்களே வழங்கி வருகின்றனர். விளைச்சலை உயர்த்திக் கொள்வதற்கு அவசியமான அறிவோ அல்லது மூலவளங்களோ அவர்களிட மில்லை. அதன் விளைவாக, அரசாங்கத்தினால் பெருமளவுக்கு விளம்பரப்படுத்தப்பட்ட மீள்நடுகை மற்றும் புது நடுகை என்பவற்றுக்கு மானியங்களை வழங்கும் திட்டம் எதிர்பார்த்த அளவில் வெற்றிபெற முடியவில்லை. எனவே, மாகாண சபைகள், பிரதேச சபைகள், உள்ளூர் விவசாய உற்பத்தி மையங்கள், கிராமிய வங்கிகள் மற்றும் அடிமட்ட கிராமிய நிறுவனங்கள் என்பவற்றை, தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், விளைச்சலை உயர்த்திக் கொள்வதற் காகவும் மேற்கொள்ளப்படும் ஒரு தேசிய முயற்சியில் ஒன்று திரட்ட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

**சிறு விவசாய ஏற்றுமதிகள்**

நாடு ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சியை மேம்படுத்திவரும் வேளையில், கடந்த தசாப்தத்தின் போது 10 சிறுவிவசாயஏற்றுமதிப் பண்டங்கள் வீழ்ச்சி கண்டு வந்துள்ளன என்பது கவலையளிக்கும் ஒரு விஷயமாகும். பழவகைகள், பாக்கு, கோப்பி, கராம்பு, ஏலக்காய், எள்ளு விதை மற்றும் எண்ணெய் வித்துக்கள், கொக்கோ உற்பத்திகள், அத்தியாவசிய எண்ணெய்கள், பப்பாசி என்பவற்றின் ஏற்றுமதி அளவு 1981-83 காலப்பகுதி அளவிலும் பார்க்க 1991-93 காலப்பகுதியில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஓர் ஏற்றுமதிப் பண்டம் என்ற முறையில், பப்பாசி அறவே முக்கியத் துவத்தை இழந்துள்ளது; எண்ணெய் வித்துக்கள், கொக்கோ உற்பத்திகள், எள்ளு மற்றும் ஏலக்காய் என்பவற்றின் ஏற்றுமதிகள் 80 சதவீத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளன. இந்த அடிப்படையில், நாடு 1991-93 விலைகளில் சுமார் 83 கோடி ரூபா அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களை இழந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிவதற்கும், ஏற்றுமதிகளை மீண்டும் முடுக்கி விடுவதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமாகும்.

# அரிசியில் சுயதேவைப் பூர்த்தியும் உணவுப் பாதுகாப்பும்

*பிரடெரிக் அபேரத்ன*

'அரசி' மற்றும் 'சுயதேவைப்பூர்த்தி' ஆகிய இரண்டு பதங்களும் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் எளிதில் உணர்ச்சி களைத் தூண்டக்கூடிய பதங்களாக இருந்து வருகின்றன. கடந்த காலத்தில் இந்த இரு விடயங்களும் தொடர்பாக பல வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்று வந்துள்ளன. உணவுப் பாதுகாப்பு தொடர்பாக, நாங்கள் எப்படியாவது சரி, அரிசியில் சுயதேவைப்பூர்த்தி நிலையை எடுத்துவர வேண்டும் என ஒரு சித்தாந்த பள்ளியைச் சேர்ந்தவர்கள் வாதிட்டு வருகின்றனர். மறுபுறத்தில், சில பொருளியலாளர்களும உதவி வழங்கும் முகவரகங்களைச் சேர்ந்தவர்களும், அரிசியில் சுயதேவைப்பூர்த்தி குறிக்கோளை நிறைவு செய்ய முயற்சிக்கும் போது, அருமையான மூலவளங்கள் தவறான விதத்தில் ஒதுக்கப்படும் ஒரு நிலை தோன்ற முடியும் என்றும், அது நீண்ட காலத்தில் (குறிப்பாக, மொதேஉ க்கான முக்கிய பங்களிப்புத் துறையாக இருந்து வரும்) வேளாண்மைத்துறையின்மீது மிக மோசமாக தாக்கங்களை எடுத்து வரும் என்றும் வாதிட்டு வருகின்றனர். இந்த இரு வாதங்களிலும் ஓரளவுக்கு உண்மை உள்ளது. எனவே, இந்த இரு நிலைப்பாடுகளுக்கும் இடையில் ஒரு சமநிலையை எடுத்து வர வேண்டியது அவசியமாகும்: அதாவது, உணவுப் பாதுகாப்பு அம்சத்துக்கு ஊறு விளைவிக்காத அதே வேளையில், மூலவளங்களை தவறாக ஒதுக்கீடு செய்வதற்னை தவிர்த்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். நாட்டின் அரசியல் மற்றும்' பண்பாட்டுப் பரிமாணங்களை கவனத்தில் எடுக்கும் பொழுது, இது அச்சுறுத்தல் தரக்கூடிய ஒரு பணியாக இருந்து வருகின்றது என்பது தெளிவாகும்.

1980 களின் நடுப்பகுதி தொடக்கம், ஓரளவுக்கு சுயதேவைப்பூர்த்தி மட்டங்களை எட்டுவது குறித்து பெருமளவுக்கு பேசப்பட்டு வந்ததுடன், சுயதேவைப்பூர்த்தி குறித்து பல எறியக் கணிப்புக்களும் எதிர்வு கூறல்களும் முன்வைக்கப் பட்டடிருந்தன. மேலும், நாங்கள் மிதமிஞ்சிய அளவில் அரிசியை உற்பத்தி செய்யும் ஒரு நிலை தோன்ற முடியும் என்றும், தரம் குறைவாக இருப்பதனால் இந்த அரிசியை ஏற்றுமதி செய்ய முடியாது போகும் என்றும் அச்ச உணர்வுகள் நிலவி வந்தன. இந்த அனைத்துக் குறிப்புக்களிலும் 'சுயதேவைப் பூர்த்தி' என்ற பதம், மொத்த அரிசித் தேவையில் – அதாவது, உள்நாட்டு உற்பத்தி + இறக்குமதியில் – உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்கினையே சுட்டிக் காட்டியது. இந்த நிலையில், இரண்டு கேள்விகள் எழுகின்றன: (1) இந்த வகையைச் சேர்ந்த அரிசி சுயதேவைப்பூர்த்தி, உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஒரு நல்ல குறிகாட்டியாக இருந்து வருகின்றதா ? (2) அரிசியில் சுயதேவைப்பூர்த்தி மட்டங்களை சாதித்துக் கொள்ளும் விதத்தில், உற்பத்தியை நாங்கள் ஏன் அதிகரிக்கக் கூடாது என்பதற்கு வலுவான பொருளாதார காரணங்கள் உள்ளனவா? இந்த இரு விடயங்களும் இங்கு சுருக்கமாக கலந்துரையாடப்படுகின்றன.

அரிசியில் சுயதேவைப் பூர்த்தி மட்டும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஒரு நல்ல குறிகாட்டியாக இருந்து வருகின்றதா என்ற விடயம் முதலில்

**அட்டவணை I**

**நெல் உற்பத்தியும் குடித்தொகையும் 1970-1991**

| வருடம் | ** உற்பத்தி (000 மெ.) | * குடித்தொகை (1,000) | உற்பத்தி/குடித்தொகை |
|---|---|---|---|
| 1970 | 1615 | 12,514 | 0.12 |
| 1971 | 1396 (13.5) | 12,762 (1.98) | 0.10 |
| 1972 | 1312 (-6.0) | 12,962 (1.56) | 0.10 |
| 1973 | 1312 (0) | 13,170 (1.60) | 0.09 |
| 1974 | 1602 (22.1) | 13,381 (1.60) | 0.11 |
| 1975 | 1154 (-27.9) | 13,603 (1.65) | 0.08 |
| 1976 | 1252 (18.5) | 13,825 (1.63) | 0.09 |
| 1977 | 1677 (3.39) | 14,053 (1.64) | 0.11 |
| 1978 | 1890 (12.7) | 14,292 (1.70) | 0.13 |
| 1979 | 1917 (1.4) | 14,546 (1.73) | 0.13 |
| 1980 | 2133 (11.3) | 14,819 (1.87) | 0.14 |
| 1981 | 2229 (4.5) | 15,162 (1.80) | 0.14 |
| 1982 | 2155 (-3.3) | 15,359 (1.8) | 0.14 |
| 1983 | 2483 (15.2) | 15,636 (1.8) | 0.16 |
| 1984 | 2413 (-2.8) | 15,918 (1.80) | 0.15 |
| 1985 | 2634 (9.2) | 16,205 (1.77) | 0.15 |
| 1986 | 2590 (-1.7) | 16,117 (1.5) | 0.16 |
| 1987 | 2128 (-17.8) | 16,361 (1.5) | 0.13 |
| 1988 | 2477 (16.4) | 16,586 (1.37) | 0.14 |
| 1989 | 2063m (-16.7) | 16,813 (1.37) | 0.12 |
| 1990 | 2538 (23.0) | 16,993 (1.3) | 0.14 |
| 1991 | 2389 (-5.8) | 17,247 (1.3) | 0.13 |

*ஆதாரம்: * உணவு விவசாய ஸ்தாபன கம்ப்யூட்டர் சேவைகள், ரோம், இத்தாலி*
*** உ. வி. ஸ்தாபன கம்ப்யூட்டர் சேவைகளும் மத்திய வங்கி அறிக்கைகளும். முன்னைய வருடம் தொடர்பாக உற்பத்தி/ குடித்தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சி/ அதிகரிப்பு அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன.*

நோக்கப்படுகின்றது. இலங்கை, கடந்த மூன்று தசாப்த காலமாக நெல் உற்பத்தியில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய வளர்ச்சியை (அட்டவணை 1) ஈட்டிக் கொண்டுள்ளது. இதற்கு எமது ஆராய்ச்சியாளர்களின் சிறந்த பணிகளும், அடுத்தடுத்து வந்த அரசாங் கங்கள் நீர்ப்பாசனம் போன்ற உள் கட்டமைப்பு வசதிகளை தொடர்ச்சியாக வழங்கி வந்தமையுமே காரணங்களாக இருந்து வந்தன. உள்நாட்டு நெல் உய்பத்தி 1960/61 இன் 9 இலட்சம் மெற்றிக் தொன் அளவிலிருந்து, 1990 அளவில் 25 இலட்சம் மெற்றிக் தொன்களாக அதிகரித்திருந்தது. இந்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது, இலங்கை சுயதேவைப்பூர்த்தியில் 90 சதவீதத்துக்கு அதிகமான மட்டத்தை சாதித்துக் கொண்டிருப்பதனை காண முடிகிறது. எனினும், இதனை, பல்வேறு காரணங்களின் நிமித்தம், உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஒரு உண்மையான குறிகாட்டியாக கருத முடியாதுள்ளது. கடந்தகாலத்தில், உணவு பாதுகாப்பு தொடர்பான அக்கறைகளை பொதுவாக கவனத்தில் எமுத்து வந்த

அட்டவணை 2

**அரிசி, மாவு இறக்குமதி, இலங்கை 1975-1991**

| வருடம் | அரிசி இறக்குமதிகள் (1,000 மெட். தொ.) | கோதுமை மாவுக்கு சமமானது (1,000 மெ. தொ.) (கோதுமை+மாவு) |
|---|---|---|
| 1975 | 449.9 | 698.7 |
| 1976 | 468.2 | 548.7 |
| 1977 | 528.6 | 877.4 |
| 1978 | 166.5 | 959.6 |
| 1979 | 208.2 | 791.5 |
| 1980 | 230.9 | 711.6 |
| 1981 | 156.8 | 513.9 |
| 1982 | 160.9 | 504.7 |
| 1983 | 124.2 | 598.2 |
| 1984 | 26.5 | 660.4 |
| 1985 | 182.3 | 723.8 |
| 1986 | 220.1 | 691.3 |
| 1987 | 102.4 | 588.6 |
| 1988 | 188.6 | 647.9 |
| 1989 | 313.4 | 726 |
| 1990 | 172 | 577 |
| 1991 | 133 | 670 |

ஆதாரம்: உணவு விவசாய ஸ்தாபனம் வர்த்தக ஆண்டு நூல் (1971-1989)

அட்டவணை 3

**இலங்கையில் அரிசி தன்னிறைவு நிலை பற்றிய ஒரு மதிப்பீடு 1981-1991**

| | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இறக்குமதிகள் | | | | | | | | | | | |
| (அ) அரிசி (1,000 மெ.தொ.) | 156 | 160 | 124 | 26 | 182 | 220 | 102 | 188 | 313 | 172 | 133 |
| (ஆ) கோதுமை/ மாவு (1,000 மெ.தொ.) | 513 | 504 | 598 | 660 | 723 | 691 | 588 | 647 | 726 | 577 | 670 |
| உற்பத்தி | | | | | | | | | | | |
| (இ) நெல் (மெ.தொ.) | 2230 | 2155 | 2483 | 2413 | 2634 | 2590 | 2128 | 2477 | 2063 | 2538 | 2389 |
| (ஈ) நுகர்வுக்கு கிடைத்த நெல் (10% விரயம் போன்றவை) | 2007 | 1940 | 2235 | 2172 | 2371 | 2331 | 1916 | 2230 | 1857 | 2285 | 2151 |
| (உ) நுகர்வுக்கு கிடைத்த அரிசி (ஈ) X .68 | 1364 | 1319 | 1519 | 1476 | 1612 | 1585 | 1302 | 1516 | 1262 | 1553 | 1462 |
| (ஊ) மொத்த மாவுப்பொருள் நுகர்வு (அ) + (ஆ) + (உ) | 2033 | 1983 | 2241 | 2162 | 2517 | 2496 | 1992 | 2351 | 2301 | 2302 | 2265 |
| எ) நுகரப்பட்ட மொத்த மாவுப் பொருளின் வீதமாக மொத்த உற்பத்தி | 67 | 66 | 67 | 68 | 64 | 63 | 65 | 64 | 54 | 67 | 64 |

ஆதாரம் : உணவு விவசாய ஸ்தாபனம், வர்த்தக ஆண்டு நூல் (1971,1985) இலங்கையின் சமூக, பொருளாதார புள்ளி விவரங்கள், மத்திய வங்கி அறிக்கைகள்

தானிய உற்பத்தி, பிரதானமாக உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மற்றும் தினை வகைகளை உள்ளடக்கியிருந்தது. எனினும், கடந்த சில வருடங்களின் போது, அரிசியைத் தவிர்ந்த ஏனைய தானிய வகைகள், இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையினால் பதிலீடு செய்யப்பட் டிருந்தது போல தெரிகிறது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தானியங்களை பொறுத்தவரையில், அரிசியில் மட்டுமே நாங்கள் ஓரளவுக்கு சுயதேவைப்பூர்த்தி நிலையை எட்டியுள்ளோம் என்பதே இதன் பொருளாகும். அரிசி உற்பத்தியில் அதிகரிப்பும் அதன் உடனிகழ்வாக அரிசி இறக்குமதிகளில் வீழ்ச்சியும் ஏற்பட்டிருந்த போதிலும், கோதுமை இறக்குமதிகள் உயர்மட்டங்களில் இடம் பெற்று வந்துள்ளன. உதாரணமாக, உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் அரிசி இறக்குமதிகள் செங்குத்தாக வீழ்ச்சி யடைந்து வந்துள்ளன. 1970 களின் நடுப்பகுதியில், ஆண்டொன்றுக்கு சுமார் 450,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதுடன் ஒப்பிடும் பொழுது, 1980 களின் போது அது ஆண்டொன்றுக்கு சுமார் 175,000 மெற்றிக் தொன்களாக செங்குத்தாக வீழ்ச்சியடைந் திருந்தது. ஆனால், இதனுடன் இணைந்த விதத்தில், கோதுமை இறக்குமதிகளில் ஒரு வீழ்ச்சியை அவதானிக்க முடிய வில்லை. உண்மையிலேயே, கோதுமை மா மற்றும் பதப்படுத்தப்படாத கோதுமை என்பவற்றின் இறக்குமதி ஆண்டொன் றுக்கு சுமார் 600,000 மெற்றிக் தொன்களி லிருந்து 700,000 மெற்றிக் தொன் வரையில் நிலவி வந்தது (அட்டவணை 2).

எனவே, தற்போதைய மொத்த தானியத்தேவை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை என்பவற்றின் கூட்டு மொத்தமாக இருந்து வருகின்றது. உண்மையிலேயே, அரிசியையும், கோதுமையையும் எளிமை யான எண் கணிதத்தின் அடிப்படையில் கூட்டி கணக்கிட முடியாதென ஒருவர் வாதிட முடியும். ஏனெனில், இந்த இரு தானியங்களுக்கிடையிலான நுகர்வோர் விருப்புக்கள், போஷாக்கு பெறுமதி மற்றும் பொருளாதாரமல்லாத ஏனைய காரணிகள் என்பவற்றில் பெருமளவு வேறுபாடுகள் நிலவி வருகின்றன. அதே வேளையில், கோதுமை, அரிசிக்கு ஒரு நெருக்கமான பதிலீட்டுப் பொருளாக இருந்து வருகின் றதென்பதையும், இந்த எளிய எண் கணித கூட்டல், எமது பாதுகாப்புக்காகத் தேவைப்படும் அரிசியின் அளவு குறித்த மேலோட்டமான ஒரு சித்திரத்தை தர முடியு மென்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த ஒரு தசாப்த காலத்தின் போது, நாட்டின் மொத்த தானியத் தேவையின் சுமார் 65 சதவீத்தினை மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி பங்களிப்புச் செய்து வந்துள்ளது என்பதனை இந்த மதிப்பீடு சுட்டிக் காட்டுகிறது. இது பெருந்தொகையான சிக்கல்களுடன் சம்பந்தப்பட்டுள்ள ஒரு விடயமாகும். இதில் மிக முக்கியமானது, உணவுப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு அரிசி உற்பத்தியின் பங்களிப்பு எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்க குறைவாக இருந்து வந்துள்ளது என்பதாகும். அரிசி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது, மிகை உற்பத்தி அபாயத்தினை உடனடியாக எடுத்து வர மாட்டாது. உற்பத்தி அதிகரிப்புடன் இணைந்த விதத்தில், சார்புரீதியான விலைகள் அரிசிக்கு சார்பான விதத்தில் நகர்ந்து செல்லும்: இதன் விளைவாக, கேள்வியில் ஒரு அதிகரிப்பு ஏற்படும். உண்மையிலேயே எந்த அளவுக்கு ஒரு நகர்வு இருந்து வருமென்பதை தீர்மானிப்பதில் நுகர்வோர் முன்னுரிமையும் ஏனைய பொருளாதாரமல்லாத காரணிகளும் ஒரு பங்கினை வகித்து வரும். எனவே, இது குறித்து ஒரு ஆழமான ஆய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இரண்டாவது கேள்வி, அரிசி சுய தேவைப்பூர்த்தியின் பொருளாதார சாத்தியப்பாட்டுடன் சம்பந்தப்பட்டதாக இருந்து வந்தது. இது ஒப்பீட்டுரீதியான அனுகூலம் என்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு நாடு, குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் உற்பத்தியில் ஒப்பீட்டுரீதியான அனு கூலத்தை கொண்டிருக்கும் பொழுது, அந்த பண்டத்தின் உற்பத்திக்காக மூலவளங்களின் ஒதுக்கீடு பலப் படுத்தப்படல் வேண்டுமென பொருளியலாளர்கள் வாதாட முடியும். அரிசி தொடர்பாக இலங்கையில் முன்வைக் கப்பட்டு வரும் வாதம், அரிசி உற்பத்தி செய்வதில் இலங்கை ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்தைப் பெற்றிருக்கவில்லை என்பதாகும். எனவே, அரிசியை இறக்குமதி செய்து, ஏனைய பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மூலவளங்களை பன்முகப்படுத்துதல் பெருமளவுக்கு ஒரு சிக்கன நடவடிக்கையாக இருந்து வரமுடியும் எனக் கருதப்படுகிறது.

தற்பொழுது, பல்வேறு காரணங்களால் அரிசியின் விளைதிறனில் ஒரு தேக்கநிலை நிலவி வருகின்றது. எனவே, உற்பத்தித்துறையை மேம் படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இரண்டாவதாக, விளைச்சல் குறைவாக இருந்து வரும் (குறிப்பாக) சிறிய நீர்ப்பாசன மற்றும் மழைநீர்ப்பாசன பகுதிகளில் (மண் வகை ஏற்புடையதாக இருந்தால்) நீர் அதிகம் தேவைப்படாத பயிர்களை சாகுபடி செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். இலங்கையின் நெற்காணிகளில் அரைவாசிப் பகுதி ஒரு வகையான தரம் குறைந்த மண் வகையைக் கொண்டிருப்பதனால், அவற்றை வேறு பயிர்களின் சாகுபடிக்கு பன்முகப்படுத் துவது சிரமமானதாகும். கமநல ஆய்வுப் பயிற்சி நிறுவகம் மேற்கண்ட ஒப்பீட்டு அனுகூல ஆய்வுகளில் நிலவாடகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிலங்களில், வேறுபயிர்களை சாகுபடி செய்வதற்கான வாய்ப்பு இல்லாதிருந்து வருவதனால், சந்தர்ப்பச்செலவு பூச்சிய மாக இருந்து வருகின்றது. எனவே, இந்த விடயம் கவனத்தில் எடுக்கப்படு மாயின், மூலவள செலவு விகிதங்கள் மற்றும் உள்நாட்டு மூலவள செலவு விகிதங்கள் என்பன பெருமளவுக்கு அரிசிக்கு சாதகமானவையாகவே இருந்து வரும்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பாக, உள்நாட்டு அரிசி உற்பத்தி மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வர வேண்டும் என முடிவாக கூற முடியும். இலங்கை, குறிப்பிட்ட சில புவியியல் பிரதேசங்களில் அரிசி உற்பத்தியில் ஒப்பீட்டுரீதியான அனுகூல நிலையைக் கொண்டுள்ளது. அது தொடர்ந்தும் அரிசியை உற்பத்தி செய்வதன் மூலமும், விளைதிறன் அதிகரிப்புக் கூடாக உற்பத்தியை மேலும் பெருக்கிக் கொள்வதன் மூலமும் இந்த ஒப்பீட்டு அனுகூல நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், ஏனைய உப உணவுப் பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம், நெற்காணிகளில் விவசாயத்தைப் பன்முகப்படுத்தி, விவசாயிகளின் வருமான அதிகரிப்புக்கும் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க முடியும்.

# சுகாதார பராமரிப்பில் குடித்தொகைப் பெருக்கத்தின் நெருக்குதல்கள்

கலாநிதி இந்திரலால் டி சில்வா
(முத்த விரிவுரையாளர், குடிசனவியல் பயிற்சி, ஆராய்ச்சி அலகு, கொழும்பு பல்கலைக்கழகம்)

## அறிமுகம்

'சுகாதாரம்' என்ற பதத்துக்கு வரைவிலக்கணம் கொடுக்கும் பொழுது நாங்கள் முதலில் எதிர்கொள்ளும் இடையூறு, உடல் நலம் இல்லாத நிலையில் மட்டுமே நாங்கள் சுகாதாரத்தை தெரிந்து கொள்கிறோம் என்ற உண்மையாகும். உலக சுகாதார ஸ்தாபனம், சுகாதாரம் என்பது, "உடல், உள மற்றும் சமூக நலன் என்பவற்றைக் கொண்ட ஒரு நிலையாகும்" என வரைவிலக்கணம் வழங்கியுள்ளது. உடல் உறுப்புக்களின் அமைதியுடன் வாழும் ஒரு வாழ்க்கையே 'சுகாதாரம்' ஆகும் என சிலர் வாதிட்டு வருகின்றனர். இந்த வரைவிலக்கணங்கள் என்னவாக இருந்த போதிலும், நாங்கள், சுகாதாரம்" என்ற சொற் பிரயோகத்தை பல்வேறு பின்னணிகளில், அடிப் படைகளில் பயன்படுத்தி வருகின்றோம். சுகாதார நிலைமாற்றம் என்ற கருதுகோள் உயர்ந்த மரண விகிதங்களிலிருந்து குறைந்த மரண விகிதங்களை நோக்கி, பல கட்டங்களுக்கூடாகச் செல்லும் ஒரு பயணத்தைக் குறிக்கிறது. எனவே, இக்கட்டுரை, இலங்கையில் கடந்த பல தசாப்த காலமாக மரண விகிதங்களிலும் நோய்வாய்ப்படும் தன்மையிலும் ஏற்பட்டு வந்துள்ள வேறுபாடுகள் மற்றும் மாற்றங்கள் என்பவற்றின் அடிப்படையில், சுகாதார நிலை மாற்றத்தை எடுத்து விளக்குகின்றது.

## மரண விகிதத்தில் ஏற்பட்ட மாற்றம்

பொருளாதார வளர்ச்சி மட்டம் தாழ்ந்த நிலையில் இருந்து வந்த போதிலும், மரண விகிதங்களை பெருமளவுக்கு குறைத்துக் கொள்வதில் வெற்றி கண்டுள்ள உலகின் ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்து வருகின்றது என அடிக்கடி குறிப்பிடப்பட்டு வருகின்றது. இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் மரண விகிதம் உயர்வாக இருந்து வந்ததுடன், அவ்வப்போது பரவிய கொள்ளை நோய்கள் காரணமாக அது பெரும் தளம்பல்களுக்கும் உட்பட்டு வந்தது. தொற்றுநோய்களை கட்டுப்படுத்து வதற்கும், பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் விளைவாக, மரண விகிதங்களில் துரித வீழ்ச்சி ஏற்பட்டு வந்தது.

அட்டவணை 1

மரண விகித புள்ளிவிவரங்கள் 1930 - 1990

| வருடம் | மொத்த மரண விகிதம் (CDR) | சிசு மரண விகிதம் (IMR) | தாய் மரண விகிதம் (MMR) | புதிதாகப்பிறக்கும் குழந்தைகளின் இறப்புவீதம் |
|---|---|---|---|---|
| 1930 | 25.4 | 175 | 21.4 | - |
| 1940 | 20.6 | 149 | 16.1 | - |
| 1950 | 12.6 | 82 | 5.6 | 49.2 |
| 1960 | 8.6 | 57 | 3.0 | 34.2 |
| 1970 | 7.5 | 48 | 1.2 | 29.7 |
| 1980 | 6.2 | 34 | 0.6 | 22.7 |
| 1990 | 5.8 | 19 | - | - |

குறிப்பு: CDR - ஆயிரம் பேருக்கு மரண எண்ணிக்கை
IMR - ஆயிரம் உயிர்ப் பிறப்புக்களுக்கு சிசு மரணம்:
MMR - கருத்தரிப்பு மற்றும் பிரசவ கோளாறுகள் காரணமாக 100,000 உயிர்ப் பிறப்புக்களில் பெண்களின் மரண எண்ணிக்கை.
புதிதாக பிறக்கும் குழந்தைகளின் இறப்பு வீதம் - முதல் நான்கு வார காலத்தில் புதிதாக பிறக்கும் குழந்தைகளின் மரண எண்ணிக்கை - 1000 உயிர்ப் பிறப்புக்களுக்கு.

ஆதாரம்: தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம்

1946க்கும் 1947க்கும் இடைப்பட்ட காலத்திலேயே மொத்த மரண விகிதத்தில் பெருமளவிலான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது: அதாவது, மொத்த மரண விகிதம் 29% ஆல் வீழ்ச்சி கண்டிருந்தது. மலேரியா நோய் கட்டுப்படுத்தப்பட்டமையே மரண விகிதத்தில் இவ்விதம் செங்குத்தாக வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு முக்கிய பங்களிப்புக் காரணியாக இருந்து வந்துள்ளது என பலர் வாதாடுகின்றனர் (அபயரத்ன, 1950: நிவ்மான் 1965). யுத்தத்துக்கு பிற்பட்ட காலப்பகுதியில், குடித்தொகை அதிகரிப்பு விகிதத்தை துரிதப்படுத்துவதில் மலேரியா ஒழிப்பு ஒரு முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளது என நிவ்மான் குறிப்பிடு கின்றார்: யுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்ட குடித்தொகை அதிகரிப்பின் சுமார் 60 சதவீதத்துக்கு மலேரியா ஒழிப்பு இயக்கமே பொறுப்பாக இருந்து வந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பிரெடெரிக்ஸன் (1960) மற்றும் மீகம (1969) ஆகியோர், 1946 க்கும் 1947 க்கும் இடையில் மரண விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, நாட்டுக்குள் மலேரியா வலயங்களிலும் மலேரியா பாதிக்காத வலயங்களிலும் ஒரே மாதிரியாக இருந்து வந்துள்ளதென்று குறிப்பிடுகின்றனர்: அதனால், பொருளாதார அபிவிருத்தியுடனும் வாழ்க்கைத் தரம் உயர்ந்து சென்றதுடனும் இணைந்த வகையில், மரண விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது என அவர்கள் முடிவாக கூறுகின்றனர். மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் யுத்தத்துக்குப் பிற்பட்ட காலத்தில் மரண விகிதத்தில்

அட்டவணை 2

பிறப்பில் ஆயுள் எல்லை தொடர்பான போக்குகள்
1921 - 1991

| வருடம் | பிறப்பில் ஆயுள் எல்லை(e) ஆண் | பெண் | வித்தியாசம் |
|---|---|---|---|
| 1921 | 32.7 | 30.7 | +2.0 |
| 1946 | 46.8 | 44.7 | +2.1 |
| 1953 | 58.8 | 57.5 | +1.3 |
| 1963 | 63.3 | 63.7 | - 0.4 |
| 1971 | 64.0 | 66.8 | - 2.8 |
| 1981 | 67.7 | 72.1 | - 4.4 |
| 1991* | 70.1 | 74.8 | - 4.7 |

| கட்டம் (காலம்) | e யில் வருடாந்த சாரசரி அதிகரிப்பு | |
|---|---|---|
| முதலாவது (1921-46) | 0.45 | 0.40 |
| இரண்டாவது (1946-63) | 1.10 | 1.13 |
| மூன்றாவது (1963-81) | 0.27 | 0.49 |

குறிப்பு : * திட்டமிடப்பட்டது

ஆதாரம்: தொகை மதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம்.

அட்டவணை 3

சமூக-பொருளாதார வேறுபாடுகளின் அடிப்படையில்
சிசு மற்றும் சிறுவர் மரணம் 1977 - 1987

| மாறி | சிசு மரணம் (1 x) | சிறுவர் மரணம் (4 x) | 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் மரணம் (5 x) |
|---|---|---|---|
| **துறை** | | | |
| கொழும்பு | 32.8 | 6.8 | 39.4 |
| ஏனைய நகர | 36.5 | 4.3 | 40.6 |
| கிராம | 29.9 | 10.3 | 39.9 |
| தோட்டப்புறம் | 57.5 | 16.5 | 73.1 |
| **தாய்மார் கல்வி** | | | |
| கல்வியில்லை | 52.3 | 20.0 | 71.3 |
| ஆரம்ப கல்வி | 33.8 | 9.4 | 42.9 |
| நடுநிலைக்கல்வி | 32.0 | 9.3 | 41.1 |
| நடுநிலைக்கு மேல் | 19.7 | 6.5 | 26.0 |
| மொத்தம் | 32 1 | 10.0 | 42.1 |

ஆதாரம்: தொகைமதிப்பு, புள்ளிவிவர திணைக்களம் (1988)

ஏற்பட்ட வீழ்ச்சியில் சுமார் 23 சதவீதத்துக்கு பங்களிப்புச் செய்திருந்ததென கிரே (1974) மதிப்பிட்டுள்ளார்.

மரண விகித வீழ்ச்சி தொடர்பான இரு அம்சங்கள் இங்கு கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்: (1) சிசு மரண விகிதத்தில் ஏற்பட்ட தீவிர வீழ்ச்சி; (2) தாய் மரண விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி. சிசு மரண விகிதம், 1940 இல் ஆயிரம் உயிர்ப் பிறப்புக்களுக்கு 149 ஆக இருந்து 1950 இல் 82 ஆகவும், 1990 இல் 19 ஆகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. சிசு மற்றும் பிள்ளை மரண விகிதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக, பெரும்பாலான குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது. இது உயர் கருவள மட்டங்களை தூண்டிவிட்ட ஒரு காரணியை – அதாவது, உயர் பிள்ளைப்பருவ மரணங்களால் ஏற்பட்ட விரயத்தை – நீக்கியது.

இலங்கையில், தற்பொழுது பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்கள் தொடர்பாக 70.1 வருடங்களாகுவும், பெண்கள் தொடர்பாக 74.8 வருடங்களாகவும் இருந்து வருகின்றது. 1946 க்கும் 1981 க்கும் இடையில் இது ஆண்கள் தொடர்பாக 21 வருடங்களாலும், பெண்கள் தொடர்பாக 27 வருடங்களாகவும் அதிகரித்திருந்தது (அட்டவணை 2). 1920 களில் ஆண்களின் ஆயுள்காலம் பெண்களின் ஆயுட் காலத்திலும் பார்க்க 2 வருடங்கள் அதிகமானதாக இருந்து வந்தது; ஆனால், இப்பொழுது பெண்கள் ஆண்களிலும் பார்க்க 5 வருடங்கள் கூடிய ஆயுளைக் கொண்டுள்ளனர். இந்த மாற்றம் 1960 களில் ஆரம்பமாகியது. சராசரி ஆயுள் எல்லையில் ஏற்பட்ட துரித அதிகரிப்பும், ஆண், பெண் ஆயுள் விகிதங்களில் ஏற்பட்டு வந்த வேறுபாடுகளும், சிசுக்கள், சிறுபிள்ளைகள் மற்றும் குழந்தை பெற்றுக் கொள்ளக்கூடிய பெண்கள் ஆகியோரின் ஆரோக்கிய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதனை பிரதிபலிக்கின்றது.

மூன்றாவது உலக தரங்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது, மரண விகிதங்கள் மிகக் குறைவானவையாக இருந்து வந்த போதிலும், குடித் தொகையில், வயதுத் தொகுதியினர் பிரிவுகளுக்கிடையே மரண விகிதங்களில் வேறுபாடுகள் நிலவி வருகின்றன. தோட்டப்பகுதிகளில் சிசு மற்றும் சிறு பிள்ளை மரண விகிதங்கள் நாட்டின் ஏனைய பாகங்களின் தேசிய சராசரியிலும் பார்க்க இரு மடங்கு உயர்வானதாக இருந்து வருகின்றன. கல்வி கற்ற தாய்மாரைப் பொறுத்தமட்டில், சிசு/ பிள்ளை மரண விகிதங்களை அவர்கள் குறைந்த மட்டங்களிலேயே எதிர்கொண்டு வருகின்றனர் (அட்டவணை 3).

### நோய்வாய்படும் தன்மை

நோய்வாய்ப்படும் தன்மையில் ஏற்படும் மாற்றங்கள் இருவழிகளில் ஏற்படுகின்றன. முதலில், தொற்று நோய்களில் ஏற்படும் வீழ்ச்சியினால் மரண விகிதத்தில் வீழ்ச்சி ஏற்படும் பொழுது, குடிசனவியல் அமைப்பில் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. இதன் விளைவாக, கருவளமும் ஓரளவுக்கு அதிகரிக்கின்றது. இரண்டாவதாக, கருவள வீழ்ச்சி மற்றும் மரணத்துக்கான காரணங்களுக்கிடையே விழ்ச்சி என்பவற்றின் பின்விளைவாக ஒரு மாற்றம் ஏற்படுகின்றது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நோய் நிகழ்வுகளை அடுத்தே குடித் தொகையொன்றில் மரணங்கள் ஏற்படுகின்றன. ஆனால், எல்லா

நோய்களும் மரணத்துக்கு இட்டுச் செல்வதில்லை. எனினும், குடித்தொகையொன்றின் நோய்வாய்ப்படும் தன்மையை அளவிடுவது மிகவும் சிரமமானதாகும். பொதுவாக, மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களின் தரவுகள் குடித்தொகையொன்றின் நோய்வாய்ப்படும் நிலைமைகள் குறித்த விளக்கங்களை ஓரளவுக்குத் தர முடியும். எனினும், மருத்துவமனைத் தரவுகள் தீவிரமான நோய்கள் தொடர்பான - அதாவது நோயின் தீவிரம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டியளவுக்கு உயர்வானதாக இருந்து வருகின்றதென மருத்துவர்கள் கருதும் நோய்கள் தொடர்பான - தரவுகளாக மட்டுமே உள்ளன. மருத்துவமனைத் தரவுகள், சமூகத்தின் மொத்த சுகாதாரத் தேவைகள் குறித்த அரைகுறையான ஒரு கண்ணோட்டத்தை வழங்கி வந்தபோதிலும், மருத்துவமனைப் பராமரிப்பினைத் திட்டமிடுவதில் அவை பெருமளவுக்கு பயனுள்ளவையாக இருந்து வருகின்றன.

இலங்கையின் அண்மைக்கால நோய்வாய்ப்படும் போக்குகளை கவனத்திலெடுக்கும் பொழுது, சுவாச முறையுடன் சம்பந்தப்பட்ட நோய்கள், மருத்துவ மனையில் சேர்க்கப்படுவதற்கான முன்னணி காரணமாக இருந்து வருகின்றது என்பதனைக் காண முடிகின்றது. சின்னம்மை, இளம்பிள்ளை வாதம், வாந்திபேதி, சயரோகம் போன்ற முக்கிய நோய்களை தடுப்பூசி ஏற்றல் நிகழ்ச்சித்திட்டங்களும், விசேஷ சுகாதார பிரச்சார முயற்சிகளும் ஒன்றில், முற்றாகக் கட்டுப்படுத்தியுள்ளன; அல்லது ஒழித்துக் கட்டியுள்ளன. பல தசாப்தங்களுக்கு முன்னர் ஒழிக்கப்பட்ட மலேரியா நோய், இன்னமும் கூட இலங்கையில் மருத்துவமனை அனுமதிகளில் ஒரு சிறு பகுதிக்கு (5 சதவீதம்) பொறுப்பானதாக இருந்து வருகின்றது. மேலும், அநுராதபுரம், பொலனறுவை, மொனராகலை போன்ற பகுதிகளில் ஆட்கள் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுவதற்கான பிரதான காரணமாக மலேரியாவே இருந்து வருகின்றது. மருத்துவமனைத் தரவுகளை ஆய்வுகளுக்காகப் பயன்படுத்தும் பொழுது சற்று விழிப்பாக இருந்துவர வேண்டும். ஏனெனில், பெரும்பாலான நோயாளிகள் தொடர்பாக, மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவதற்கான காரணம் "சரியாக நிர்ணயிக்கப்படாத நோய்க்குறிகள்" என்றே பட்டியல் இடப்பட்டுள்ளன.

அட்டவணை 4

**மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கான முக்கிய காரணங்கள் 1986 மற்றும் 1992**

| நோயின் பெயர் | 1992 | | 1986 | |
|---|---|---|---|---|
| | சதவீதம் | நிலை | சதவீதம் | நிலை |
| சுவாசம் சம்பந்தமான நோய்கள் | 10.1 | 1 | 8.8 | 2 |
| உடல் காயங்கள் | 9.2 | 2 | 7.5 | 3 |
| நோய்க்குறிகள் விளங்காத நோய்கள் | 7.9 | 3 | 9.2 | 1 |
| குடல் தொற்று நோய்கள் | 6.3 | 4 | 6.3 | 4 |
| மலேரியா | 5.1 | 5 | 5.7 | 5 |
| உடற்கூற்று நோய்கள் | 4.1 | 6 | 2.9 | 9 |
| வைரஸ் நோய்கள் | 4.1 | 7 | 3.0 | 8 |
| சீரண உறுப்பு நோய்கள் | 3.8 | 8 | 3.6 | 6 |

ஆதாரம்: சுகாதார அமைச்சு (1992)

அரச மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வந்த உள் நோயாளிகள் தொடர்பான தரவுகள் இதுவரையில் கலந்துரையாடப்பட்டு வந்தன. ஆயுள்வேத மருத்துவ மனைகளுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கும் அனுமதிக்கப்படும் நோயாளிகள் தொடர்பான நோய் தகவல்களும், அரச மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலும் தனியார் சிகிச்சை நிலையங்களிலும் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றுக் கொள்பவர்களின் நோய்கள் தொடர்பான தரவுகளும் கிடைக்கவில்லை. எனவே, மருத்துவமனை நோய் புள்ளிவிவரங்களை, பனிப்பாறையின் நுனியாக மட்டுமே கருதவேண்டியுள்ளது. குடும்ப உறுப்பினர்களை பேட்டி காண்பதன் மூலம் மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வொன்றிலிருந்து திரட்டப்படும் தகவல்கள் நோய்வாய்ப்படும் தன்மையை பரிசீலிப்பதற்கு பெருமளவுக்குப் பொருத்தமானவையாக இருந்துவர முடியும்.

கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு 1993இல் பிள்ளைகளின் போஷாக்கு மற்றும் சுகாதார நிலை என்பன குறித்த தேசிய மாதிரி ஆய்வொன்றினை மேற்கொண்டது. இந்த ஆய்வு, மூன்று வயதுக்கும் 59 மாதங்களுக்கும் இடைப்பட்ட சிறுவர்களில் அரைவாசிப் பங்கினர் முன்னைய மாதத்தில் சுகவீனமுற்றிருந்தனர் என்பதைக் காட்டியது. பிள்ளைகளின் நோய்வாய்ப்படும் தன்மையில் நகர/கிராம வேறுபாடொன்று நிலவிவரவில்லை. நோயுற்ற பிள்ளைகளில் சுமார் 80 சதவீதத்தினர் வெளி நோயாளர்களாக சிகிச்சை பெற்றுள்ளனர். 7 சதவீதத்தினர் உள் நோயாளர்களாக சிகிச்சை பெற்றனர். இவர்களில் 12 சதவீதத்தினர், வீடுகளில் கைமருந்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டதுடன், 2 சதவீதத்தினர் சிகிச்சை எதனையும் பெறவில்லை.

இலங்கையில் 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளிடையே காய்ச்சலே பரவலாகக் காணப்படும் நோயாக இருந்து வருகின்றது. முன்னைய மாதத்தில் ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் 30 சதவீதத்தினர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தனர் என்பது இந்த ஆய்விலிருந்து கண்டறியப்பட்டது. சுமார் 12 சதவீதமான பிள்ளைகள் கடுமையான மூச்சுத்திணறல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். நகர்ப்புற சிறுவர்கள் அதிகளவு வாந்தி பேதியினால் பாதிக்கப்பட்டிருந்தனர். பொதுவாக, திறந்த வெளி மூலங்களிலிருந்து நீரினைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இந்நோயினால் அதிகளவுக்கு பாதிப்புறக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளனர் என்பது கண்டறியப் பட்டுள்ளது. இலங்கையின் சமகால சுகாதாரப் பிரச்சினைகளை பொறுத்த மட்டில், கருவுற்ற பெண்களிடையே, காணப்படும் இரத்தச் சோகை எமது விசேஷ கவனத்தை வேண்டி நிற்கின்றது. ஏனெனில், இது அப்பெண்கள் பிரசவிக்கப் போகும் குழந்தைகளின் உடல் மற்றும் மன நலத்துடன் பெருமளவுக்குச் சம்பந்தப்பட்ட நோயாக இருந்து வருகின்றது. கருவுற்றிருக்கும் பெண்களிடையே காணப்படும் இரத்தச் சோகை குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு (டி சில்வா, 1993) 50 சதவீதத்தினர் இதனால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதனை சுட்டிக் காட்டியிருந்தது. இந்நோய் ஆரோக்கியம் மற்றும் உழைக்கும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

ஆற்றல் என்பவற்றின் மீது நிர்ணயகரமான தாக்கங்களை எடுத்துவருவது மட்டுமன்றி, புதிதாக பிறக்கும் குழந்தைகளின் குறைந்த எடை அளவுகளுடனும் பெருமளவுக்குச் சம்பந்தப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிடப்பட்ட கொள்கை திட்டமிடல் அமைச்சின் ஆய்வின் படி, பிறக்கும் குழந்தைகளில் சுமார் 70 சதவீதத்தினர் மட்டுமே சாதாரண எடையை கொண்டிருந்தனர். சுமார் 17 சதவீதமான குழந்தைகளின் எடை (2.5 கி.கி.முக்கு) குறைவானதாக இருந்தது. மேலும் 13 சதவீதமான குழந்தைகளின் பிறப்பின் எடையளவு தெரியவில்லை. தென் மாகாணத்திலும் பெரும்பாலான கிராமப் புறங்களிலும் குறைந்த பிறப்பு எடை விகிதங்கள் பெருமளவுக்கு காணப்பட்டன. 3 வயதுக்கும் 59 மாதங் களுக்குமிடைப்பட்ட 35 சதவீதமான குழந்தைகள், வயது தொடர்பாக குறைந்த எடையை கொண்டிருந்தனர் என இதே ஆய்வு தெரிவிக்கின்றது. நாட்பட்ட போசாக்கின்மை இதற்குக் காரணமாக இருந்திருக்க முடியும். இலங்கையில் ஒவ்வொரு மூன்று குழந்தைகளிலும் ஒரு குழந்தை குறைந்த எடையைக் கொண்டுள்ளது என்பதனையே இது காட்டுகின்றது.

## சுகாதார பராமரிப்பின் மீதான நெருக்குதல்கள்

அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் செயற்பட்டு வரும் பெருந்தொகையான நிறுவனங்கள், மேலைத்தேச மருத்துவம், ஆயுள்வேத மருத்துவம், அலோபதி மற்றும் ஹோமியோபதி மருத்துவம் போன்ற பல்வேறு மருத்துவ முறைகளையும் உள்ளடக்கிய சிகிச்சையை வழங்கி வருகின்றன. விசேஷ மருத்துவ சேவைகளைக் கொண்டிருக்கும் மருத்துவ மனைகள், மாவட்ட மருத்துவ மனைகள், கிராமிய மருத்துவ மனைகள், மத்திய மருந்தகங்கள் மற்றும் மகப்பேற்று நிலையங்கள் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன. மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதனையடுத்து, மாகாண மருத்துவமனைகளின் முகாமை, மாகாண சுகாதார அமைச்சரின் பொறுப்பாக இருந்து வருகின்றது.

சிகிச்சை மருத்துவத்தைப் பொறுத்தவரையில், 1992இல் நாட்டில் மொத்தம் 841 மேலைத்தேச மருத்துவ முறையைக் கொண்ட மருத்துவ மனைகள் செயற்பட்டு வந்தன. இவற்றுள் 498 மருத்துவ மனைகள், நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் வசதிகளைக் கொண்டிருந்ததுடன், அவற்றில் மொத்தம் 48,061 கட்டில்கள் இருந்தன. 1,000 குடித்தொகையினருக்கான மருத்துவ மனைக் கட்டில்களின் விகிதம் 2.8 ஆகும். 1965 இல் உள் நோயாளர்களுக்கென மொத்தம் 35,167 கட்டில் வசதிகள் இருந்து வந்தன. இது 1,000 குடித்தொகையினருக்கு 3.2 விகித மானதாகக் காணப்பட்டது. அரசாங்கம் 1992 இல் சுகாதார சேவைகளுக்காக 696.7 கோடி ரூபாவை (மொத்த செலவினத்தின் 4.6 சதவீதத்தை) செலவிட்டது. இது முன்னைய வருடத்தின் அளவைப் பார்க்கிலும் 28 சதவீதம் உயர்வானதாக இருந்தது. இந்த மருத்துவ மனைகளில் பணிபுரியும் 2,065 மருத்துவ அதிகாரிகளினால் இந்நிறுவனங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் தடுப்பு/பொதுச் சுகாதார பராமரிப்பு நிலையங்களின் பிரதான பணிகள் வருமாறு: தொற்று நோய்களை கட்டுப்படுத்துதல், பொதுச் சுகாதாரம், பள்ளிச் சிறுவர் சுகாதாரம், கொள்ளைநோய் கண்காணிப்பு, குடும்ப சுகாதாரக் கல்வி மற்றும் உணவு சட்டத்தை செயற்படுத்துதல். 1992 இல் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் தலைமையின் கீழ் செயற்பட்டு வந்த 182 சுகாதார அலகுகளினால் இச்சேவைகள் வழங்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு சுகாதார அலகிலும், சுகாதார வைத்திய அதிகாரிக்கு பொது சுகாதார பரிசோதகர்களும், பொது சுகாதார மருத்துவிச்சிகளும், பொதுச் சுகாதார மேற்பார்வை மருத்துவிச்சிகளும் உதவி வருகின்றனர். பொதுச் சுகாதாரத் துறையில் அடிமட்டத்தில் பணிபுரிந்து வருபவர் பொதுச் சுகாதார மருத்துவிச்சியாவார். தற்பொழுது இவர்களுடைய தேசிய விகிதம் 100,000 குடித்தொகையினருக்கு 24 ஆக இருந்து வருகின்றது. 2000 ஆவது ஆண்டளவில் 3000 குடித்தொகையினருக்கு ஒரு மருத்துவிச்சி வீதம் வழங்கப்பட்டு வர வேண்டும் என திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருத்துவிச்சிகள் பிரதானமாக தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் சுகாதார சேவைகளை வழங்கிவருவதுடன், வீடுகளுக்குச் சென்றும் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர். இவர்கள் மருந்தகத்துக்கும் சமூகத்துக்குமிடையிலான பிணைப்புச் சங்கிலியாக செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் பிரவசத்துக்கு முன்னரான சேவைகள், பிரவசத்தின் போதான சேவைகள், பிவசவத்துக்குப் பின்னரான சேவைகள், ஆறு பொதுவான சிறுவர் நோய்களுக்கெதிரான தடுப்பூசி ஏற்றல், குழந்தைகளை வளர்ச்சி, அபிவிருத்தி, போஷாக்கு அடிப்படையில் கண்காணித்தல், பிள்ளைகளின் மனநலம் மற்றும் குடும்பத் திட்டமிடல் போன்ற பரந்த வீச்சிலான சேவைகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த காலத்தில் சுகாதார மருத்துவ சேவைகளுக்கான கேள்வி பெருமளவுக்கு அதிகரித்து வந்தது: அரசாங்கத்தின் சுகாதார மருத்துவ வசதிகளினால் இத்தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியாதிருந்தமையால், நாட்டில் தனியார் மருத்துவ மனைகள் பெருகத் தொடங்கின. அதனுடன் இணைந்த விதத்தில் தனியார் துறையின் சுகாதாரத்துறை தொடர்பான செலவுகளும் அதிகரித்தன. இலங்கையில் 1991 இல் 1825 கட்டில் வசதிகளைக் கொண்ட 85 தனியார் மருத்துவமனைகள் இயங்கி வந்தன. 1992 இல் இவற்றின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்திருந்தது: இவற்றில் 35 மருத்துவமனைகள் கொழும்பில் அமைந்திருந்தன. பொது சுகாதார சேவைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை, போதியளவில் மருந்துகள் மற்றும் வசதிகள் கிடைக்காதிருத்தல் போன்ற பலவீனங்கள் நிலவி வருவதனால், பொதுவாக தனியார் துறை மருத்துவ சேவைகளுக்கான கேள்வி துரிதமாக அதிகரித்து வருகின்றது.

இலங்கையில் சுகாதார சேவைகளுக்கான ஒட்டுமொத்த கேள்வி, பல்வேறு காரணங்களின் நிமித்தம் அதிகரித்து வரும் ஒரு போக்கினைக் காட்டுகிறது. மொத்த குடித்தொகையும், (60 வயதுக்கு மேற்பட்ட) வயது முதிர்ந்தோர் தொகையும் அதிகரித்து வருதல், மருத்துவ காப்புறுதித் திட்டங்களின் பெருக்கம், (குறிப்பாக சிறுவர் தொடர்பாக) மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் அக்கறை அதிகரித்து வருதல், கர்ப்ப காலத்திலும் பிரசவ காலத்திலும் வைத்திய நிபுணர்களை கலந்தாலோசிக்கும் பழக்கம் அதிகரித்து வருதல், கைத்தொழில்/வீதி விபத்துக்களும் தொழில்சார் அபாயங்களும் பெருகி வருதல், நஞ்சூட்டல் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பவற்றின்

பெருக்கம் ஆகியன இதற்குப் பங்களிப்புச் செய்திருக்க முடியும்.

இலங்கையில், இறுதியாக 1981 இல் குடித்தொகை கணிப்பு நடத்தப்பட்டது: இதன்படி, நாட்டின் மொத்தக் குடித்தொகை 1 கோடியே 48 இலட்சமாக இருந்தது. நாட்டின் முதலாவது குடித்தொகைக் கணிப்பில் (1871) பதிவு செய்யப்பட்டிருந்த குடித்தொகையிலும் (24 இலட்சம்) பார்க்க இது ஆறு மடங்கு அதிகமானதாகும். குடித்தொகைப் பெருக்கததுடன் இணைந்த விதத்தில் சமூகத்தில் வயது முதிர்ந்தவர்களின் விகிதாசாரமும் அதிகரித்து வந்தமையால் சுகாதார பராமரிப்புக்கான கேள்வி தூண்டி விடப்பட்டது. 1946 இல் மொத்த குடித்தொகையில் 5 சதவீதத்தினராக இருந்து வந்த வயது முதிர்ந்தோர் 1991 இல் 8 சதவீதத்தினராக அதிகரித்திருந்தனர். 2031 ஆம் ஆண்டளவில் நாட்டின் குடித்தொகையில், நான்கில் ஒரு பங்குக்கும் மேற்பட்டவர்கள் வயது முதிர்ந்தவர்களாக (அதாவது, 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக) இருந்து வருவார்கள். வயது முதிர்ந்தோரின் எண்ணிக்கை 1946 இல் 360,000 ஆக இருந்து, 1991 இல் 1,400,000 ஆக அதிகரித்திருந்தது.

வயது முதிர்ந்தோரின் ஆயுட்காலம் நீடிக்கப்படுவதுடன் இணைந்த வகையில், குறிப்பிட்ட சில நாட்பட்ட நோய்களின் நிகழ்வுகளும் அதிகரிக்க முடியும். எனவே, இலங்கையில், ஒட்டுமொத்த மரண விகித வீழ்ச்சியும், கணிசமான அளவில் நோய்வாய்ப்படும் தன்மையும் ஒரே நேரத்தில் நிலவிவரும் ஒரு நிலைமையை காணக் கூடியதாக உள்ளது. இந்த நோய்கள் பெருமளவுக்கு வறுமையுடன் சம்பந்தப் பட்டவையாகவே இருந்து வருகின்றன (டி சில்வா, 1994). ஆஸ்துமா, வாதம், வயோதிபர் புற்று நோய் போன்றவற்றுக்கு நவீன உபகரணங்களும், நீண்ட நாள் சிகிச்சையும், புனர்வாழ்வு முயற்சிகளும் அவசியமாகும். இவற்றுக்காக பாரிய அளவில் மூலவளங்களை ஒதுக்குவதில் நாடு பல இடையூறுகளை எதிர்கொள்ள முடியும்.

சுற்றுலாத்துறை மிக முக்கியமான உற்பத்தித் துறையொன்றாக வளர்ச்சி கண்டு வந்திருக்க முடியும் என்பதனை இந்தப் போக்குகள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை அரசாங்கம், 1992 இல் சுற்றுலா அபிவிருத்தி குறித்த பெருந்திட்டமொன்றை வகுத்தது. இப்பொழுது இச்செய்திடம் அமுலாக்கல் படிமுறையில் இருந்து வருகின்றது.

முடிவுரை

சுற்றுலாக் கைத்தொழில் அந்நியச் செலாவணி சம்பாத்தியங்கள், வேலை வாய்ப்புக்கள், அரசாங்க வருவாய் மற்றும் இணைப்புக்கள்/பெருக்கல் காரணிகள் என்பவற்றுக்கூடாக, இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு கணிசமான அளவிலான பங்களிப்புக்களை வழங்கி வந்துள்ளது. 1983 தொடக்கம் 1989 வரையிலான காலப்பகுதியில் பல தற்காலிக பின்னடைவுகள் ஏற்பட்டு வந்துள்ள போதிலும், அது இப்பங்களிப்பினை வழங்கி வந்துள்ளது. இக் கைத்தொழிலுக்கான உலக சூழ்நிலை இப்பொழுது மிகவும் பிரகாசமானதாக இருந்து வருகின்றது. இந்த நிலையில், சுற்றுலாக் கைத்தொழில் துறை ஒரு கட்புலனாகாத ஏற்றுமதித் துறை என்ற முறையில், ஏற்றுமதி மேம்பாட்டுக் கூடாக வளர்ச்சியை எடுத்து வரும் தற்போதைய உத்திக்கு மிகவும் தாக்கமான முறையில் பங்களிப்பினை வழங்கி வரக்கூடிய அனைத்து வாய்ப்புக்களும் தென்படுகின்றன. எனினும், சுற்றுலாத்துறை சமூக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் விரும்பத்தகாத பல விளைவுகளை எடுத்துவரக் கூடியதாக இருந்து வருவதனால், இந்த விடயங்களில் போதியளவில் அக்கறை காட்டப்படுதல் வேண்டும். மேலும், சுற்றுச்சூழல் தொடர்பான தாக்கங்களையும் போதியளவுக்கு நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி, இதுவரை காலமும் போதிய கவனத்தை பெற்று வராதிருந்த உள்நாட்டு சுற்றுலாத்துறை குறித்தும் போதியளவில் அக்கறை செலுத்தப்படுதல் அவசியமாகும்.

( 16 ம் பக்கத் தொடர்ச்சி)

1992 இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை 400,000 ஆக அதிகரித்தது. நாட்டில் 1983 தொடக்கம் 1989 வரையில் கலவர நிலைமைகள் இடம் பெறாதிருந்தால்,

( 17 ம் பக்கத் தொடர்ச்சி)

கலாச்சார சுற்றுலாத் துறையின் நன்மைகளுடன் இணைந்தவிதத்தில், அதன் சீர்குலைவு அம்சங்களும் இருந்து வருகின்றன. எனவே, இலங்கையின் கலாச்சார முக்கோணப் பிரதேசத்தில் அமைந்துள்ள உலகின் பாரம்பரிய நினைவுச் சின்னங்களை மிதமிஞ்சிய உபயோகத்திலிருந்தும், கலைப்பற்றற்றவர்களின் அழிவு வேலைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளது. சுற்றுலாத்துறை, 21ஆம் நூற்றாண்டில் மிகமுக்கியமான அன்றாட நடவடிக்கைத் துறையொன்றாக வளர்ச்சியடைந்து வரக்கூடிய ஒரு துறையாக இருந்து வருவதனால், நினைவுச் சின்னங்களை பாதுகாத்துக் கொள்ளும் விஷயத்தில் அது கணிசமான அளவிலான தாக்கங்களை எடுதததுவர முடியும். மனிதசுவாசக் காற்றின் விளைவாக ஈரத்தன்மை அதிகரித்திருந்த காரணத்தினால் லஸ்கோஸ் குகைகள் பொது மக்களின் பார்வைக்கென மூடப் படடன. தம்புள்ளையில் ஒவ்வொரு பொசன் போயாவுக்குப் பிறகும், மிதமிஞ்சிய சூட்டினால் பிளாஸ்தர் பூச்சுக்கள் ஒரு சில அங்குலங்கள் கழன்று விடுகின்றன. சிகிரியாவுக்கு நாளொன்றுக்கு சுமார் 51,000 சுற்றுப்பயணிகள் வருகின்றார்கள். அந்த கல்லணைக்கல் படிவுகளை 102,000 பாதங்கள் நாளொன்றுக்குக் கடந்து செல்கின்றன என்பதே இதன் பொருளாகும். இது உண்மையிலேயே சிகிரியாவின் கொள் திறனிலும் பார்க்க மிதமிஞ்சிய ஒரு சுமையாகவே உள்ளது. உலகின் பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் பயணிகளின் நடமாட்டத்தினையும் செறிவினையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டிய உடனடித் தேவையை இவை சுட்டிக்காட்டுகின்றன.

இன்னமும் கூட, சில பொருளியலாளர்கள் கலாச்சார சுற்றுலாத்துறையின் இந்தத் தாக்கங்கள் குறித்து அதிகளவில் கவனம் செலுத்தத் தொடங்கவில்லை. அவர்களுடைய நிதி தொடர்பான திட்டங்களில், கலாச்சார சுற்றுலாத் துறையை ஓர் அபிவிருத்தித் துறையாகவே அவர்கள் குறிப்பிட்டு வருகின்றார்கள். கலாச்சாரம், அடிப்பாகம் தென்படாத ஒரு பாதாளமாக நோக்கப்படுகின்றது: திறைசேரியின் நிதி வளங்களை அதற்குள் முடிவில்லாமல் கொட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற வகையிலும் ஒரு கருத்து நிலவி வருகின்றது. இது ஒரு தவறான எண்ணப் போக்காகும். மாறாக, கலாச்சாரத் துறை என்பது, இனிமேல் தான் தோண்ட வேண்டியிருக்கும் ஒரு தங்கச் சுரங்கமாக இருந்து வருகின்றது.

PRINTED BY SUMATHI BOOK PRINTING (PVT) LIMITED

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு பெற்றுள்ளது. பதிவு எண் : QD/46/News/94


# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த பத்தொன்பது வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- பொருளாதார மந்தம்
- மனித மூலவள அபிவிருத்தி
- இலங்கையின் பொருளாதாரம்
- இலங்கையில் தனியார் டியுசன் முறை

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதி விலை : ரூ. 10/- ஆண்டு சந்தா : ரூ.120/-**
**ஆண்டு சந்தா (வெளிநாடு) :**

தென்னாசியா - US$ 24
தென்கிழக்காசியா/ஆபிரிக்கா - US$ 27
ஜப்பான் - US$ 30
உலகின் ஏனைய பாகங்கள் - US$ 33

காசோலைகள்/காசுக்கட்டளைகள் *"People's Bank Economic Review"* என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் :

**ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,**
**மக்கள் வங்கித் தலைமையலுவலகம், கொழும்பு 2.**
தொலைபேசி: 327082, 436940,

**பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்**
**ஒரு சமூகப் பணித்திட்டம்**


**பிரதி விலை : ரூ.10/-**

**உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.**